தமிழர்தம்

# உலக வேதமும் புனித ஞானியும்



கலாநிதி ஜெ.குமாரசுவாமி

தமிழுர்தம்

# உலக வேதமும் புனித ஞானியும்

கலாநிதி ஜெ. குமாரசுவாமி

# Doctrine of the Tamil Saint

**(Science & spiritualism)**

Dr.J.Kumaraswamy

**மகரிஷி பதிப்பகம்**
41/24, பாரதி ஒழுங்கை
செம்மணி வீதி, நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம், இலங்கை
தொ.பே. :- 0773629781, 0778110305

நூல் :- தமிழர்தம் உலக வேதமும் புனித ஞானியும்

ஆசிரியர் :- கலாநிதி ஜெ.குமாரசுவாமி (கவிவேழம் பாரதிபாலன்)

Dr.J.Kumaraswamy
General Secretary,Global Tamil Literary Consortium
41/24, Bharathi Lane,
Chemmani Road, Nayanmaarkaddu
Jaffna, Sri Lanka.

## நூல் விபரம்

மொழி :- தமிழ்

பொருள் :- அறிவியல் ஆன்மிக ஆய்வு

பக்கம் :- 112


பதிப்பு :- கார்த்திகை 2019

விலை :- ரூபா : 450.00

ISBN No :- 978-955-7546-01-8

அச்சாக்கம் :- அன்றா அச்சகம், யாழ்ப்பாணம்
Andra Printers, Jaffna, Sri Lanka

Publisher :- Maharishi Publications
Nallur.



# சமர்ப்பணம்

மனம்,மொழி, மெய் எனத் தூய்மை துலங்கி
நல்லூரில் தோன்றி கொடிகாமம் வாழ்ந்து
புனித திருக்குறள் பாதையில் நடந்து
அறிவியல் ஆன்மிக உறவில் உலவி
அமரம் எய்திய நடராஜா பாஸ்கரன்
இனிய நட்பிற்கு இந்நூல் சமர்ப்பணம்.

## உள்ளே...


1. பதிப்புரை ................................................ vii
2. ஆசியுரை ................................................ ix
3. விதந்துரை................................................ xi
4. தேடுதலும் தேறுதலும்.. ................................................ 1-5
5. இயற்கையே ஆசான்................................................ 5-7
6. குடிநீர் ஆகாரம் ................................................ 7-8
7. வேட்டைக் கண்ணிகள் ................................................ 8-9
8. உடல் மறைப்பு................................................ 9
9. பயிர் வளர்ப்பு ................................................ 9-11
10. உணவுப் பாத்திரங்கள் ................................................ 11-12
11. உறையுள் ................................................ 12
12. உடை ................................................ 12-15
13. நாகரிக பண்பாட்டுப் பெருங்குடிகள் ................................................ 15-16
14. உலோக காலமும் நாணய பிரயோகமும்................................................ 16-18
15. உற்பத்திப் பேரால் ஊதியம்................................................ 18-19
16. பெரு வணிகம்................................................ 19
17. தொழில் முறை ஆசான்கள் ................................................ 19-20
18. தொழில் முறைக் குலதெய்வ மரபு................................................ 20-21
19. தமிழர்தம் தாய் தந்தைத் தலைமை ................................................ 21-23
20. தமிழர்தம் தொழில் முறையில் சாதியம் ................................................ 23-27
21. அவைதிக கந்தனும் வைதிக கந்தனும்................................................ 27-30
22. தேவர் உலக தொழில் மேதைகள் ................................................ 30-32
23. ஒருங்கிணையாத வேற்றுமை உறவு ................................................ 32-33
24. தட்ப வெப்ப சூழ்நிலையும் பண்பாட்டு நாகரிகமும் ................................................ 33-34
25. பிற கிரகவாசிகளால் மனித உலகு? ................................................ 34-36
26. மானிடவியல் தமிழர் ................................................ 36
27. மனிதப் பிளவுகள் உலக மதங்களில்................................................ 37-39
28. அறிவியல் சந்ததியும் ஆண்டவர் மறுப்புக் கொள்கையும் ................................................ 39-40
29. மதக் கூண்டில் உலகம் ................................................ 40-43
30. இறைவன் வழிபாட்டில் இன்றைய விஞ்ஞானம் ................................................ 43-44

31. மொழிவழி ஐம்பூத உறவு .................................................... 45
32. புனித திருக்குறள் வேதம் .................................................... 45-46
33. தமிழர்தம் ஏழு இலக்க மந்திரமும் எழு பிறப்பும்........................ 46-48
34. தமிழர்தம் சமரச உலக வேதம் .................................................... 48-49
35. தமிழர்தம் புனித திருக்குறளில் உலகின் முதல் மனிதன்............ 49-51
36. சமரச ஞானம் .................................................... 51-55
37. குறள் என்ன என்பது. .................................................... 55
38. போலி மைப் பூசனை.................................................... 56-57
39. தமிழர்தம் தொல் இலக்கணத்தில் மறைநூல்............................ 57
40. அழகியலும் ஆன்மிகமும் .................................................... 58-59
41. இறைமொழி .................................................... 59-60
42. புனித திருமந்திரமும் புனித திருக்குறளும் .............................. 61-64
43. தமிழர்தம் நடைமுறை உலக வேதம் .............................. 64-66
44. பிற மதங்களில் தமிழர் புனித வேதம் .............................. 66
45. சமணத்தில் புனித திருக்குறள் .................................................... 66-70
46. சமணர்தம் யாழ்ப்பாணம் .................................................... 70-76
47. கௌபீன கந்தன் .................................................... 76-77
48. தமிழ்க் கந்தக் கடவுள் .................................................... 77-80
49. புத்த மதத்தில் புனித திருக்குறள்.................................................... 80-81
50. சர்வமத ஐக்கியம் .................................................... 81-82
51. ஐம்பூத இயக்கம் .................................................... 82-83
52. தமிழர்தம் புனித வேதம் .................................................... 83-84
53. தமிழர்தம் புனித திருக்குறள் உலக வேதமே .............................. 84-86
54. உலகப் பொதுமறை புனித திருக்குறளா? .............................. 86
55. அமெரிக்காவின் பக்கத்துணை .................................................... 87
56. தமிழர்தம் புனித திருக்குறள் உலக வேதமா?.............................. 88
57. புனித வேத எண்கள் .................................................... 88-89
58. தமிழர்தம் புனித வேதத்தில் ஐம்பூதங்களும் ஐம்புலன்களும் ...... 90
59. ஒன்றே குலம் ஒருவனே தேவன் .................................................... 90
60. ஐம்பூத ஐம்புல ஐக்கியம் .................................................... 91-92
61. முடிப்பியம் .................................................... 93
62. ஆதார குறிப்புகள் .................................................... 94-99

## பதிப்புரை

தமிழர்தம் உலக வேதமும் புனித ஞானியும் எனும் இந்த ஆன்மிக ஆய்வு நூல் தமிழிலே வெளிவரும் அற்புதப் படைப்பாகும்.

அனைத்துலகும் ஒப்பற்ற நூலெனப் போற்றும் புனித திருக்குறளை தமிழர் தங்கள் புனித வேதமாக ஏற்கவும், அப் புனித மறை தந்த ஞானியின் பின்னணியைத் தமிழர் உரிய முறையிலே இனங்காணவும் அறிவியல் ஆன்மிகக் கண்கொண்ட ஆய்வாக இந்நூல் உருவாக்கப்பெற்றுள்ளது.

உலக உறவுகளை தமது உறவென தமிழர் அரவணைத்து ஏற்க இந்நூலினை உருவாக்கியுள்ள கலாநிதி ஜெயக்குமார் குமாரசுவாமி அவர்கள் கவிவேழம் பாரதிபாலன் எனும் புனைபெயரிலும் இலக்கிய உலகிற்குப் பிரபல்யமானவர். நூலாசிரியரை 2005இல் கனேடிய தமிழுலகம் இந்தியா இளம்பிறை பதிப்பகத்தில் வெளியான அவரது சமரசபூமி அறிமுக விழா கனடாவில் இடம்பெற்ற போது, "பல்கலை ஞானி" என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்து இருப்பதெல்லாம் இவரது ஆளுமையின் பெறுபேறு குறித்தே.

இவர் முன்னர் வெளியிட்ட அறிவியல் நாவலான சமரச பூமி அரங்கேற்றம் 2004இல் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க 09ஆவது அனைத்துலக மாநாடு இந்தியா புதுச்சேரி ஆந்திரமகாசபா மண்டபத்தில் ஐ.நா.சபையின் கூரியர் தமிழ் பிரிவுக்குப் பொறுப்பான அறிவியல் தமிழ்த்தந்தை பேராசிரியர் மணவை முஸ்தபா அவர்களால் வெளியீடு செய்து வைக்கப்பெற்ற போது, தமிழகத்து பேராசிரியர்கள் அறிஞர்களால் தங்களுக்கு தெரியாத பல செய்திகளை மேற்படி நாவலில் வரும் ஆய்வுகள் கொண்டிருக்கிறது எனக் குறிப்பிட்டதோடு, இந்நாளைய அறிவுலகத்தின் தேடுதலற்ற ஆய்வு முறைகள் பற்றியும் சிலாகிக்கப்பெற்று அற்புத படைப்பு எனப் போற்றப்பெற்றது. 20.05.2005இல் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திலும், அது தொடர்ந்து கனடாவில் புகழ் பெற்ற மக்களவை எனும் சிவிக்ஸ் சென்ரரிலும், மொன்றியல் தமிழர் ஒளி அரங்கிலும் அறிமுக விழாக் கண்டு பலரதும் பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்டது. இந்நூல் தமிழ்நாடு சென்னைப் பல்கலைக்கழகத்திலும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் கலாநிதிப்பட்ட ஆய்விற்குப் பயன்படுத்தப் பெற்றது.

2012-ம், 2014-ம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ் மாணவர்களது எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு எமது மகரிஷி பதிப்பகம் யாழ்ப்பாணம்

அன்னை அச்சகத்திலும், அன்றா அச்சகத்திலும் உருவான 'புதிதாய் ஓர் உலகம், மற்றும் உலக காவியம் ஆகிய இரு நூல்களும் பாடசாலை மாணவருக்கான மேலதிக வாசனை நூலாகக் கல்விச்சாலை நூலகங்களில் இடம்பெற இலங்கை அரசின் கல்வித் திணைக்களம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அந்தவொரு பின்னணியிலே தமிழர்தம் உலக வேதமும் புனித ஞானியும்" எனும் இந்த அறிவியல் ஆன்மிக ஆய்வு நூல் தமிழரது பரந்து பட்ட அறிவு அவர்கள் பின்பற்றும் ஆன்மிகப் பாதையின் சீராக்கத்திலேயே தங்கியுள்ளது என்பதை மையமாகக் கொண்டது. எதிர்காலத் தமிழ்ச் சமூக நலனை முன்மாதிரியாக வைத்து பின்னப் பெற்ற அறிவியல் ஆன்மிக நூலாகவே இது பரிணமித்துள்ளது.

ஆரம்ப மனித காட்டுமிராண்டிய தோற்ற வாழ்வு முறைமையிலிருந்து பண்பாடு நாகரிகப் பாதையிலே பயணித்துச் செல்லும் மனித குல மேம்பாட்டு ஆய்வுகளாக தமிழர்தம் உலக வேதமான புனித திருக்குறள் சாராம்ச விரிவாக்க ஆய்வுகள் தமிழர்தம் உறவுக்கும் அனைத்து உலக மாந்தரது அரவணைப்பிற்கும் வழிகோல வல்லது.

தமிழர் வேதமாக ஏற்கவல்ல இந்நூல் தரும் நீண்ட முகப்பு அலங்காரம் புனித திருக்குறளை உரிய முறையிலே உள்வாங்கிய வரலாறுகளாய் நிமிர்ந்து மனிதனின் ஆரம்ப தோற்ற இயற்கை அனுபவ வழிபாட்டு முறைமையே இன்றைய நாகரிக உச்சியில் மீளவும் ஆரம்ப தோற்றம் பால் நகர்வதை இனங்காட்டுகின்றது. அது, அனைவரையும் தட்டி எழுப்ப ஐம்பூதங்கள், ஐம்புலன்களில் மனிதன் உள்ளிட்ட உயிர்களின் ஊசலாட்டம் மேற்படி நூலின் முடிப்பியத்தில் உரிய முறையிலே புனித வேத குறட்பாக்களால் அலங்காரம் பெறுகின்றது.

தமிழர் உள்ளிட்ட உலக சமுதாயத்தில் இதுவரை படிந்த கறைகள் விலகி உலகம் புத்தெழுச்சி பெற இத்தகைய நூல்களே வகை செய்யும்.

இது தொடர்ந்து புனித திருக்குறளின் ஏனைய தொடர் சம்பவ குறட்பாக்கள் பற்றிய ஆய்வுகளை கலாநிதி ஜெயக்குமார் குமாரசுவாமி அவர்கள் மகரிஷி பதிப்பகத்தின் ஊடாக தொடர்ந்து பல பாகங்களாக வெளியிடவுள்ளார்.

**'மெல்லத் தமிழினி வாழும்'**

**–பதிப்பகத்தார்–**

## ஆசியுரை

### பூமிப்பந்தில் ஒரு புதிய நூல்

**பூ**மிப் பந்தில் வருடம் தோறும் எண்ணற்ற நூல்கள் தோன்றுகின்றன. ஆனால் காலத்தை வென்று ஒரு சில நூல்களே நிற்கின்றன.

காலத்தை வென்ற ஒவ்வொரு நூலுக்கும் பின்னால் கடினமான உழைப்பிருந்ததைப் படிக்கும்போது புரிந்து கொள்கிறோம்.

சிலர் ஒரு நூலை உருவாக்கவே பல்லாயிரம் நூல்களைப் படிக்கிறார்கள்.

இன்னொரு சாராரோ கற்க வேண்டியவைகளைக் கற்ற பின்னதாக நூல்களை எழுதத் தொடங்குகிறார்கள்.

அந்த வகையில் அருமை நண்பர் கவிவேழம் பாரதிபாலன் (கலாநிதி ஜெயக்குமார் குமாரசுவாமி) இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்.

'கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என்று சொன்ன ஞானியை எழுதுவதற்காக இனி கற்க முடியாது.

துறைபோகக் கற்றபின் எழுதப்பட வேண்டியதே திருக்குறளாசானின் ஆளுமை.

அவரை எழுத அறிவியலில் ஆழமும், கூடவே ஆன்மிக ஞானமும் வேண்டும்.

இவை இரண்டும் கைவரப் பெற்ற படைப்பாளி கவிவேழம் பாரதிபாலன் என்றால் அது மிகைக் கூற்றல்ல.

'தமிழர்தம் உலக வேதமும் புனித ஞானியும்' என்ற தலைப்பில் அவர் வெளியிடும் அறிவியல் ஆன்மிக ஆய்வு நூல் இதோ உங்கள் கைகளில் தவழ்கிறது.

ஏதோ ஒரு பாக்கியம் செய்த காரணத்தினால் தான் உங்கள் கைகளுக்கு வந்திருக்கிறது என்று நினைத்துக் கொள்ளுங்கள். அவர் அருள் பெற்ற படைப்பாளி. அவர் தாயகத்தில் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற எழுத்தாளர்.

டென்மார்க்கில் அவருடன் பழக எனக்கும் நிறைய வாய்ப்புக்கள் கிடைத்தன.

அத்தருணம் அவருடைய பரந்த ஞானத்தையும், ஆழமான பார்வையையும் அறிந்து ஆச்சரியப்பட்டுள்ளேன்.

தினம் தேடலும், குருபக்தியும் கொண்டு தனது குருவின் வழிகாட்டலை என்றும் பேசியபடி குரு பக்தியுடனேயே அவர் வாழ்ந்துவருவதையும் கண்டு ஆச்சரியமடைந்தேன்.

டென்மார்க்கில் நடைபெற்ற முத்தமிழ் விழாக்களிலே அவருடைய கவியரங்கக் கவிதைகளின் ஆழம் கவிதை நூல்களிலே பழமை புதுமையை விட வேகமாக மோதி, புதிய புதிய பட்டாடைகளாக பறக்கக் கண்டு ஆனந்தமடைந்தேன்.

மிகச் சிறந்த ஒரு படைப்பாளியின் உலகப் புகழ் பெறப்போகும் ஒரு நூலின் வாயிலோரமாக நின்று வாழ்த்துவதற்கு எனக்கும் வாய்ப்பளித்தது பெருமை தருகிறது.

திருவள்ளுவருக்கு மகிழ்வும் பெருமையும் தரும் ஒரு படைப்பு வெளிவர திருவருள் கைகூடியுள்ள இந்தத் தருணத்தை இருகரம் கூப்பி வரவேற்கிறேன்.

நூலாசிரியரின் மிகச் சிறந்த ஆளுமை அவருடைய படைப்பில்.

அதை நீங்கள் காண்பீர்கள்.

இந்த நூலோடு சம்பந்தப்பட்ட அனைத்து உள்ளங்களுக்கும் எனது நல்லாசிகள்.

**கி.செ.துரை(கலைமாணி)**
**உலக செய்தியாளர்,**
**டென்மார்க்**
**29.10.2019**

## விதந்துரை

(சி. வை. தாமோதரம்பிள்ளை நற்பணி மன்றம்)

உலகெங்கும் தமிழர் வாழும் இடமெல்லாம் ஆன்மநேயம் தழைக்க வேண்டும். மானிட குலமே ஒருமைப்பட வேண்டும். "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற வேதவாக்கு வையத்தில் வாழ்வாங்கு வாழும் மனிதரிடையே ஓங்கி ஒலிக்க வேண்டும். அதுவே நிலையான தாரக மந்திரமாக மாற, திருக்குறள் என்ற உலக வேதமும், தெய்வப் புலமைத் திருவள்ளுவர் என்ற ஞானியும் உலகு உள்ளளவும் போற்றப்படவேண்டும். 'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாள்' என்று உலகமே அன்பில் செழித்தோங்க வேண்டும்.

கவிவேழம் பாரதிபாலன் எனும் புனைபெயர் கொண்ட கலாநிதி ஜெயக்குமார் குமாரசுவாமி தமது மனம், வாக்கு, காயங்களால் வள்ளுவர் வழி நின்று தெள்ளு தமிழ் குறட்பாக்களை அது எழுந்த சூழலை நன்கு ஆய்ந்து திறனாய்வு ரீதியில் பிற இலக்கியங்களோடும் ஒப்பீடு செய்து 'தமிழர்தம் உலக வேதமும் புனித ஞானியும்' எனும் தனது புதிய ஆய்வுப் படைப்பை ஆக்கியுள்ளார்.

ஏற்கனவே அவர் எழுதிய இலக்கியப் படைப்புக்கள் பல அறிஞர்களால் கனடா, டென்மார்க், இலண்டன், தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளில் பலத்த பாராட்டுதல்களையும், விருதுகளையும் பெற்றுள்ளன.

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் தனது 1330 குறட்பாக்களிலும் கூறிய சாராம்சமான சீரிய கருத்துக்கள் பல உள்ளன.

சமரசநோக்கு, மானிடநேயம், அன்பு, அறன், பண்பு, பயன் அனைத்துமே ஜெயக்குமார் குமாரசுவாமியை தலைசிறந்த ஊடகவியலாளராக, எழுத்தாளராக உயர்த்தி நிற்கின்றது.

மனித வரலாற்றுக் காலம் தொடக்கம் ஏற்பட்ட நாகரிக வளர்ச்சி நிலையின் முதிர்ச்சியான புனித திருக்குறளை, அதன் சிறப்பை நிரூபிக்க முனைகின்றார்.

உலக வேதமாக உயர்ந்து நிற்கும் புனித திருக்குறளை தமிழின் தொன்மையான ஆன்மிக இலக்கியமான திருமூலர் திருமந்திரத்தில் போற்றும் அன்புடைமை ஒருமைப்பாடு முதலிய புனிதமான கருத்துக்களோடு திறனாய்வு ரீதியில் வலியுறுத்துகின்றார்.

'நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப' என்ற தொல்காப்பிய சூத்திரத்துடன் நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறை மொழி காட்டிவிடும் என்பதாய் உலக வேதமாகிய தமிழர்தம் புனித திருக்குறளுக்கும், திருவள்ளுவ ஞானிக்கும் இந்நூல் பெருமை சேர்க்கின்றது. அவற்றைச் சிறந்த ஆன்மிக சிந்தனைகளாகத் தந்து நிற்கும் கலாநிதி ஜெயக்குமார் குமாரசுவாமிக்கு எனது பணிவான பாராட்டுக்கள், வாழ்த்துக்கள் வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

ஈழத்தில் ஆங்கிலேயக் கொலனியர் ஆட்சியில் தமிழ்நாடு சென்று உயர்ந்து தமிழிற்குச் சிறப்புச் சேர்த்த எமது ஈழ நாட்டுத் தமிழறிஞரை மீளவும் உலகிற்கு இனங்காட்ட எழுந்ததே 'சி.வை.தாமோதரம்பிள்ளை நற்பணி மன்றம்.' அப் பெரியார் பிறந்த இடமான சிறுப்பிட்டியில் அன்னாருக்கு சிலைதனை நிறுவி நற்பணிகளில் ஈடுபட்டுள்ள இவ்வேளை எனது பார்வைக்குக் கிடைத்ததே 'தமிழர்தம் உலகவேதமும் புனித ஞானியும்' எனும் இந்த அரிய ஆன்மிக,அறிவியல் நூலாகும்.

ஆய்வாளர் கலாநிதி ஜெயக்குமார் குமாரசுவாமி நீடுநாள் வாழ்ந்து தமிழினத்தை ஓங்க வைக்க இதுபோன்ற பயன்தரு தமிழ் நூல்கள் படைக்க வேண்டும்.

**நெஞ்சார வாழ்த்தி உவக்கின்றேன்.**

**'வாழ்க தமிழ் மொழி!' வாழிய இலக்கிய ஆர்வலர்கள்!!**
**வாழிய தமிழ் நெஞ்சங்கள்!!!**

**செ.விசுவலிங்கம் B.A. (Tamil)**
**சி.வை.தாமோதரம்பிள்ளை நற்பணி மன்றம்,**
**பெருந்தலைவர்**
**ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் (தமிழ்)**
**யாழ் கல்வி வலயம்**

## தமிழர்தம்

# உலக வேதமும் புனித ஞானியும்

**உலக வேதம்:**

**தேடுதலும் தேறுதலும்!**

உலகின் ஆரம்ப மனிதன் காட்டுமிராண்டியாகக் கானகத்தே வாழ்ந்தபோது தன்னைச் சூழவுள்ளவை தந்த தடுமாற்றம், குழப்பம் என்பவையே இந்த இயற்கையை நோக்கிய தேடுதலாய் அவனுள்ளே எழுந்திருக்கின்றது.

இயற்கைச் சூழலில் உள்ளவைகளைத் தனது கண்கொண்டு பார்த்தல், தாகத்திற்கு நீர் பருகல், வேட்டையாடி, உணவுண்ணல், எங்கும் நடமாடித் திரிதல்..

இவை ஆகாய வெளிச்சம் என்னும் சூரியன் நிகழ்த்தும் அதிசயம்.

அவ்வாறு, அனைத்தையும், வெளிச்சம் போட்டுக் காட்டும் தன்மை கொண்டதாய் தனக்கு உதவிக் கொண்டு இருக்கும் அச்சூரியனே சுட்டெரிக்கும் வெம்மையாக உயிர்களை வாட்டி வதைத்தலும், காடு தீப்பற்றி உயிர்களை மடியச் செய்தலுமானபோது அவனுக்கு ஏற்பட்ட குழப்பம், ஏமாற்றம்: தடுமாற்றம், அச்சம்..

பகலவன், ஒருதிசை உதித்து, மறுதிசை மறைந்ததும்,இருட்டிலே தன்னைச் சூழ இருப்பவைகளையே தனது கண்கொண்டு பார்க்க முடியாததால் ஏற்பட்ட அச்சம்..

அப்போது, குளிர்ச்சி பொருந்திய சந்திர ஒளியும், நட்சத்திரங்கள் கண்சிமிட்டலும், தந்த மகிழ்வு...

அந்த இன்ப உணர்வுகளை அனுபவித்துக் கொண்டே, தனது உறவுகள் சூழ மரத்தடி உறக்கம் தரும் இயற்கை வாழ்வுப் பிடிமானம்..

அச் சந்திரன் தேய்வதும் மறைவதும் எதுவுமே தோன்றாத "கும்" என்ற இருள் தரும் அச்சம்..

மரங்களின் கீழ் நிம்மதி உறக்கம் எய்துவதைக் குழப்புவது போன்று உடலை வெடுவெடென நடுங்க வைக்கும் கூதல் காற்று ஏற்படுத்தும் துன்பம்.

தன்னைப் பயம் கொள்ள வைக்கும்படியாக இடையிடையே ஆகாயத்தே இருந்து குலை நடுங்க வைக்கும் பேரிடி, கண்ணைப்பறிக்கும் மின்னல், சூறைக் காற்று, பெருமழை..

அப்பேரிடி, மின்னல் சூறைக்காற்றால் தன் இனம் படுத்து உறங்கும் நிழல் மரம் உட்பட ஏனைய மரங்கள் முறிவதும், சாய்வதும், தீப்பற்றி எரிவதும், பேரிடி மின்னலுக்கு தன்போன்ற உயிர்கள் உட்பட ஏனைய உயிர்கள், பலியாவதும், மழைவெள்ளம், காட்டாறுகளாய்ப் பாய்ந்து தம் போன்ற உயிரினங்களை அடித்துச் செல்லலும் பின்னர், பிணங்களாய்க் கரை ஒதுக்கலும் தந்த பேரச்சம்.

பெரும் சூறைக் காற்று, நிலநடுக்கம், பெருவெள்ளம், காட்டுத் தீ என்பன இடையிடையே தோன்றி அவனது வாழ்வுச் சூழல் அனைத்தையுமே பாழ்படுத்தி, நிர்மூலமாக்கி அவனை நிர்க்கதியாய் கலங்க வைத்து வந்த அவலம்..

இவ்வாறான தனது சுகபோகங்கள் அனைத்தும் தற்செயலாகப் பறிக்கப்பெற்று தன்போன்ற உயிரினங்கள் அச்சுறுத்தப்படுவதற்குக் காரணம் என்ன? ஏன்? எதனால்?

இந்தப் பிரபஞ்ச வெளியில் தனித்துவிடப்பட்டதான பயம் அவனைப் பற்றிக் கொண்டது. இந்த இயற்கை உலகினைச் சீரணிக்க முடியாத அச்சம் அவனைச் சூழ்ந்து கொண்டது.

குழம்பினான்.

தன்போன்ற உயிரினங்கள் வாழும் தன்னைச் சூழவுள்ளவை அனைத்தும் தனது கட்டுப்பாட்டிலே நடைபெற்று வருவதைத் தனக்கு

உணர்த்தவும், அதுகொண்டு தன்னைச் சரணடைய வைக்கவும் வேண்டியே கண்ணுக்குத்தெரியாத தீய சக்தி கொண்ட யாரோ மாய மனிதர்கள்,அல்லது ,அதீத சக்தி வாய்ந்த மாயமனிதன், தனது கண்ணுக்கு எட்டாத தூரத்தில் இருந்தபடி தன்னை அச்சுறுத்துவதற்கோ பூச்சாண்டி காட்டுவதற்கோ காரணமா?

அவ்விதம் தனக்கு எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் எதிரி ஒருவனா? அன்றேல் பலரா?

அந்த எதிரியை அல்லது எதிரிகளைச் சண்டையிட்டுச் சாய்ப்பது எப்படி? எங்ஙனம்?

தன்னால் இயலாதபோது, அந்த மர்ம மனிதனிடம் அல்லது மனிதரிடம் மீளா அடிமை எனத் தான் சரணடையும் மார்க்கந்தான் என்ன?

இன்பம் தருபவனே துன்பங்களுக்கும் காரணமாக இருப்பதன் மூலம் தானே பலவான், அனைத்தையும் தீர்மானிப்பது தானே, அனைத்து உயிர்களினதும் முடிவு, தனது கரத்திலேயே என தனக்குக் காண்பித்துத் தன்னைப் பணிய வைக்கவே அவ்வாறாய் நாடகம் ஆடுகின்றானா? ''

அக் காட்டுமிராண்டி குழம்பினான் சிந்தித்தான், தேடினான்,...

அவனது தேடுதலில் ஒரு பயனும் கிடைக்கவில்லை. இனந்தெரியாத பயம் அவனைக் கௌவிக்கொண்டது. எங்கோ அநாதரவான நிலைக்குத் தள்ளப்பட்டதான துயர், பிரபஞ்ச வெளியில், தனித்து விடப்பட்டதான அச்சம் அவனைப் பற்றிக் கொண்டது.

அவனது உறவு வட்டங்களின் பிரிவுகள், மரணங்கள், இயற்கையாகவும், கொடிய விலங்குகளால் வேட்டையாடப்படுவதுமாக அமையவே தன்னுடன் நடமாடி பின்னர் வீழ்ந்து பிணமாகியும் காணாது தொலைந்தும் மறைந்தும் போன தன் மீது பரிவு காட்டிய அந்த உறவுகளுக்காக ஏங்கினான்.

இந்த பிரபஞ்சத்தைச் சீரணிக்க முடியாத பெரும் பயம் அவனைக் கௌவிக் கொண்டது.

தனது இன்ப துன்பங்களாய்த் தனது வாழ்வைத் தீர்மானிக்கும் மாபெரும் சக்தி என்பது எது?

வானத்தை நிறைத்து கண்சிமிட்டும் நட்சத்திரங்கள். சூரியன், சந்திரன், மழை, இடி, மின்னல், சூறைக்காற்று தோன்றுவதான ஆகாயம், அடர்காடு, வெற்றுவெளி நோக்கியெல்லாம் அவனது தேடுதல் விரிந்தது..

அவை மட்டுமா? தன்னைத் தாங்கும் நிலம் கூட நடுக்கம் கொள்வதாய் இடையிடையே ஈடாட்டம் காட்டுகின்றதே.! தான் தாங்கும் உயிரினங்களைக் கூட காவு கொள்கின்றதே..

தன்னைச் சூழ இருந்து பாதிப்புத் தரும் மாய சக்திகளால் நிலை குலைந்தான்.

தனக்குப் பயன்தர உதவுவதோடு தனது உறவுகளை நிர்முலமாக்கும் அந்த வான்வெளி, நிலவெளி, நீர்வழி அச்சம் அனைத்தையும் போக்கும் வழிதான் என்ன?

தன்போல இல்லாது அருவமாகி நின்று பூச்சாண்டி காட்டும் எதிரிகள் மாய உருவங்களா?

அந்த மாய உருவங்களிடம் சரணடைவதே தன் இனத்தவர் தப்பிப் பிழைக்க ஏற்ற சரியான மார்க்கமா?

உருவம் அற்ற அந்தவொரு மாய சக்தியை அல்லது சக்திகளைக் காண்பது எங்ஙனம்?

இதமான உடல் உணர்வுகளை இடையிடையே வருத்தும், நோய் பிறக்க வழிகோலும் கொடுமைக்குக் காரணந்தான் என்ன?

அவ்வாறான குழப்பமான அந்த இயற்கை மூலங்கள் தனக்கு எதிர் முகங்களா?

அந்த மாயங்களைச் சரணடைவதே சரியானது. இவ்வாறு அவனுள் ஏதோ எச்சரித்தது.

தனது அச்சத்தை இடி, மின்னல், காற்று, நெருப்பு, வெள்ளம், நீர், நிலம், சூரியன், சந்திரன் எனக் கற்பிதம் செய்த அவனே தோன்றுவதும் மறைவதும் அருவமாக நின்று அச்சுறுத்துவதுமான அந்த இயற்கை மூலங்களுக்குத் தானே வேட்டை உணவிலிருந்தும் படையல் செய்தான்.

அவ்வாறு, தங்களை எதிரிக் கண்கொண்டு பாராது இருக்கும்படி வேண்டுதல் புரிதலாய் தன்னைப் பாதிக்கும் அந்த இயற்கையிடம் சரணடைந்தான்.

நிரந்தரத் தீர்வு தராவிட்டாலும் அந்த இயற்கையை நோக்கிய அவனது வழிபாட்டால் குழப்ப சிந்தனையில் இருந்து ஓரளவு மனநிறைவும் பெற்றான்.

அவனது வாழ்விலே சந்திக்கும் இயற்கையின் அச்சுறுத்தல், ஏனைய எதிரிகள் விலங்கு பறவைகள் உணவுக்காக தன் போன்ற மனித இனத்தை ஏற்படுத்திய பலி தீராத உடல் உபாதைகள், நோய்கள், முதுமை, மரணம் இன்னோரன்ன குழப்பத்தினூடாக அவனால் மேற்கொள்ளப்பட்ட அவனது அந்த இயற்கை வழிபாடானது அவனை புதிய சிந்தைக்குரிய மனிதன் என இட்டுச் சென்றது.

அவனது பயபக்தி வழிபாடு அவனை ஏனைய நாலுகால் விலங்கிலிருந்து மனிதன் என்ற அறிவாற்றல் கொண்ட விலங்காக அவனை உலகிலே தூக்கி நிறுத்தியது. அவ்வாறான அவனது இயற்கையை நோக்கிய தேடுதல் என்பதே தேறுதல் என்பதாய் அவனைச் சென்றடைந்தது. அதுவே அவனுக்கு உலக வாழ்வைப் பிடிமானம் ஆக்கிற்று.

## இயற்கையே ஆசான்!

ஆரம்ப மனிதன் இயற்கையிடம் சரணடைந்தான். அவனிடம் ஏற்பட்ட இயற்கை மீதான அச்சம் கொடிய விலங்குகள் போன்ற சாயல் ஒத்த அவனது அதிகூடிய முரட்டு சுபாவம் சற்று விலகியது. பயபக்தி அவனைச் சிந்திக்கத் தெரிந்த மனிதன் என ஆக்கியது.

தன்போல பக்குவம்பெறாது எதிரிக் கண்கொண்டு தன்னுடனும் மோதும் தன் இன முரடர்களுடன் பொருதியும் அவர்களை தன்வழிக்குக் கொணரும் நிலைக்கும் தள்ளப்பட்டான்.

அவனது பக்தி உணர்வு வழி வரப் பெற்ற வழிபடு மார்க்கம் இயற்கையைத் தன்வசப்படுத்தும் முறைமையைப் போதித்தது. அதுவே தோன்றாத் துணையாய் அவனது சிந்தையைக் கூர்மைப்படுத்தியது.

காட்டிலே, ஏனைய விலங்கு பறவைகள் போலவே தான் வேட்டையாடும் விலங்கு பறவைகளைப் பச்சையாகவே புசித்து வந்தபோது, பேரிடி மின்னலால், கடுங் காற்றால் மரங்கள் உராய்ந்து காடு தீப்பற்றும் போது, அத்தீயிலே வெந்த மாமிசத்தின் சுவையால் உந்தப் பெற்றான்.

அத்தீயே கடுங்குளிரிலிருந்து கதகதப்புத் தந்து அவனது வாழ்விற்கு இதமூட்ட உதவியதோடு இருளிலே தன்னைச் சூழ இருப்பவைகளையும் பார்க்க வகை செய்தது.

'அத்தீயை தனது நிரந்தர தேவைக்கு எவ்வாறு கொண்டுவரலாம்?' எனச் சிந்தித்தான்.

கடுங்காற்றினால் மூங்கில் மரங்கள் ஒன்றோடொன்று உரசும்போது தீப்பற்றியது. அதுபோலவே, தான் வேட்டையாடப் பயன்படுத்திய கற்களைத் தட்டிக் கூர்மைப்படுத்தும்போது உருவான தீப்பொறி அவனது சிந்தையை அகல்வித்தது. 'மாய மூலங்களில் இருந்து தோன்றி மறைவனவற்றை தனது வல்லமையால் மீளக் கொணர முடியும். என்ற ஆச்சரிய அறிவு அவனுள் பிறந்தது.

ஒதுங்க நிழல் தந்து உறைவிடம் வழங்கிய தன்னைச் சூழவுள்ள மரங்கள் படுத்துறங்கும் கற்குகைகள் அவனுக்குத் தேவையான தீயை உண்டாக்கும் வழிமுறைக்கு ஒத்துழைத்தன.

தனது உணவு வேட்டைக்கும், தற்பாதுகாப்புக்குமான ஆயுதங்களாக கூர்மைப்படுத்தப்பெற்ற தடிகள் தீயினைக் கடையும் கோல்களாக எழுந்தன. உறுதியான கருங்கற்களை ஒன்றுடன் ஒன்று உரசி தீப்பொறிகளை உருவாக்கினான். காய்ந்த தும்புகள் பஞ்சுகள், சருகுகள் கொண்டு நெருப்புப் பொறியைப் பற்ற வைத்தான். பட்ட மரங்களால் தீ நாக்குகள் ஒளி கக்கின.

அவ்வாறான தனது புதிய கண்டுபிடிப்பால் அவனிடை புதிய இறுமாப்பும் பிறந்தது.

வேட்டையாடிய பச்சை மாமிசங்களை அந்த நெருப்பிலே சுட்டு மாமிச சுவையால் மேலும் உந்தப் பெற்றான். தானே உருவாக்கிய நெருப்பு

இரவிலே வெளிச்சம் தந்தும் குளிரிலிருந்து அவனைப் பாதுகாத்தும் அவனது உலக வாழ்வைப் பிடிமானம் ஆக்கியது.

அவ்வாறு அவனது வாழ்வு முறை மேலும் புதிய நம்பிக்கைகளை ஊட்டி வளர்த்தது.

தனது உடலை வருத்திய எதிரியான கடுங்குளிர் காற்றில் இருந்து விடுபட்டு உணவை நெருப்பிலே சூடாக்கிப் புசித்து. இரவிலே ஒருவரை ஒருவர் பார்க்கக்கூடிய வெளிச்சத்தை தீயாக தானே உண்டாக்கும் மாபெரும் சக்தி வரப் பெற்ற ஆதி மனிதனது சிந்தனை உலக இயற்கை மூலங்களைத் தனது உறவு வட்டமாய் இணைத்தது.

## குடிநீர் ஆகாரம்

ஆரம்ப மனிதன் குடிநீர் ஆகாரம் இல்லையேல் உயிரினங்கள் பிழைக்க முடியாதவை என்பதை உணர்ந்தான்.

பறவை, விலங்கு இனங்கள் நீர் வற்றிய இடங்களில் வாழாது நீர் பெறக்கூடிய வேறு இடங்களை நோக்கி நகர்வது கண்டான். அனைத்து உயிரினமும் உயிர்வாழ 'குடிநீர் ஆகாரம்' அவசியம் என உணர்ந்து நன் நீர்த்தேக்கங்களை நாடிச் சென்றான். அவ்வாறு நீர்ச்சுனைகள், ஆறுகளை, அண்டிய மரநிழல் கற்குகைகளில் ஒதுங்கினான்.

கடும் வரட்சிக் காலத்தே தாகத்திற்கு நீரின்றி குற்றுயிரும் குலை உயிருமானான்.

திடீரென வானிலிருந்து வீழும் மழைத்துளிகள் அவனுக்கு தேவாமிர்தம் போல இனித்தது.

வாழ்நாளே இனிய நாளாக புதிய நம்பிக்கைகள் அவனுள்ளே பிறக்கத் தொடங்கின.

ஆகாயம் தரும் மழையால் ஆறுகள், ஏரிகள், குளங்குட்டைகள் அனைத்தும் நிரம்பி அவனது வாழ்நாளுக்குத் தேவையான தண்ணீர் தாகத்தைத் தீரக்கவும், பற்றி எரியும் நெருப்பை அணைக்கவும் பயன்படும் நம்பிக்கையைத் தந்துதவியது.

மழை இல்லாது கடும் வரட்சி தோன்றிய போது, ஆகாயத்தில் இருந்து வீழும் மழைத்துளிக்காக ஏங்கினான்.

வரட்சிக் காலங்களில் யானைகள் தாகத்திற்கு வரண்ட சகதி மணலை துதிக்கையால் அகழ்ந்தபோது அங்கே சுரக்கும் சேற்றுநீர் அருந்தி சென்றதை, ஏனைய மிருகங்கள் தத்தம் கால்கள், கொம்புகள் கொண்டு வரண்ட சேற்று நிலங்களை தோண்டி அடிநீரை அருந்தி மகிழ்ந்தமை, பறவைகள் தம் கூரிய அலகுகள் கொண்டு சேற்றினை நீக்கி அடி நீரருந்தியமை எல்லாமே அவனது அறிவைக் கூர்மைப்படுத்தியது.

மழைத்துளி வீழ்ந்து வெள்ளக் காடுகள் வற்றிட சதுப்பு நிலங்களை, எலும்புகள், வேட்டை ஆயுதங்களான கற்கோடரிகள் கூர்மையான நுனிகள் ஆக்கப்பெற்ற மரக்கம்புகள், ஆமை ஓடுகள் கொண்டு ஆழத் தோண்டினான். அதிலே நீர் சுரப்பது கண்டான். தனது முயற்சியால் சிறு குளம் குட்டையை உருவாக்கி குடிநீரைச் சேமித்தான். நீராகாரத்தால் தாகம் தீர்த்துப் புத்துயிர் பெற்றான்.

நீர் நிலைகள், ஆற்றங்கரைகளில் தனது குடியிருப்பை அமைத்து நிறைவும் பெற்றான்.

## வேட்டைக்கண்ணிகள்

ஆதி மனிதன் கூரிய தடிகள், கற்கோடரிகள் கொண்டு காட்டு விலங்கு, பறவை உணவுக்கு அலைந்தபோது தனது வேட்டையில் ஏதும் சிக்காத போது அவனது கவனம் கண்ணுக்குத் தெரிந்த ஏனைய பறவை, விலங்குகள் உணவு தேடும் வாழ்வு முறைமையை அவதானித்தது.

நிலத்தின் கீழ் வளை தோண்டி அதிலே சிக்கிய முயல் போன்ற பிராணிகளைப் பிடித்து உண்டான்.

சிலந்திகள் தமக்கு உறைவிடமாக்கி சிறு பூச்சிகளை உண்பதற்குப் பின்னிய வலைகள் போல, தடித்த நார்கள், மிருகங்களின் தோல்கள், சணல்கள், புற்கள், வளையத்தக்க மெல்லிய மரக்கொம்பர்கள், விழுதுகள், கொடிகள், பட்டைகள், தடித்த தும்புகள் கொண்டு வலைகள் பின்னினான்.

அதிலே காட்டுப் பறவைகள், முயல், அணில் போன்ற சிறு பிராணிகளை சிக்க வைக்க அவை உண்ணும் தானியங்களை வைத்தான். சிக்கியவை அவனது உணவுக்கு வழிகோலின.

அவ்வாறே மேலும் உறுதியான கண்ணிகளை உருவாக்கினான். இலை குழைகள், எச்சில் மாமிசங்கள், எலும்புத் துண்டங்களை இட்டான். அதிலே உணவுக்கான பிராணி விலங்குகள் சிக்கின. அவனது உறவு வட்டங்களது பசிபோக்க அவை உதவின.

அவ்வாறே மீன்பிடிக்கும் வலைகளையும் நார்கள், இறந்த விலங்கினத் தோல்கள், முட்கிளைகள் முதலானவை கெண்டு பின்னப் பழகினான்.

நீர் நிலைகளில் சிக்கிய மீன்களைத் தரைக்குக் கொண்டுவந்து நெருப்பிலே வாட்டி தனது உணவுக்காகப் பயன்படுத்தினான். அவனது நிலம், நீர் சார்ந்த உலக வாழ்வு பிடிமானம் ஆனது.

## உடல் மறைப்பு

நிர்வாண நிலைக்கு வெட்கப்படாத ஆதி மனிதனுக்கு கடுங்குளிரி லிருந்தும் அதிகூடிய வெப்பத்தில் இருந்தும் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. காட்டிலே தாழை, வாழை போன்ற விரிந்த இலைகள், தான் வேட்டையாடிய மிருகங்களின் தோல்கள், மரப்பட்டைகள் தன்னால் இணைக்கப்பெற்ற வர்ணப் பறவைகளின் சிறகுகள் கொண்டு தனது உடலை மறைத்து இயற்கை அனர்த்தம் எனும் கடுங்குளிரிலிருந்தும் அதிகூடிய வெப்பத்திலிருந்தும், தனது உடலுக்கு ஊறு விளைவிக்கும் ஜந்துக்களிலிருந்தும் தன்னைப் பாதுகாத்தான். அவ்வாறான உடல் மறைப்புகள் அவனைச் சூழவுள்ள எந்த விலங்கினமோ பறவை இனங்களோ மேற்கொள்ளாத- தானே தனது உடல் மறைப்புத் தேவை உணர்ந்து மேற்கொண்ட அந்த முறைமை அவனைப் புதுமையான அனுபவத்திற்குள் புகுத்தியது. புதுமையான சிந்தையை விரித்தது.

## பயிர் வளர்ப்பு

பறவைகள், விலங்குகள், பழங்களைத், தானியங்களை வேறு பகுதிகளில் இருந்து கொண்டு வந்து மரக்கிளைகளில் இருந்து கொத்திப் புசிக்கும்போது, நிலத்திலே ஈரலிப்பான தரையில் அப்பழ வித்துக்கள்

விழுந்து முளைத்து மரஞ்செடி கொடிகள் உருவாவது கண்ட ஆதி மனிதன் தானும் அவ்வாறு பறித்துத் தின்று விதைகளைக் கீழே எறிந்தபோது. அவை முளைத்து மரஞ்செடி கொடிகளாகின. அத்தாவரங்கள் தன்னால் உருவாகிய இயற்கைப் படைப்புக்களாக இறுமாந்தான்.

நீர்த்தேக்கங்களை கால்வாய். ஏரிகளாக்க தமது கற்கோடரி முதலான ஆயுதங்கள். கூரிய மரக்கம்புகள். மான். எருமை மாடுகளின் கொம்புகள். எலும்புகள். ஆமை ஓடுகள் போன்றவை கொண்டு ஆழமாகக் கீறி அகழ்ந்து நீர் நகர்ந்து செல்வது கண்டு மகிழ்வெய்தினான். அவை கொண்டு பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் முறைமையை மெல்ல மெல்லக் கற்றுக் கொண்டான்.

அதிக தூரம் அலையாது. தமது சுற்றாடலில் காய்கனி கிழங்குகள் உள்ளிட்ட தாவர உணவுகளைத் தானே உற்பத்தி செய்யும் அறிவு அவனிடை மெல்ல மெல்ல உருவாயிற்று.

ஆரம்பத்தில் ஏனைய விலங்கு பறவைகள் போல. குடிநீருக்கு ஆற்றுநீர். மழை நீர்த்தேக்கங்களையே நாடி சதுப்பு நிலங்களைத் தோண்டிய மனிதன் அவ்விதமே நீரற்ற வரண்ட நிலத்தை மேலும் ஆழமாகத் தோண்டினான். மண்ணுக்கு அடியில் ஆழக் குழியில் இருந்து நீர் சுரக்கும் முறைமை கண்டு புத்துயிர் பெற்றான்.

தன்னால் அகழப் பெற்ற ஆழக் குழிகளில் இருந்து நீர் மொள்ள கொடிகள். நார்களைக் கயிறுகள் ஆக்கியும். வேட்டையாடிய விலங்கினத்தின் தோல்களால் ஆன பைகள். ஆமை ஓடுகள். சுரை போன்ற பழங்கள் வற்றி உலர்ந்த பின் ஆன குடுவைகள் கொண்டும் நிலத்தடி ஆழத்தில் இருந்து நீரை சமதரைக்குக் கொணர்ந்து குடிநீரை அள்ளிப் பருகினான். தனது உடலையும் அந்த நிலத்தடி நீர் கொண்டு நனைத்து புதிய இன்ப உலகிலே சஞ்சரித்தான்.

தனக்குப் பயன்தரும் மரக்கன்று பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் முறைமையை சிறு கால்வாய்கள் அமைப்பது கொண்டு தானே பயிரிடும் முறைமையை மெல்ல மெல்லக் கற்றுக் கொண்டான்.

அவ்வாறு. வேட்டைக்காக தூர இடங்களுக்கு அலைந்தபோது ஏனைய விலங்கு பறவைகள் போலவே வேட்டையாடும் விலங்கு நிலையில் இருந்த மனிதன் உணவு உற்பத்தியை மெல்ல மெல்ல ஆரம்பித்துக் கொண்டான்.

தனது காட்டுமிராண்டித் தோற்றம் மெல்ல மெல்ல மறைவதாய் நாகரிக மனிதன் என தான் உருவாவதாய் புதிய நம்பிக்கை அவனுள்ளே துளிர்த்தது.

அவ்வாறான நம்பிக்கையே அவனை மெல்ல மெல்ல பகுத்து உணரும் புதிய மனிதன் என உலகிடைத் தூக்கி நிறுத்தியது.

இருந்தபோதும் வானிலிருந்து பெய்யும் மழைத்துளி நின்று போனால் தனது வாழ்வாதாரத்திற்கு வழிதான் என்ன?

இன்னோரன்ன கேள்விகள் ஏக்கமாக அவனுள்ளே ஒலிக்கத்தான் செய்தது. நிர்க்கதி வாழ்வே தனது என ஏதோ எச்சரித்தது.

## உணவுப் பாத்திரங்கள்

ஆதி மனிதன் இயற்கையில் கிடைக்கும் ஆமை ஓடுகள், காய்ந்த சுரைக் குடுவைகள், இலை தழைகள் கொண்டு தன்னால் உருவாக்கப்பெற்ற ஏதனங்கள், மரக்குடுவைகள் கொண்டு நீராகாரம், தேன் உள்ளிட்ட திரவ உணவு உண்ண ஏதனங்களை ஆக்கியவன் நீர் ஏந்தும் ஏதனங்கள், உணவு சமையல் செய்யும் பாத்திரங்கள் ஆகியவற்றை களிமண்ணில் குயம் (குழி) செய்து வெய்யிலில் உலர்த்தி அக்களிமண் பாத்திரங்களைப் பயன்படுத்தினான்.

காடு தீப்பற்றிய போது, நெருப்பிலே வெந்த தன்னால் உருவாக்கப்பெற்ற களிமண்பாண்டம் உறுதியானது கண்டான். களிமண்ணால் செய்த ஏதனங்களை சூளை முறைமையில் நெருப்பிலே உலர்த்தி அப் பாத்திரங்கள் நீண்டகாலம் பாவனையில் இருப்பது கண்டு தனது தன்னம்பிக்கையை மேலும் வளர்த்துக் கொண்டான்.

காடுகள் தீப்பற்றி எரிந்தபோது அதிலே வெந்த மாமிச சுவை கண்டு களிகூர்ந்தான்.

உறுதியான மட்பாண்டத்தில் நீரைச் சூடாக்கவும் அதிலே மாமிசம், மீன் கிழங்குவகைகளைச் சமைத்து உண்ணும் முறைமைகளையும் மெல்ல மெல்லக் கற்றுக் கொண்டான்.

பறவைகள் கோதுள்ள தானியங்களின் கோதுகள் நீக்கி உள்ளீடுகளைக் கொறித்து உண்பது கண்ட ஆதி மனிதன் தனது பற்கள் கொண்டு

அவ்விதம் அனைத்தையும் கொறித்து உண்ண முடியாதுணர்ந்தான். தடித்த கோதுள்ள தானியங்களை கற்பாறைகளிலே பரப்பி அழுத்தமான கற்களால் குற்றினான். உள்ளீடுகளை சேமித்து உண்டான், அவ்விதமே சேமித்த அவற்றை மட்பாண்டங்களில் இட்டு நீரூற்றி அவித்து, மெதுமையான இதமான சுவையான உணவாக அவற்றை உண்ணும் பக்குவ நிலைக்கு உள்ளானான்.

இவ்வாறு தனது பயன்பாட்டிற்குப் பயன்படுத்தத் தனது முயற்சியால் உருவாக்கிக் கொண்ட நெருப்பு, நீர், சமைத்த உணவு ஆகியவை தனது இனம் வாழ வகை செய்துவரல் கண்டதால் உலகம் அவனது உறவானது.

## உறையுள்

ஆரம்பத்தில் மரங்களின் கீழ் தனது குழுமத்துடன் வாழ ஒதுக்கிடம் தேடிய மனிதன், அம் மரங்கள் கடும் வரட்சியால், பட்டுப்போயோ, புயலால் சாய்ந்தோ, இடி, மின்னலால் எரிந்தோ போனதால் ஒன்றும் அறியாது திகைத்தான். தாம் ஒன்று கூடி வாழ ஒதுக்கிடம் தேவைப்படவே எறும்பு, கறையான்கள் மண் புற்றமைத்து ஒன்று கூடி வாழும் வாழ்வாலும், பறவைகள், குருவிகள் மரச்சுள்ளிகள், சருகுகள் இலைகள், தும்புகள் கொண்டு மரக்கிளைகளில், பற்றைகளில், குகைகளில் கூடமைத்து வாழும் கலையாலும் தூண்டப்பெற்றான்.

தனது குழுமம் வாழ பட்ட மரங்கள், தடிகள், கிளைகள் இலைகள், தழைகள் விலங்கினத் தோல்கள் களிமண் கொண்டு தனது குடியிருப்பு எனும் உறையுள் கலைக்கு நிமிர்ந்தான்.

வெயில், மழை, குளிர் காலத்திலிருந்து ஒதுக்கங்காணவும், நிலம் வாழ் ஊர்வன தீண்டாது இருக்கவும் அவனது குடில் முறைமை உதவின. எனவே ஆரம்ப மனிதனது வளர்ச்சிப்படிமானம் உணவிலிருந்து பாதுகாப்பாக ஒதுங்கி வாழ்வதற்கான உறையுள் எனும் குடியிருப்பு எல்லையை அடைந்தது.

## உடை

தனது நிருவாணத்திற்கு வெட்கப்படாத ஆதி மனிதன், ஆரம்பத்தில் மரப்பட்டைகள், இலைதழை குழைகள், பறவைகளின் இறகுகள், விலங்குகளின் தோல்கள் கொண்டு தன்னை வருத்தும் குளிர், மழை,

வெயிலுக்குப் பாதுகாப்புத் தேடினான். தான் வாழும் இயற்கை அழகைப் பெரிதும் நேசிக்கத் தொடங்கினான்.

பல வர்ணப்பறவைகளின் இறக்கைகள், பல நிற விலங்குகள், வண்ணத்துப் பூச்சிகளின் கண்ணைக் கவரும் செட்டைகள், பச்சைப் பசேல் எனும் மலைக் காட்சிகள், காற்றில் அசையும் மரஞ்செடி கொடிகள், அவற்றின் அழகிய பல வர்ணப்பூக்கள் ஆகாயத்தின் வான்முகில், வானவில் கோலங்கள், கடல் வர்ணம், பறவை விலங்குகளின் செல்லமான விளையாட்டுகள், அவற்றின் நிறங்கள், புணர்ச்சி இன்பங்கள், முதலானவை தந்த அழகு அவனது அழகியல் கற்பனைக் கனவுகளை ஆழ விரித்தது.

பாம்பு பழைய சட்டையைக் கழற்றி புதிய சட்டையில் தோன்றி மீளவும் தனது இளமை அழகைப் பிரதிபலிப்பதும் அவற்றிலே காணும் வர்ணங்கள். தன்னை ஒத்த ஆடையற்ற அரை மனிதர்களை முழு மனிதர் ஆக்கும் ஆடைக்கலை உற்பத்தியில் கவனம் செலுத்தும்படி அவனை மேலும் தூண்டி இருக்கின்றது.

தமிழிலே சட்டை என்பது பாம்பின் தோலுக்கும் மனிதர் அணியும் ஆடைக்கும் பயன்படுத்தப்படும் சொல்லாகும். மனித ஆடைக்கலை நாகரிகம் என்பது பின்னைய நாகரிக மனிதரது நாகவழிபாட்டுக் காலத்துடன் ஒட்டிய போதே ஆடை நாகரிகம் சிறப்புப் பெற்றிருக்கலாம்.(01)

தவிர, நாகம் மற்றும் பறவை விலங்குகள் ஏனைய நடமாடும் உயிரினங்கள் நடமாடாத பகுதிகளில் இருந்து தம்மைக் காத்துக் கொண்டே உடலின்பம் அனுபவிக்கும் கலையானது மனிதனை வெட்கப்படுதல், தனித்திருந்து இன்பம் அனுபவித்தல், மானத்தை மறைக்க ஆடை புனைதல் கலையில் மனிதனைத் தூண்டி இருக்கலாம்.

ஏனைய விலங்கு பறவைகள் போன்ற நிர்வாணக் கோலம் என்பது மனித விலங்குகளது வாழ்வியல் கலைகளுடன் ஒருங்கிணையாதவை. அவ்விலங்கு பறவைகள் தத்தம் இச்சைகளை தீர்த்துக் கொள்ளல் என்பதும் பின்னர் தமக்கு ஆவல் தோன்றும் போதே அனுபவித்தல் என்பதும் ஒருங்கிணைந்த சிந்திக்கத் தெரிந்த மனித வாழ்வியல் பிடிமானத்திற்குப் புறநடையாக எழுந்தன. எனவே மானத்தை காட்டி மறைத்தல் என்பதாய்

வெட்க வெளிப்பாடே அவனது வாழ்வியலில் சுவை பொதிந்ததாக மனிதம் இலக்கணம் வகுத்தது.

ஆரம்பத்தில் ஆதி மனிதரில் இருந்து பிறந்த பெண் தலைமையே ஆடைக்கலை அழகினால் ஆடவரை மயக்கி தங்களது ஆட்சியைத் தக்க வைக்க அழகியற் கலைகளில் அதி கூடிய கவனம் செலுத்தி அழகிய வர்ண ஆடைக்கலைகளை உலகிற்கு அறிமுகம் செய்திருக்கின்றனர்.

அழகுக் கோலங்கள், என்பது அவரவர் மர்ம உறுப்புக்களை மறைத்து தமது அந்தரங்க தேவையை அழகியலாக வெளிப்படுத்தி அனுபவித்தலும், அம் மறைப்புகள் இல்லாதபோது வெட்கப்படுதலுமாகப் பின்னர் ஏற்கப்பட்டிருக்கலாம். ஆடை என்பதே தத்தம் மானத்தை மறைக்கும் மனித வாழ்வியல் தேவை என்பது அதிலிருந்தே தோன்றி இருக்கலாம்.

ஏனைய விலங்கு பறவைகளில் இருந்து மாறுபட்ட மனிதன் மறைக்கப் பெற்ற தனது அந்தரங்க உறுப்புக்களை வெளிப்படுத்தும்போது காம உணர்வு பல வர்ண கற்பனை கலந்ததாக பெண்களின் ஆடை புனைவு உலக வாழ்வை பிடிமானமாக ஆக்கி இருப்பது கொண்டே வர்ண ஆடைகளின் வடிவங்கள் அவர்களது உணர்வுகளுக்குத் தக்கபடி வடிவமைக்கப் பெற்றிருக்கலாம்.

தனது தோற்றப் பொலிவை அழகாக்கும் ஆடைக்கலை உருவாக்கத்தில் இறங்கிய மனிதன் பறவைகளின் பல வர்ண இறக்கைகள் கொண்டும், விலங்கினங்களது உரோமங்கள் தோல்கள் கொண்டும், வாழைநார், பருத்திப்பஞ்சு பட்டு நூல்கள் கொண்டும், ஆடைகளை உருவாக்கினான்.

பூர்விக தமிழரின் ஆடைகளை சங்க இலக்கியம் எனும் பழந்தமிழ் இலக்கியம் வட்டுடை, நெட்டுடை என பதிவு செய்துள்ளது.

பெரு முட்கள், கூர்மையாக்கப்பெற்ற தடிக்குச்சிகள் கொண்டு ஆடை புனைய ஆரம்பித்தவன் பின்னர் தோன்றிய உலோக காலத்தில் ஊசி முதலானவை கொண்டு ஆடை பின்னும் வழிமுறை நோக்கி நகர்ந்தான். அவனது கரத்தினால் உருவான தையற்கலை பின்னர் அதற்கான கருவியாக அழுத்தமான மரத்திலே கைத்தறி எனும் ஆடை நெய்யும் கருவியினை உருவாக்கி ஆடை புனைந்து, ஆடை அற்றவன் அரைமனிதன் என்பதை நீக்கினான்.

விலங்குநிலை நிருவாணியர் எனும் அரை மனிதர்களை முழு மனிதர் ஆக்கியது ஆடைக்கலையே. அதனால் ஆடை அற்றவன் அரைமனிதன் என்ற பொன் மொழியை மூத்த உலகம் தமிழிற்கும் சேர்த்துக் கொண்டது. மனித அடையாளத்தை ஏனைய விலங்கு இனத்தில் இருந்து நாகரிகம் வாய்ந்த மனித இனக் குழுமமாக மனிதனை உலகிடைத் தூக்கி நிறுத்தியது.

இவ்வாறு மனிதன் என்ற பண்பட்ட விலங்கு முழு மனிதன் என்பதாய் ஆடைத்தொழில் குழும அடையாளமாய் மனிதத்தை மீட்டெடுத்தது. அது பின்னைய மனித நாகரிகத்தில் கவர்ச்சியில் எழுந்தது. தலைமைத்துவம், சமூகப்பணிகள், இறை தொண்டு என நட்புறவின் அடையாளமாக ஆடைக்கலையை நிர்ணயம் செய்து. அவரவர் அடையாளத்தை அவரவர் பண்பாடு, கலாசாரம் என உலகிடைத் தூக்கி நிறுத்தியது.

மனித மானம் காத்தல், அழகியல், மனித கௌரவ வெளிப்பாடு, தட்ப வெப்பங்கள் கருதிய ஆடைப்புனைவு என்பதாக, மனிதப்பண்பாடு நாகரிகங்களில் இருந்து விடுபடாத வகையிலே ஆடைகள் மனிதனுடன் பின்னிப் பிணைந்தவையாகின.

## நாகரிக, பண்பாட்டுப் பெருங்குடிகள்

இன்றைய உலகம் தனது தொல்லியல் ஆய்வுகளில் பெறப்படும் களிமண்ணால் உருவாக்கி உடைந்த மட்பாபாண்ட ஓடுகள், பாத்திரங்கள் வழியே பூர்விக நாகரிக மனிதரை இனங்காண்பது கண்டு உயர் நாகரிக மனிதரின் செல்வாக்கு களிமண்ணால் குயம் செய்த நாகரிகம் வாய்ந்த சிறப்பான குடிகள் வழியே பெறப்பட்டது என உள்வாங்கலாம்.

அந்தந்த தொழில் குழும மனிதர் என்ற தேவையில் தத்தம் தொழில் இரகசியங்களை பாதுகாக்கவும், அதுவழி தத்தம் தொழில் குழுமம் ஏனைய குழுமத்துடன் சரி சமனான பொருளியல் நிலைக்கு நிமிரவும் அவர்களின் தொழில் சார் குழுமங்கள் தமது வருமானத்தை குறியாக வைத்து தத்தம் குடியிருப்புகளை இரகசியத் தொழில் ரீதியாக வேறுபடுத்திக் கொண்டனர்.

அவ்வாறான வேறுபடுத்தலில் தமது மதவழி தெய்விக ஒன்று கூடலுக்கென உருவாக்கிய தொழில் முறைத் தெய்வங்கள் வழி தமது மரபு காக்கப்படும் என்ற நம்பிக்கையில் மிளிர்ந்தனர்.

தமது வாழ்வாதார தேவைக்குப் பயன்படுத்தும் பொருட்களை, உற்பத்திப் பொருட்களை வீடமைத்தல் முதலான தொழில்முறைக் கலைகளை, சிலை சிற்பங்களை உருவாக்கும் முறைமையில் தேறி நாகரிக சமுதாயத்தின் எழுச்சிக்கு வந்து உலக முற்றத்தை அலங்கரித்தனர். காட்டு மிராண்டியம் நீங்கி நாகரிக குடிகள் என மனித உலகை தூக்கி நிறுத்தினர். பண்டமாற்று முறைமை என்றவாறு அவர்களது பொருளியல் பங்களிப்பு விரியப் பெற்று அதுவே முன்னைய சமூக நலனைக் காத்தது.

உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பதாய், தாம் செய்கை பண்ணிய சம்பா அரிசியைக் கொடுத்து உப்பு விளைவிப்போரிடம் இருந்து உப்பினை பண்டமாற்று முறைமையில் பெற்றனர்.

அவ்வாறே நீர்நிலைகளிலே பிடிக்கப் பெற்ற மீனைக் கொடுத்து சேலை நெய்வோரிடம் இருந்து ஆடை வாங்கும் முறைமை உருவானது. சீலையை விற்றும் சீலா (மீன்) வாங்கு எனத் தமிழிலே வழங்கும் பொன்மொழிகள் நடைமுறை வாழ்வை நகர்த்தின.

## உலோக காலமும் நாணய பிரயோகமும்

மனிதன் களிமண்ணால் உருவாக்கிய பானைகள், சட்டிகளை நெருப்பிலே சுடுதல் எனும் அந்த சூளை முறைமையில் தற்செயலாகக் கண்டுபிடித்த கரடுமுரடான தாதுக்களை நெருப்பிலே வாட்டும் காலம் ஆதி மனிதனை இரும்பு முதலான உலோக காலத்தில் நிறுத்தியது.

ஆரம்பத்தில் தாமிரம் என வழங்கப்பெற்ற செம்பு உலோகம் கண்டுபிடிக்கப்பெற்றது.

மனிதன் இயற்கைக்கும், சமூக மாறுதலுக்கும் ஏற்ப கற்களைப் பயன்படுத்திய பின்னர் ஏற்பட்ட நாகரிகத்தின் விளைவாக செம்பு, இரும்பு, தகரம், ஈயம், வெள்ளி, பொன் எனும் படியாக ஏனைய உலோக பாவனை காலத்தில் கால் பதித்தான்.

மனிதன் நாகரிகப் பாதையில் இரத்தினக்கற்கள் முதலாக பெறுமதி மிக்க ஆடம்பர அணிகலன்களாகவும் பொன், வெள்ளி உலோகங்களாகவும்

அணிந்தான். அவ்வாறே அவனது நாணயங்களின் பெறுமதிகள் செப்புக் காசு, வெள்ளிக்காசு, பொற்காசு என்பவையாக உயர்ந்தன.

மனிதன் மக்களைக் காக்க உருவாக்கிய அரசாட்சி முத்திரை அடையாளத்தை நாணயங்களில், முத்திரை மோதிரங்களில் பொறித்தான். கடல் கடந்து ஏனைய அரசுகளின் வணிகப் பொருள்களைப் பெறவும் அவனது உலோக நாணயங்களே வகை செய்தன.

அவன் தனது வேட்டை ஆயுதங்களை, போர்க்கருவிகளை, பாத்திரங்களை, வீடமைத்தலை, போக்குவரத்து வசதிகளை உரிய முறையிலே மரப் பலகைகளுடன் தான் கண்டுபிடித்த உலோகங்கள் கொண்டும் உறுதியாக்கினான். நிலத்திலும், நீரிலும் அவனது வணிகம் எனும் பொருளியல் வாழ்வுப் பயணம் தொடர்ந்தது.

உலோக வசதியற்றபோது, தனக்குப் பொருளீட்டித் தரும் மிகவும் அதிகூடிய பெறுமதியாகக் கருதப்பெற்ற யானைத்தந்தத்தை காசு வட்டத்தில் கடைந்து தம்மினத்தின் குழும அடையாளமிட்டு பெறுமதியான அத் துண்டங்களை நாணய பெறுமதியாகக் கருதி தகுந்த பாதுகாப்புடன் பத்திரப்படுத்தி வணிக தேவைக்கான நாணயமாகவும் கொண்டான்.

ஆடையணிகள் பொற்காசுகள் காவலரண், அரசகருவூலத்தில் கருவறைகளில் பாதுகாக்கப்பெற்றன.

பொருள் கொள்ளையர், திருடர்கள் அதி பயங்கர தண்டனைகள் அனுபவித்தனர்.

கொடிய நாகம் எனும் பாம்பின் தலையை நாணய அடையாளமாக்கி நாணயம் வெளியிட்ட நாகரிக மனிதன் தனது அரச சபையிலே உண்மையை நிரூபிக்க அல்லது பொய் உரைப்போரை இனங்காண பாம்புப் புற்றுக்குள் தமது கையை வைத்து சத்தியம் செய்ய வேண்டியும் சட்டம் வகுத்தான். உண்மை நேர்மையில் தேறிய நாகரிக மனிதனாக இனங்காணப் பெற்றவன் நாணயவான் அல்லது நாணயமானவன் என உயர்த்தப்பெற்றான்.

மனிதன் தனது வழிபடு மார்க்கத்தில் மிகுந்த பக்தி சிரத்தை கொண்டு இலங்கியமை உள்வாங்கப் பெற்று அரச சொத்துக்கள் தெய்வ நம்பிக்கை மிகு ஆலய கருவறையை அண்டிப் பராமரிக்கப்பெற்றது.

பண்டாரம் என்பது அரசின் பெறுமதி மிக்க பொக்கிசசாலைச் சொத்துக்களைக் குறிக்கும். அவ்வாறே கோயில் சொத்துக்களையும் குறிக்கும்.

பெறுமதி மிக்க நாணயங்கள், பொன் ஆபரணங்கள் ஆகியவை ஆலய கருவறைகளிலும், அரச கருவூல அரணிலும் இடம்பெற்றது.

இவ்வாறு மனிதப் பண்பாடு, நாகரிகம் துரித கதியில் வளர்ச்சியுற்றது.

## உற்பத்திப் பேரால் ஊதியம்

மனிதன் தனது உணவுப் பதார்த்தங்களின் சுவையை இனிப்பு, புளிப்பு, கசப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு என அறுசுவை ஆக்கிக் கொண்டு இன்றும் அனுபவித்து வந்தாலும் பண்டைய தமிழ் இலக்கிய வரலாறுகளும் பாரம்பரியமாக இதனை உணர்த்தவே செய்கின்றன. அவற்றிலே கடல் உப்பின் உபயோகம் உலகெங்கும் பிரதான இடத்தை வகித்தது.

உப்பில்லாப் பண்டம் குப்பையிலே உப்பிட்டவரை உள்ளளவும் நினை! என்பதான பொன்மொழிகள் உருவாயின.

நிலத்தை உழவுத்தொழில் செய்வோன் தான் விளைவித்த சம்பா அரிசியைக் கொடுத்து தனது சமையல் தேவைக்கு கடற்கரை உப்பளத்திலே விளையும் உப்பை கொள்வனவு செய்யும் முறைமை உருவானது.

இதுவே பின்னைய நாளிலே அனைத்துத் தொழில் செய்வோரும் பெறும் கூலிப்பணத்தை சம்பளம் என தமிழ் வழங்கும்.

அரிசியான சம்பா என்பதும் உப்பு விளைவிக்கும் பகுதியான அளம் (உப்பளம்)என்பதுடன் இணைந்து பின்னைய தமிழர் வரலாற்றிலே வேலைக்கேற்ற கூலிப்பணம் சம்பளப் பணம் (சம்பா, அளம்) என்றவாறு இன்றும் கூறப்பட்டு வருவது இது வகைத்தே.

இது போலவே, பூர்வீக உரோமாபுரி போர் வீரர்களுக்கான சம்பளமாகக் கடல் உப்பு வழங்கப்பட்டது.

உரோமாபுரி வீரர்கள் அங்காடியில் உணவு உட்பட்ட தமது தேவைக்கான பொருள்களை வாங்க உப்பைக் கூலியாகக் கொடுத்தே

ஏனையவற்றை கொள்வனவு செய்தனர். அதுவே உரோமர் தம் இலத்தீன் மொழியில் சம்பளம் எனும் சலறியம் (salarium) என ஆகி ஊழியர் வேலைக்காகப் பெறும் உப்புக்கூலி என அமைந்தது. பூர்வீக இலத்தீன் மொழியை மையமாக வைத்து பின்னர் தோன்றிய ஆங்கிலமும் சம்பளப்பணத்தை சலறி (salary) எனத் தாங்கி வருவதும் உரோமர் தம் முன்னைய உப்புக்கூலி எனும் தொடர்பினதே.

## பெருவணிகம்

மனிதனது உள்ளூர் அயலூர் வணிகம் ஆறுகள், கடல்வழி செல்லும் கட்டுமரம், தோணி, நாவாய், பாய்மரம் என வணிகப் பொருட்களைக் கொண்டு சென்று கடல் கடந்த பிற நாடுகளுக்கு விற்கும் முறைமை பெருவணிகமாக உருவெடுத்தது.

கடலிலே செல்ல பாய்மரங்களுடன் உலோகங்களின் உபயோகத் தாலான கப்பல்கள், நாவாய்கள் உருவாகின. பெருவணிகத் தொழில் மனிதரை நாகரிகத்தில் செழிப்புறச் செய்தது.

மனிதன் கடலிலே பயணித்து உலகின் பிற பகுதிகளுக்கு நகர்ந்து பெரு நகரங்கள், மாட மாளிகை கோபுரங்களில் வாழ்ந்த உயர் மாந்தர்களது உறவுகளுடன் கலந்து பரிமாறியதால் புதிய நாகரிக உலகம் உருவானது.

இவ்வாறு மனிதப் பண்பாடு, நாகரிகம் துரித கதியில் வளர்ச்சியுற்றது.

## தொழில் முறை ஆசான்கள்

உயிர்களின் பசி போக்கி வாழ உணவு, வெட்கம் மறைத்து மனித மானங்காக்க ஆடை, கவர்ச்சி, அழகு, அந்தஸ்து அல்லது பெருமை உயர்வு காட்டும் அணிகலன், தத்தம் சமூகம், தனித்துவமாக ஒதுங்கி வாழும் குடியிருப்பு என்பதாய் உணவு, உடை, உறையுள் என்ற அடிப்படைத் தேவைகள் என்னும் இவற்றுடனான அலங்கரிப்பு மனித உலகை மாண்புடன் வாழ வழிவகுத்தது.

காலங்காலமாக அவ்வவ் துறைகளில் அனுபவம் வாய்ந்து தத்தம் நுண்கலைத் தேர்ச்சியால் முழுமை பெற்றவர்கள் தொழில்முறை ஆசான்கள் என உருவாயினர்.

அது மட்டுமல்ல மனித நாகரிகம், சமூக மேம்பாடு என்ற அடிப்படைத் தேவைகளாய் தனது நாயக பாவத்திற்கு அடையாளம் வகுத்தது. அதுவழி உலக சமூக அந்தஸ்து என்பது உள் நுழையவே பெரு வசதி படைத்த நாகரிக பண்பாட்டு மனிதர் தத்தம் முத்திரைகளை தமது ஆடை அணிகலன்கள் வழி வெளிப்படுத்தி சீமான், சீமாட்டியராய் உயர்ந்து உலகிலே பவனி வந்தனர்.

## தொழில்முறைக் குலதெய்வ மரபு

அந்தந்த தொழில் முறைமைக்கென ஏற்ற தெய்வ சிருஸ்டிப்பு என்பதும் நாகரிக மனிதர் வழியே உருவாக்கப் பெற்றிருப்பதை பூர்வீக பண்பாடு, நாகரிகம் கொண்ட கிரேக்கம், உரோமம் முதலான முன்னைய பேரரசுகளின் இதிகாச, புராண, ஆதி வரலாறுகள் உணர்த்துகின்றன. விவசாயம், ஆடை, போர், கல்வி, இருப்பிடம், கைத்தொழில், செய்தி பரிமாற்றம் என அவரவர் தொழில்த்துறை முறைமையை வழி நடத்துவதற்கான தெய்வமே தத்தம் தொழில்முறை மரபை காத்தல் செய்யும் என்ற நம்பிக்கை அன்றைய நாகரிக சமுதாயத்திடை அவ்விதம் புகுந்து கொண்டது. **(Man kind's Search for god-p.41-48)**

தென் திராவிட மொழியான தெலுங்கினர் ஆட்சியிடும் ஆந்திராவின் பூர்விகப் பெண் தலைமையிலான அரசில் அவர்களது பெண் தலைமையே தொழில் முறைத் தெய்வங்களாக காவல், விவசாயம், முதலானவற்றில் பங்கெடுத்தனர். **(சமரசபூமி, சென்னை இளம்பிறை வெளியீடு பக் 144-145)**

கிரேக்க புராணம் உரைக்கும் கெரிகிளிஸ் என்ற தெய்வத்தன்மை பொருந்திய மகாவீரர் பாண்டி நாடு மதுரையை ஆண்ட பண்டேயா என்ற பெண் அரசிக்கு ஆண்டு முழுவதும் அவளது ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் இருந்து திறை எனும் பெரு நிதிபெற உதவினார் **( திருவருள்வாசகம்-பக்.210-219 - கலாநிதி ஜெ.குமாரசுவாமி, சிவபுரம் அறக்கட்டளை வெளியீடு.சென்னை-78)**

திராவிட மக்கள் தாய்வழித் தலைமையில் உருவாயினர். அவர்கள் தங்களது அறிவுரைகளுக்கு பாரம்பரியமாக குருவென ஏற்றதோ இன்றுவரை தொடரும் அவ்வை எனும் முதல்தாயே.. அவ்வாறு பெண் தெய்வ வழிபாடுகளே பூர்வீக தமிழ்நாட்டில் நின்று நிலைத்து வந்திருக்கின்றது.

தமிழரிடை வழங்கும் அவ்வை எனும் முதல் தாய் கீபரு மொழியில் எழுந்த ஆதியாகமம் கூறும் ஏவாளுடன் ஒத்த வடிவமே. அத்தகைய அவ்வை என்பவள் தாய்த் தெய்வமான காளி அல்லது கொற்றவைக்குச் சமமானவள்.

## தமிழர்தம் தாய், தந்தைத் தலைமை

உலகம் பெண் தலைமையில் இருந்து ஆண் தலைமைக்கு நகர்ந்ததை தமிழரது தொல்காப்பியம் பொய்யும் வழுவும் தோன்றிய பின்னே ஐயர் வகுத்தனர் கரணம் என்ப (தொல்காப்பியம் - பொருள் 145) என்ற சூத்திரத்தில் இருந்து அறியத் தருகின்றது.

பொய்யும் வழுவும் என்பது ஒரு ஆணுக்கு ஒரு பெண்ணே தாரம் என்பது மீறி பல ஆடவருடன் பெண்களது உறவுப் பரிமாற்றமும், அவர்களது நெறிமுறையற்ற வாழ்வு முறைமையும் ஆணினத்தை அடக்குமுறை செய்த பெண் தலைமையிலே அரசாட்சி நடைபெற்றதாக உள்ளடக்கம் பெற்று பின்னர் ஆண் தலைமை நடைமுறை உலகிற்குள் நுழைந்து கொண்டது.

இதனை இஸ்ரேலியரின் கீப்ரு புராணம் இவ்வாறு உரைக்கின்றது. ஆண்டவர் ஆதாமைப் படைக்கு முன் பெண்ணையே படைத்தார். முதல் மனிதத் தாயாக ஆண்டவரால் படைக்கப் பெற்ற லிலித் என்ற ஏவாளோ உக்கிரம் கொண்டவளாக இருந்தாள். அவளை கடலுக்கடியிலே அமிழ்த்திய ஆண்டவர் பின்னர் ஆதாமைப் படைத்தார். அவனது விலா எலும்பில் இருந்து ஏவாளைப் படைத்தார்.'

இஸ்ரேலியரின் லிலித் என்ற முதல் தாய் என எழுந்த புராணக்கதையும் அதன் பின் பிறந்த ஆதியாகமும் தாய்த் தலைமையில் இருந்து தந்தைத் தலைமை உருவான வரலாற்றை அவ்விதம் காண்பிக்க விழைகின்றது. இறைவனால் நசுக்கப்பெற்ற பெண்மை சாபத்திற்குள்ளான லிலித் என்பதாகி மரணதேவதையாக சிருட்டிக்கப்பெற்றாள். இஸ்ரேலியரின் லிலித் என்ற மரண தேவதையே தமிழரிடை காடுகிழாள் எனும் காளிதேவி அல்லது கொற்றவை எனும் மரண தேவதை ஆகின்றாள்.

தமிழரது தொல்காப்பியமும் வளமான நான்கு நிலங்களுக்கான அவ்வப் பிரிவு ஆண்கடவுளரை வேத ஆரிய முறைமையில் இனங்காட்டுகின்றது. அதற்கு முன் தோன்றிய சங்க இலக்கியமும் வரண்ட பாலை நிலக் கடவுளாக மரண தேவதையான காளி அல்லது கொற்றவையை இனங்காட்டுகின்றது.

தமிழரோ அரச சபையிலே புலவராக அறிவுரை கூறும் 1000 ஆண்டு வாழ்ந்த மூதாட்டியான அவ்வைப் பாடலில் வளர்ந்தவர்கள். அவ்வை நூல்கள் காலங்காலமாக பல புலவர்களால் அதே பெயரிலே செய்யப்பெற்றன என்பதை ஆய்வுகள் தெரிவிக்கும். **(அவ்வை யார்? கவிவேழம் பாரதிபாலன் ஈழமுரசு பாரிசு ஆண்டுமலர் 1995)**

தமிழர்தம் அத்தகைய பூர்வீக தாய் எனும் அரச சபைக்கு அறிவுரை கூறும் அவ்வை மூதாட்டியுடன் கீப்ருக்களின் ஏவாள், மற்றும் காளி முதலான தெய்வங்கள் தொடர்புடையனவே.

தமிழரின் தாய்த்தெய்வ வழிபாடு மறைந்து தந்தைத் தலைமைத் தெய்வ முறைமை என உருவானதை தொல்காப்பியமே, காடு, மலை வயல், கடல் என வளமான நிலங்களின் ஆண் தெய்வங்கள் கொண்டு இனங்காட்டுகின்றது. அது வேத ஆரியரின் சாயையில் வடமொழி வேத வழியையே ஏற்று தமிழர் தொல்காப்பியமாகி தமிழர் கடவுளரை இவ்வாறு இனங்காட்டுகின்றது.

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே.

(தொல்காப்பியம், பொருளதிகாரம்- 5)

இங்கே, காடு, மலை, வயல், கடல் ஆகிய வளமான நான்கு பிரிவு மக்களுக்கான ஆண் கடவுளர் பட்டியல் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனக் காண்பிக்கப்படுகின்றது.

காடு சார் பகுதி மக்களது இறைவனாக திருமால் அல்லது விஸ்ணு எனவும், மலைப்பகுதி மக்களது கடவுளராக குமரன் அல்லது முருகன் எனவும், வயல்சார் பகுதிக்கான கடவுளராக தேவர்களின் அரசனான தேவேந்திரன் எனவும், நீர் கடவுள் அல்லது கடல்சார் மக்கள் பகுதிக்கான தெய்வமாக வருணன் எனவும், வேத ஆரியப் பிரிவு வழி வைதிக மதம் உள்வாங்கியதான ஆண் கடவுளர் பட்டியல் மேற்படி தொல்காப்பிய சூத்திரத்தின் ஊடாக காண்பிக்கப்படுகின்றது.

இவ்வாறு ஆண் தலைமை ஆட்சி தமிழரின் பூர்விக தாய்த்தெய்வமான காளியை வரண்ட பாலைநிலப் பெண் கடவுளாக இனங்காட்டுவதைச் சங்கத்தமிழ் இலக்கியங்களும் காடுகிழாள், பழையோள் குழவி, காளி, கொற்றவை என இனங்காட்டுகின்றன. தமிழர் ஐம்பெருங் காப்பியங்களில் தெய்வமாக இருக்கும் சம்பாபதி என்ற பெண் தெய்வத்தை வணங்கும்படி, அகத்தியர் காவிரித்தாயைப் பணித்ததும், முன்னர் இறைவன் வகுத்த பழைய கோயில் என அகத்தியரே காளிதேவியை இனங்காட்டுவதும் தமிழ் பௌத்த காப்பியமான மணிமேகலையில் இடம்பெறுகின்றது.

சமண காப்பியமான இளங்கோவடிகள் செய்த சிலப்பதிகாரம் நெறிமுறையற்ற வைதிக பாண்டிய தமிழ் மன்னரின் நீதி தவறிய ஆட்சியினூடாக கண்ணகி மதுரையை எரித்த சம்பவம், தாய்த் தெய்வமான காளிதேவி கண்ணகி வழிபாடாக மீளவும் வழிபடு மார்க்கத்துக்கு வந்துவிடுவதை உணர்த்துகின்றது.

அம் முறைமை, ஆணாதிக்க வைதிக அடக்குமுறை ஆட்சியில், பாதிப்பிற்கு உள்ளான அவைதிக சமணம் மீளவும் முன்னைய தமிழரது பெண் தெய்வ வழிபாட்டை நிலை நிறுத்தி தமிழரை சிந்திக்க வைக்க உருவாக்கிய காப்பியமாகவும் ஏற்க வேண்டியுள்ளது.

## தமிழர்தம் தொழில் முறையில் சாதியம்

ஆதித்தமிழர் ஒருமித்த குடிகளாக உருவானவர்கள். ஏற்றத்தாழ்வறியா வழிமுறையிலே வளர்ந்தவர்கள். இவர்கள் ஆரம்பத்தில் பின்பற்றிய சமண மதமும், புத்தமதமும், அவர்களது ஊர் காவல் தெய்வ சிருட்டிப்புகளும் அவ்விதம் அவர்களை ஒன்றே குலம் என வாழ வகை செய்தன.

தமிழரது சமூக ஒன்றுகூடல்களை, அவர்களை உருமாற்ற எழுந்த பிற மத சக்திகளைக் களைய உருவான சமூக ஒருங்கிணைப்புக் கருத்துக்களையும் சங்க கால இலக்கிய செய்யுள்களும், சமண பௌத்த நூல்களும் சித்தர் பாடல்களும் உறுதி செய்கின்றன.

ஆனால் கட்டற்ற சுய விருப்புடன், பிரமச்சாரிய அவைதிக மதங்களுக்கு எதிராக இல்லற பாலியல் உணர்வுகளுடன் பிரச்சாரம் புரிந்த வட நாடு சார்பான வைதிக இந்து மதம் தனது ஆதிக்க அரசிலே ஏற்கனவே தமிழர் புத்த, சமண மதங்களில் இருந்தமை கொண்டு அவர்களை கீழ்த்தொண்டு செய்யும் அடிமையர் எனவும் சாதியிலே தாழ்ந்தவர்கள் எனவும் ஆக்கியது.

வட மொழியில் அடிமையர் என்பதற்கு "சூத்திரர்" எனவும் "விருசளா" எனவும் பொருள் கொள்ளப்படும்.

இன்றைய தமிழர் பெருமை கொள்ளும் தமிழுக்கென எழுந்த தொல்காப்பியமோ வடமொழி கொண்டு தமிழ்ச் சொற்களை உருவாக்கும் முறைமை பற்றிய சூத்திரத்தை இவ்வாறு கொண்டிருக்கின்றது.

"வடசொற்கிளவி வட எழுத்தொரியி எழுத்தொடு சேர்ந்து சொல்லாகும்மே" (தொல்காப்பியம் - சொல்லதிகாரம். 401)

இவ்வாறு தொல்காப்பியம் வட சொற்களை நீக்கியதாகி அவற்றை தமிழ்ச் சொற்களாக ஏற்றது.

அவ்வாறே, சூத்திரருடன் ஒத்து அடிமையர் என்பது குறிக்கும் வடமொழியின் "விருசளா" என்பதை தமிழர் தொல்காப்பிய சூத்திரம் வேளாளர் எனத் தமிழ்ப்படுத்தியது. (தமிழர் பண்பாடு - கம்பன் காவியம் 5ஆம் தொகுதி பக்.35- பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை)

அத்தொல்காப்பியமே "வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது இல்லென மொழிப பிறன்வகை நிகழ்ச்சி' என்பதாக வேளாளர்கள் உழுது உண்பது தவிர வேறெத் தொழிலும் செய்ய முடியாதெனும் சூத்திரத்தையும் வகுத்தது. (தொல்காப்பியம் - மரபு - 80)

வடமொழி பிராமண, சத்திரிய, வைசிக, சூத்திரர் (விருசளா) என பிரித்தபோது மனித உறுப்புகளாக அவரவர் வர்ணங்கள் வடமொழி போல கற்பிதம் செய்யப்பட்டது.

அவரவர் உடல் அவயவம் என்பதாய் பார்ப்பனிய சமூகம் குருக்களாக மக்களை காக்கும் மூளை கொண்டவர்கள் என்பதற்கான நிர்ணயத்தில் அவர்களை முகம் என அடையாளப்படுத்தியது.

சத்திரியர் நாட்டினை காக்கும் உடல் உறுதி கொண்ட போர் வீரர் என்பதன் அடையாளமாக தோள் அல்லது புஜம் எனும் உடல்வாகு கொண்டவராய் மன்னர் பரம்பரை உறுதி செய்யப்பெற்றது (சமணம் பௌத்தம் எனும் அவைதிக மதங்கள் தூய சத்திரியர் என்பதாய் பாகுஜா, பாகு (வாகு) என சத்திரியரைக் குறிப்பிடும்.)

வைசிகர் இறைவனின் தொடை என்பதாய் மனிதருக்குத் தேவையான உணவுப் பண்டங்கள் விற்கும் கடைவிரிப்போரை உணர்த்தியது.

சூத்திரர் அல்லது விருசளா என்பது கால் அல்லது பாதம் என்பதாக உழவுத் தொழில் முதலாக ஏனைய கைத்தொழில் முதலான தொழில் செய்வோரை அடிமையர் என ஏற்றது.

இவை வடமொழியில் இருந்து தமிழ்படுத்தப்படும்போது, தொல்காப்பியம் பிராமணர் என்பதை அந்தணராகவும், சத்திரியர் என்பதை அரசராகவும், வைசிகர் என்பதை வணிகராகவும், சூத்திரர் என்பதை வேளாளராகவும் தமிழுக்கென உருமாற்றம் செய்தது.

தொல்காப்பியம் விருசளா எனும் வடமொழியில் சூத்திரருடன் ஒத்த சொல்லாக கூறப்படும் அடிமையர் எனும் பொருள் கொண்ட சொல்லை ஏற்று அந்த அடிமையரைத் தமிழிலே வேளாளர் எனத் தந்தது. (Dravidian India- T.R. Sesha Iyengar -p.42)

எனவே விருசளா என்பது தமிழிலே தொல்காப்பிய விதிக்கமைய தமிழாக உருமாறி நாலாம் வர்ணமெனும் சூத்திரர் எனும் அடிமையர் உறவெனவே பொருள் தந்தது.

வைதிக சைவரான தேவார முதலியான திருநாவுக்கரசர் வேளாளர் சமூகம் என தமிழ்ச் சைவர் வைதிக வரலாறு தெரிவிக்கின்றது. நாவுக்கரசர் தனது கல்வியில் சிறந்தோங்க சமணராக மாறியவர். இறைவன் லீலையால் சைவராகவே உருவாகி வைதிக சிவ மதம் காத்தவர். இதனை தமிழர் சிவமதம் உரைக்கும்.

தேவார முதலிகள் என சிவன் புகழைப் பாடிப்பரவிய மூன்று தேவார முதலிகள் வரிசையில் முதல்வரான அந்தணர் மரபிலே பிறந்த திருஞான சம்பந்தர் இறைவனின் பிள்ளையாக சற்புத்திரர் என்ற மார்க்கத்தையும். பிராமண வழியில் பிறந்து அரச குடும்பத்தில் வளர்ந்து இறைவன் புகழ் பரப்பிய சுந்தரமூர்த்திநாயனார் இறைவனின் தோழர் எனும் (தம்பிரான் தோழர்) எனும் சகா மார்க்கத்தையும் வாகு ஈசர் எனும் திருநாவுக்கரசரோ சத்திரியர் எனும் குடியில் பிறந்து போர் நடைபெறாத காலங்களில் பகுதி நேரத் தொழிலாக உழவுத்தொழிலை ஏற்ற சமூகத்தவராக இருந்தே பின்னர் சமணம் தழுவினார். சமண துறவியாக இருந்து மீளவும் சைவராகி இறைவன் புகழ் பரப்பினார். வைதிக சைவரான அவரை, அடிமை எனும் தாசமார்க்கத்தில் இருந்து இறை தொண்டாற்றிய வேளாளர் என்பதாகவே சைவமதம் உரைக்கும்.

தொல்காப்பிய சூத்திரத்திற்கமைய உருவான 4ஆம் வருணமான வேளாளர் (விருசளா) உழவுத்தொழில் மட்டுமல்லாமல் ஏனைய தொழில் முறைகளையும் ஆற்றியவர்கள் என்பதை பெரியபுராணத்தில் வரும் பதினெண் குடியைச் சேர்ந்த நாயன்மார்களது சாதிய தொழில் முறைமை பற்றிய நாயன்மார் பிறப்பு வரலாறை திருவிக மேற்படி நாயன்மார் வரலாறு நூலில் வெளிப்படுத்தி நிற்கின்றார். (நாயன்மார் வரலாறு திரு. வி.கல்யாண சுந்தர முதலியார்.)

திருநாவுக்கரசர் சத்திரியர் மரபினர்.அவரது இளமைப் பெயர் மருணீக்கியார். சத்திரியரான அவர் வாகீசர் எனவும் கூறப்பட்டவர். அவரது தந்தையரின் பெயரை வடமொழி கீர்த்திபாகு எனத் தரவே தமிழ் வைதிக மதம் புகழனார் என அதனைத் தமிழ்ப்படுத்தியது. அவர், அரச படைத்தளபதியாக இருந்து இயற்கை எய்தியவர். (A HISTORY OF TAMIL LITERATURE- Prof. AVVAI S.DORAISWAMI Pillai (SAIVA LITERATURE-p.113, History of South India P.N.Chopra p.180-186)

நாவுக்கரசரின் தமக்கையான திலகவதியாரை மணமுடிக்க இருந்து போருக்கென வடநாடு சென்ற படைத்தளபதி கலியபாகு என வடமொழி குறிக்க தமிழிலே கலிப்பகையார் எனத் தமிழ்ப்படுத்திக் கூறப்பட்டவர் (கலிய என்பது யுத்த வீரர் அல்லது படைவீரர் என்பதைக் குறிக்கும்.) வட நாட்டு

போரிலே மரணமாகிறார். அக்கலிப்பகையாரின் வீரசுவர்க்கத்தாலேயே நாவுக்கரசரது தமக்கையான திலகவதியார் விதவைக் கோலமாகின்றார்.

வாகு அல்லது பாகு எனக் கூறப்படுபவர்கள் பாரம்பரியமாக சமண, பௌத்த மரபிலே உருவான தூய சத்திரிய மன்னர் பரம்பரையைக் குறிக்கும். ஆரிய வைதிகர் வழி அரசுரிமை ஏற்ற வடநாட்டு பார்ப்பனிய மரபுச் சர்மர்கள் வழி உருவாகிப் பின்னர் ஆட்சிபாரம் ஏற்ற தமிழக மன்னர்கள் வர்மர் என்னும் பெயராய் கோச்சடை வர்மன் பராக்கிரம பாண்டியன், நந்தி வர்மன் முதலாய் வர்மரை தங்கள் மன்னர் பரம்பரையாக வைத்து வைதிக மரபைக் காப்பவராக உருவான அரசுகள் பற்றி இந்திய வரலாறு தெரிவிக்கின்றது.

இதிலே காஞ்சி மாநகரில் அமைந்த நாலந்தா பல்கலைக்கழகத்தில் பயில வட நாடிருந்து வந்த பார்ப்பனிய சமூகத்தைச் சேர்ந்த மயூர சர்மன் தமது பிராமணிய கோரிக்கைக்காக தீவிரவாதியாகியதும், அவனது யுத்த தந்திரத்தால் அவன் கர்நாடகம் தமிழக தொண்டைமண்டல அரசுகளை வென்றதும் தனது பார்பனிய மயூர சர்மர் பெயரை மாற்றி மயூர வர்மர் என்ற பெயரில் மேற்படி நாடுகளை கைப்பற்றி ஆண்டதன் பின்னால் தென்நாட்டை ஆண்ட ஏனைய மன்னர்களும் வைதிகர் உறவை ஏற்க மேற்படி வர்மர் பெயர் தாங்கி ஆட்சி செய்த வரலாறுகளே நந்தி வர்மன் முதலான இந்திய வரலாறுகளாகின்றன. இதிலே பல தொல்லியல் சாசனங்கள் திராவிடத் தமிழர் கருதி கருநாடகத்தில் ஆய்வு செய்யாது மறைக்கப்பட்டுள்ளன. வைதிக பார்பனிய சாசனம் தீர்மானித்தபடி ஆட்சிபாரம் இவ்வாறு இடம்பெற்றாலும், தொல்லியல் ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்ட பூர்விக மதுரையின் கீழடி உள்ளிட்டதான இந்திய அரசின் தொல்லியல் மீட்பு வரலாறுகள், ஆதரவின்றி கைவிடப்படுவதாக தமிழ் அபிமான ஆய்வினர்களது கூக்குரல் இன்றும் கேட்டபடியேதான் உள்ளது.

## அவைதிக கந்தனும் வைதிக கந்தனும்

சமண பௌத்த அரசுகள் தமிழரை அரவணைத்த போக்கிற்கமைய சமண மரபிலிருந்து பின்னைய வைதிகர் மார்க்கத்தில் பிறந்த கந்தப்

பெருமானின் தளபதியாக கந்த புராணம் தெரிவிக்கும் வீரபாகு தேவரை அவைதிக உறவாய் வைதிகம் ஏற்றிருத்தல் வேண்டும்.

தமிழக வைதிக இந்து மரபில் வந்த மூவேந்தர்கள், மற்றும் தமிழ் நாட்டை ஆண்ட மன்னர்களது பெயர் வாகு என இடம்பெறாவிட்டாலும், ஈழத்தே பௌத்த சிங்கள மன்னர்களும் தமிழ் மன்னர்களும் மேற்படி பாகு பெயரில் அரசு வீற்றிருந்தவர்கள். இதற்கு விஜயபாகு, பராக்கிரமபாகு, புவனேகபாகு முதலான சிங்கள, தமிழ் மன்னர்களே உதாரணமாவர். தமிழ்நாடு இந்திய வரலாற்றிலே தூய மன்னர் பரம்பரைக்கு உரிய பாகு என்ற சிறப்புப் பெயர் மூடி மறைக்கப் பெற்றிருக்கலாம்.

எனவே திருநாவுக்கரசரது சிவமரபு சமணப் பரம்பரையில் இருந்தே வந்திருக்கிறது. அதனாலேயே அவரது சத்திரிய சமூகத் தூய்மை குறிக்க வாகீசர் (வாகு ஈசர்) எனவும் கொறுகையர் குடி முதலி பரம்பரை எனவும் சேக்கிழார் பெரியபுராண சிவமதம் தாங்கும்.

தமிழர்தம் தொல்காப்பியமோ வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது இல்லென மொழிப பிறன்வகை நிகழ்ச்சி என வேளாண் மக்கள் உழவு எனும் விவசாயம் தவிர வேறு தொழில் முறைகளை செய்ய முடியாதெனத் தெரிவிக்கின்றது. (தொல்காப்பியம் மரபு - 80)

தமிழ்நாட்டிலே அரச தளபதிகள், போர்ப்படைகள் தங்கள் நாட்டிலே போர் நடைபெறாத காலங்களில் பகுதிநேர உழைப்பாக வேளாண்மை, நெசவு முதலான பணிகளை ஆற்றி தங்கள் நாட்டு வளங்களைக் காத்தவர்கள்.

தமிழ் மன்னர் கால பழந்தமிழ் வரலாறுகள், காப்பியங்கள், இலக்கியங்கள் போர்ப்படையினர் பரம்பரைகளது போர்க்காலம் அற்ற பகுதிநேர தொழில் முறைமைகளையும் அவ்விதம் நிரூபிக்கும்.

அதுவழியே சத்திரியர் மரபென உணர்த்தும் வாகீசர் (பாகு ஈசர்) எனும் அப்பர் சுவாமிகள் பரம்பரையின் உழவுத்தொழில் முறைமையையும் தமிழ் சைவர் காப்பியமான பெரியபுராணம் விளக்கும்.

வடவர்வழி வந்த மனுஸ்மிருதியோ திராவிடர்கள் சத்திரியராக (அரச வம்சம்) இருந்து அடிமையர் எனும் விருசளா (வேளாளர்) நிலைக்குத் தாழ்ந்தனர் எனவும்: அவர்கள் ஆரம்பத்தில் அவைதிக மதங்களை (சமணம், புத்தம்) சார்ந்தமையாலேயே சத்திரியரில் இருந்து விருசளா (வேளாளர்) எனும் தாழ்ந்த குடிக்குத் தள்ளப்பட்டனர் எனவும் குறிப்பிட்டுள்ளது.

இது தவிர, நிலத்தினை உழும்போது அந் நிலத்திலே உயிர் வாழும் சிறு பூச்சிகள் எறும்புகள் போன்ற உயிரினங்கள் மடிவதால் விருசளாத் தொழில் எனும் வேளாண்மைத் தொழில் கடையர் தொழில் எனப் பிற்படுத்தப்பெற்றது என்பதையும் மனுஸ்மிருதி குறித்துள்ளது. வட இந்தியாவிலே வைதிக இந்து ஆட்சியால் அவைதிக மரபு ஒடுக்கங்கண்டது.

அவைதிகம் செயலிழந்த பின் முன்னைய அவைதிக அரசர் எனப் பெயர் தாங்கிய பாகு அல்லது பாகுஜா எனப்படும் அரச பரம்பரையினர் வழி வந்தோர் வட இந்திய வைதிகர் ஆட்சியில் அடிமையராகிட அவர்களை வைதிகர் வழி வந்தோர் அப்பரம்பரை மகளிரை விலைமாதர் என உருவாக்கி போகம் புரிந்தமை பற்றி சோப்ரா தென் இந்திய வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார்.

வைதிக சைவரான திருநாவுக்கரசர் எனும் வாகீசருடன் தொடர்புபட்ட சிவாலயமான வீரட்டானேஸ்வரம் அவர் முன்னர் சார்ந்த திகம்பர சமணத் தீர்த்தங்கரர் ஆன மகாவீரருடன் தொடர்புபட்டது. வைதிக சிவாலயமான இதன் தல வரலாறாகக் கூறப்படும் போது, அங்குளள சிவன் மன்மதனை எரித்தவர் எனவும் அவரது தேவி ஞானாம்பிகை எனவும் வைதிகர் வழயில் கூறப்பட்டது. அதுவே சமணர்தம் சிலப்பதிகார காப்பியத்தில் சமணர்களின் அருகக் கடவுள் காமனை வென்றவர். அவர் ஒலிப்பதோ ஞான பாதமாகிய திருமொழி.என மேற்படி சிலப்பதிகார நாடுகாண்காதை பக்.194-207) இனங்காட்டகின்றது.

இவை இவ்வாறு இருக்க வைதிக பதிவேடுகளின்படி ஆரம்ப சைவர் பரம்பரையில் இருந்த திருநாவுக்கரசர் சமணம் சேர்ந்து பிரதம துறவியாக இருந்தவர். நடக்கும்போது சிறு எறும்பு பூச்சிகள் நசுங்குண்ணாது மயிற்பீலியால் நடைபாதையை சமண முறைப்படி கூட்டி துடைத்தபடி

நடந்தவர். மீளவும் அவர். வைதிக சைவரானபின் ஆற்றிய தொண்டுகளில் உழவாரக் கருவி கொண்டு பூச்சி எறும்பு பாராது. புல் பூண்டுகளைச் செதுக்கி சிவாலயங்களை அழியாது காத்து தனது முன்னைய திகம்பர சமணமதம் மீறி வைதிக உழவாரத் தொண்டு செய்த சிவ அன்பராக வைதிக சைவர் வரலாறு அவரைப் போற்றிப் புகழ்வதென்பதும் சிந்திக்கப்பட வேண்டியதே.

## தேவர் உலக தொழில் மேதைகள்

ஆரிய வைதிகர் தம் ஏற்றத்தாழ்வு ஆட்சியில். ஏற்றத்தாழ்வு அறியாத பதினெண் தொழில் குடிகள் என்பது தென் தமிழ்நாட்டு அரசிலே தொழில் முறைத் தலைமை என்பதன் நிர்ணயிப்பாக எழுந்தது.

இது உழவுத் தொழில் உட்பட அனைத்து தொழில் மாந்தர்களும் வைதிக ஆரியர் கண்களில் விருசளர் அல்லது சூத்திரர் என அடிமையர் எனவே உருவெடுத்தனர்.

இதனால் தொழில் முறைச் சமூகங்கள் தங்கள் தொழில் முறையை உள்வாங்கி இறை உலகப்பணியாக தேவர்கள் உலகம் அல்லது இறைவன் இராச்சியத்தில் கடமை புரிந்த தெய்வங்கள் பரம்பரையில் தாங்கள் தோன்றியமையைக் குறிக்க தங்கள் குலமுறைத் தெய்வங்களை உருவாக்கி தமது சாதிய கீழ்மையை ஒழிக்கத் துணிந்ததும். அதற்காக தமது சைவர் குல முறைச் சின்னங்களை அணிந்து கொண்டதும் தென்நாட்டு வைதிக சைவர் வழியே வேரூன்றியது.

அதற்காக அவர்கள் தங்கள் கோத்திரங்களை இறையவர்.தேவருலக கோத்திரம் என்பது குறிக்கும் குல முறைமை உருவானது. அதுவழி தங்கள் குலமுறை சடங்கு சம்பிரதாயங்களை காத்தல் செய்ய விழைந்தனர்.(13) தமிழ்நாட்டின் வைதிக மன்னர் ஆட்சி பறிபோய் மீளவும் அவைதிக சமணர் ஆட்சி தோன்றியபோது. தமிழ் மன்னர் முடிசூடும் ஊர்வலங்கள். மற்றும் அரச வைபவங்களில் சமத்துவம் கருதி பதினெண் தொழில் குழும தொழில் முறை தலைமைகள் அவ் ஊர்வலங்களில் முக்கியத்துவப்படுத்தப் பெற்றிருந்ததை தமிழ் சமணர்தம் வரலாறு இனங்காட்டுகின்றது.

இத் தேவருலக சிருஸ்டிப்பு என்பது கடல் கடந்த நாகரிக நாடுகளில் இருந்த பெருஞ் செல்வாக்குப் பெற்ற அந்நிய தொழில்நுட்பவினைஞர்களை

ஆசான்கள் ஆக்கி அவர்களது அயலக பயிற்சியில் உருவாகிய உள்ளூர் கலைஞர்கள் பின்னர் அவர்களை தேவ தச்சர் முதலான குலமுறைத் தெய்வங்களாக ஆக்கி தாம் தொழில்முறை தேவ தச்சர் வழி தேர்ச்சி பெற்றவர்கள் என்பதனூடாக தமது உயர்வை உணர்த்த எழுந்தனர்.

அத்தொழில் முறை வினைஞர்கள் தம்மை தேவ தச்சர் எனும் விஸ்வகர்மா அல்லது மனு மரபினர் எனக் கூறி வருவதை புராண இதிகாசங்கள் பெருங் காப்பியங்கள் விளக்குகின்றன.

"விஸ்வ" என்பது உலகம் எனவும் "கர்மா" என்பது செய்பவர்கள் அல்லது தொழில் வினைஞர்கள் எனவும் ஆவதால் வடமொழியின் "விஸ்வகர்மா" என்பது தமிழிலே "உலக தொழில் வினைஞர்" எனப் பொருள்படும்.

ஆலயங்கள் உட்பட பெரும் மாடமாளிகை கூட கோபுரங்களை அமைப்பதில் அதிசிறந்த தொழில்முறை ஆசான்களை கடல் கடந்த நாடுகளில் கண்டு அவர்களிடம் தொழில் முறைக் கல்வி பயின்று அவர்களை இறைவன் உலகினர் எனும் தேவர்கள் என உயர்த்தி அவர்கள் மரபிலே வந்தவர்களாக தமது தொழில் முறைக் குழுமத்திற்கு அடையாளமிட்டதை தேவ தச்சன் எனும் விஸ்வகர்மா, மயன் வழிமரபு என்பது நிரூபணமாக்குகின்றதா?

பூர்விக அமெரிக்கா மெக்சிக்கோவின் தொல்லியல் ஆய்வுகளில் பெறப்பட்ட கட்டட இடிபாடுகள், பெரு நாகரிகம் சமைத்த மாயன் இனத்தவருடனான பூர்விக தொடர்பே தமிழர் புராண சம்பவ வழி மயன் என்ற தேவ தச்சர் என அவர்களை இனங்காட்டுகின்றது. ஆரியருக்கும் திராவிடருக்கும் மயன் பெருமாளிகை அமைத்துக் கொடுத்தமை பற்றி இந்திய இதிகாச புராணங்கள் உணர்த்துவதோடு இலங்கையை ஆண்ட சிவபகத்தனான பத்துத் திக்கும் புகழ் பரப்பிய ஈழ அரசன் இராவணன் பூர்விக அமெரிக்காவின் மாயன் வழி வந்த மண்டோதரியை மணந்தான். மாட மாளிகை கூட கோபுரங்களுடன் ஈழத்தைக் குபேரபுரியாக்கிய மாயன்கள் இராவணனுக்கு புஸ்பக விமானமும் வழங்கினர்.

சர்வதேச வணிக மையமான திருப்பெருந்துறை எனும் மாந்தையில் (மாசந்தை என்பதே மாந்தை எனக் கூறப்படுவது) மாயன்கள் ஆட்சி இடம் பெற்றது.

ஈழத்தை நெருங்கும் கடற்கொள்ளையர் அல்லது ஏனைய நாட்டு எதிரிகளது கப்பல்களை கரை நெருங்க விடாது கடற்பாறையில் மோதி அழிய காந்தக்கோட்டை உத்திகள் அவர்களது கைவண்ணத்தால் உருவாக அம் மாயன்கள் ஆட்சி திருப்பெருந்துறை எனும் அம்மாதோட்டத்தை வணிக மையமாக்கி ஆண்டது. பெருந்துறை எனப் பொருள்படும் மாதோட்டம் சிங்கள மொழியிலே மாதொட்ட(மா-பெரிய: தொட்ட துறை) என வழங்கும். இது பௌத்த பாளிமொழியின் மாதித்த (மா-பெரிய: தித்த (துறை) என்பதில் இருந்து பிறந்ததாகும்.

## ஒருங்கிணையாத வேற்றுமை உறவுகள்

உலகின் ஆரம்ப மனிதன் வரலாறு நாகரிகப் பாதையில் இனங்காட்டப்படும்போது. இன்றும் நாகரிகம் அடையாது காட்டு மிராண்டிகளாய் வாழும் அநாகரிக மனிதர் வாழ்வு நிலை கொண்டே இதுவரை ஆரம்ப மனிதனது மேற்படி நாகரிக வரலாற்றை மேலே குறிப்பிட்டவாறு கட்டி எழுப்பலாம்.

அதற்கு தொல்லியல், வேத புராணங்கள் துணை நிற்கலாம்.

மனிதனிடை காணப்பட்ட, இன்றும் காணப்படும் பிரிவினை பேதங்கள், கடல் கடந்த பிற வணிகத் தொடர்புகள், நிற, மொழி, மத, காலநிலை, பண்பாடு, கலாசார மாறுபாடுகள் என அவர்களது அறிவியலும் ஆரம்ப மனிதவழி ஒருங்கிணையாத போக்குகளை இனங்காட்டியே செல்கின்றன.

காலங்காலமாக இடம்பெற்று வந்த மதப்போர் அவர்களது பிரிவினையை உணர்த்தினாலும், மதவழி காணப்படும் ஒரே பெருள்படும் புராண இதிகாச வரலாறுகள் அவர்களது பூர்விக சமூகத் தொடர்புகளை இனங்காட்டவே செய்கின்றது.

வருண வேறுபாடு, மனிதப் பிளவுகள், ஒருங்கிணையாத் தன்மைகள் ஆய்வுலகிலே இன்னும் கேள்விகளை எழுப்பியபடியும் உள்ளது.

கூர்ப்பு, டிஎன்ஏ (மரபணு) கோமோசேப்பியன் (குரங்கு மனிதன்) என்றவாறான இன்றைய அறிவியல்,ஆய்வியல் சொற்பிரயோகங்களை

விளக்கவரும் மனிதனோ முழுமை பெறாத ஊகங்களாகவும் சிலவற்றை கருத வேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்படுகின்றான்.

மனித நிறக் கலவைகள், ஆழ்கடலடி, நிலத்தடி ஆய்வுகள், தட்ப வெப்பம் காரணமாக அந்தந்த வர்ணக்கலவை என உருவாகி வந்திருப்பதான முடிவுகள் அறிவுலக, மனிதவியல், மதவழி ஆய்வுகள் கூறிவருவது உரிய முறையிலே இன்னும் நிரூபிக்கப்படாத ஊகங்களாகவும் கருத முடிகின்றது.

## தட்ப வெப்ப சூழ்நிலையும் பண்பாடு நாகரிகமும்!

பண்பாடு, நாகரிகம் எனப் பேசப்படுபவை தட்ப வெப்ப சூழ்நிலைக்கு ஏற்ப உருவாகிக் கொள்வதை புவியியல் விஞ்ஞான அறிஞர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

"உலகின் தட்ப வெப்ப சூழ்நிலைகளே அந்தந்தப் பகுதி மக்களின் வாழ்வு முறைகளை வகுத்து வந்திருக்கின்றன" என கிரேக்க நாட்டின் முன்னைய அரிஸ்ரோட்டில் முதலான அறிஞர்களும் தெரிவித்துள்ளனர்.

ஒரு சமுதாயத்தின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் முடிவு செய்வதில் தட்ப வெப்பமே முதலிடம் வகிப்பதாகக் கூறும் அமெரிக்கப் புவியியல் ஆய்வினர் பின்வரும் முடிவுக்கு வந்துள்ளனர்.

மனிதரது மனது 38 பாகைக்கும் 64 பாகைக்கும் இடைப்பட்ட ஒரு கால நிலையில் தான் உற்சாகமாக வேலை செய்யும்.

75 வீத அளவினதாக காற்றின் ஈரப்பசை இருப்பது நாகரிக வாழ்க்கைக்கு பெரிதும் பொருந்தும்.

மனிதனது தெம்பு மாறுவதையும், வலுப்பெறுவதையும் அடிக்கடி நிகழும் மழை, வெள்ளம், வெயில், குளிர், கோடை எனும் இயற்கை மாற்றங்களே தீர்மானிக்கின்றன. இவ்வாறு அமெரிக்கப் புவியியல் அறிஞரான எல்ஸ்வெத் கன்ரிங்கன் (Ellsworth Huntington) அவர்களின் கூற்று அமைகின்றது.

எனவே குளிர் நிறைந்த துருவப் பிரதேசம், வெப்பம் மிகுந்த சகாரா, தார் பாலைவனப் பிரதேசங்களின் பண்பாடுகளில் உள்ள வேறுபாடுகளுக்கு அவரவர் வாழும் சூழ்நிலையே காரணம்.

இவ்வாறான அவரவர் சூழல் முறைமைகளைத் தாண்டி அவர்களது வாழ்வு முறைமைகளில் புகுந்துகொண்ட தற்காலிக நடைமுறைமை என்பது பொருளியல், இயற்கைச் சீற்ற இடப்பெயர்வு, மதப் பிரசாரம் என்பவை அவர்களது வாழ்வு முறைமைகளை உலகத்தோடு ஒட்ட வழி நடத்தி இருக்கலாம். ஆனால் மாறுபட்ட தட்ப வெப்ப சூழ்நிலைகளை மீறி உருவான மனித வர்க்க ஆழ்ந்த அறிவு, உலகைப் புதுமையாக சிருஸ்டித்து வருவதுடன் புதிய கண்டுபிடிப்புகளால் உலகைப் பிரமிப்பிலே ஆழ்த்தவும் செய்கின்றது எப்படி?

பிற கிரகத் தொடுமானம் ஏதோ அவ்வாறாக அத்தகைய அறிவு ஜீவிகளை பூமியிலே புதுமை புகுத்துவதாய் உருவாக்கி வந்திருக்கின்றதா?

## பிற கிரகவாசிகளால் மனித உலகு உருவானதா?

பூர்விக நாகரிக மனிதரிடம் உருவான, குறிப்பாக இந்திய இதிகாச புராணக் கதைகளில் காணப்படும் தேவர்களது உலகு. அங்கே ஊர்வசி, ரம்பை ஆடலழகியர், நாரத வீணை அவை மட்டுமா?

இன்றைய உலகின் அணு ஆயுதத்தை ஒத்த நாகாஸ்திரம், பிரமாஸ்திரம் என ஆன உலக அழிவு சாதனங்கள். இவை எல்லாமே புராதன உலகிலே இருந்து அழிந்து பின்னர் உருவானதே இன்றைய புதிதான பின்தங்கிய உலகம் என்பதை பூர்விக மக்கள் பக்தியுடன் தங்கள் புராணக்கதை வழி இனங்காட்டி வருகின்றனரா?

அவ்வாறே, பூமியில் ஏனைய நவக்கிரகங்களது வழிபாட்டு முறைமைகளும்,கோயில் கோபுரம் முதலான கட்டுமானங்களில் பேசப்படும் விமானம் முதலானவைகளும் உலகம் முன்னர் கண்டுபிடித்து நாகரிகச் செல்வாக்குச் செலுத்தி பின்னர் பிரளயத்தால் அழிந்த உலகின் சம்பவத் தொடரே அத்தகைய புராணக் கதைகளென வழிபாட்டு முடிவுக்கு வரவேண்டியுள்ளதெனவும் ஏற்க வேண்டும்.

பூர்விக நாகரிக உலகமே பின்னைய சந்ததிகளால் மீளவும் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் தத்தம் வேத புராணங்கள் ஊடாக பூர்விக சம்பவங்களை தேவருலக சிருஸ்டிப்பு என ஆலய வழிபாடாய் உருமாறி இருக்கலாம். அதுவே, மத குருமார் தங்கள் மதத்தை காக்க தவறாக பக்தரிடம் தட்சணை ஏற்று அதற்கு இறையம்சம் கற்பித்து வருவதாக முன்னவையே உணர்த்தும் சான்றாக ஏற்கலாமா?

இந்த பூமிக்கு பறக்கும் தட்டுகளில் பிற கிரகவாசிகள் வந்து செல்வதாகப் பேசப்படுகின்றதே?

அந்த அதி சக்தி வாய்ந்த அபூர்வ பிறவிகளின் ஆற்றல் எம்மவர் வாழும் இந்த மனித உலகை உருவாக்கி இருக்கலாமா?

அல்லது அப்பிற கிரகவாசிகள் பூமியில் வாழும் மனித உயிர் அம்சங்களில் ஊடுருவும் சக்தியினாலேயே முன்னைய அநாகரிக மனிதன் நாகரிகனாக உருமாறி புதிய கண்டுபிடிப்புகளால் உலகை உருவாக்கி வருகின்றானா?

இந்த பூமியில் இன்றைய அறிவியலையே குழப்பும் வகையில் பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தொல்லியல் ஆய்வுகள் அதி தொழில் நுட்பம் நிறைந்த பூர்விக கட்டட நிர்மாணிப்புகள் கடலுக்கடியிலும் பூமிக்கடியிலும் அதியற்புதம் வாய்ந்தவையாக இன்றும் இனங்கண்டு பேசப்படுகின்றது.

இன்றைய விஞ்ஞான அறிவியல் சந்ததியே மேற்கொள்ள முடியாத அச்சமிகு அறிவியல் அம்சங்கள் அவற்றிலே தொக்கி நிற்பதாகக் கூறப்படுகின்றது.

பயணப்படும் கப்பல்களோ வானூர்திகளோ இன்றும் உலகின் சில குறிப்பிட்ட பிரதேசத்தால் செல்லும்போது. ஏதோ அபாய அறிவிப்பு அவசர சமிக்ஞை செய்து அவற்றை மீட்க முடியாதபடி மாயமாக மறைவதும் எதுவித சமிக்ஞைகளையும் உணராத தன்மையும் ஏற்படக் காரணமென்ன? அவை பற்றிய அறிவு இன்றைய உலகிற்குப் போதாது இருப்பதேன்.

அவ்வாறானால் பிற கிரகத்தில் வாழும் அதி அற்புதம் வாய்ந்த. மனித சக்திக்கு அப்பாற்பட்ட பிறவிகளின் அசைவுகளோ. தாக்கங்களோ இப் பூமிவாசிகளை இவ்வாறு கட்டிப்போடுகின்றதா?

இந்த பூமி மனிதருக்கும் மேலான அதீத அறிவியல் கொண்ட பிற கிரக வாசிகளின் சிந்தனைச் சிதறல்கள் இந்த உலகத்தில் மனிதரை தமது அதீத சக்தியால் அவரவர் குணவியல்புகளுடன் பொருத்தி நவீன உலகைத்

தோற்றுவித்தும் இருக்கலாம். அப்பிற கிரகவாசிகளின் அறிவியல் பெறுமதி மிக்க அலைகளை மனிதப் பிறவிகளில் பாய்ச்சி மனிதரைக் கொண்டு நவீன சிந்தனை உலகைக் கட்டிக் கொண்டும் இருக்கலாம். அல்லது அறியாமை காழ்ப்புணர்ச்சி கொண்ட சர்வாதிகாரிகள் கொண்டு உலகை அழிவுப் பாதைகளில் நிறுத்தி வருவதாகவும் ஏற்கலாம்.

அதி அற்புத அறிவியல் வளன் பெற்ற இன்றைய விஞ்ஞானம் காட்டும் கண்டுபிடிப்புகளில் பிற கிரக வாசிகளின் சிந்தனைப் பொறிகள் இப் பூமி மனிதரது அறிவியலுடன் காலங்காலமாக கலந்து புதுமை புகுத்துவதாய் புகுந்து இன்றைய விஞ்ஞானத்தை அற்புதமாகக் கொண்டு செல்வதாக ஏற்கலாமா?

## மானிடவியல் தமிழர்

மானிடவியல் ஆய்வுகளோ திராவிடரான தமிழர் தட்ப வெப்பம் காரணமாக ஆபிரிக்கரை ஒத்த கருநிற வடிவம் என கூறும். ஆனால் தமிழரது ஒரே குடும்பத்து நிறமோ பொதுவாக ஆபிரிக்க கருநிறமாக மட்டுமல்ல தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், ஐரோப்பியம் முதலாகவும் காணப்படும் பன்னிற தோற்றம் மானிடவியலை மீறி உருவெடுத்ததன் காரணமென்ன?

காலங்காலமாய் ஏற்பட்ட தமிழரது பல்லினக் கலப்பு அவர்களது நிறங்களை மாறுதல் செய்திருப்பதே காரணம். அவர்களது மூதாதையரது கடல் கடந்த பிறமாந்தத் தொடர்புகள் பொருளியல் முதலான பின்னடைவை ஈடுசெய்யும் மறைமுக முறைமைகள் பெண்கள் மீது அந்நிய நாட்டுச் சூறைகள், முதலானவற்றையும் கூறிக் கொண்டே போகலாம்.

ஆனால், தமிழர் போன்ற ஆசிய நாட்டவர் தவிர பிற கண்ட, மக்களது நிறங்கள் கருப்பு, மஞ்சள், வெள்ளை முதலான நிறங்களில் தமது இனத்தின் வடிவைத் தக்க வைப்பது எங்ஙனம்? இவை உலகின் முன்னைய புனித நூல்கள் வழி பேசப்படவில்லை.

மனிதர் மொழி வழி பிரிந்த வரலாறு மட்டுமே கிறித்தவருக்கும் இசுலாமியருக்கும் பொதுவான ஆதியாகமம் எனும் பழைய ஏற்பாட்டிலே.

## மனிதப் பிளவுகள் உலக மதங்களில்?

ஆரம்ப மனிதர் கிளைகளாய் பிரிந்த வரலாறும், அவர்களது மொழிகள் தாறுமாறாகி ஒருவரையொருவர் புரியாத மொழி பேசும் நிலையும் ஏன் ஏற்பட்டது என்ற வரலாறும் கிறித்தவர்களுக்கும் இஸ்லாமியருக்கும் பொதுவான ஆதியாகமம் எனும் புனித வேதமான பழைய ஏற்பாட்டு வழி இவ்வாறு உள்வாங்கப்படுகின்றது.

இறைவனால் படைக்கப்பெற்ற மனித பரம்பரை இறைவனை மறந்து தனது அறிவியல் சிந்தையை மேலோங்க வைத்தது. இறைவனை மறந்த தமது அதிகூடிய அறிவாற்றலால் தமது தொழிநுட்பங் கொண்டு வானைத் தொடும் அளவுக்கான கோபுரம் ஒன்றைக்கட்ட விழைந்தபோது, இறைவன் மிகுந்த ஆத்திரமடைந்தான்.

உலக மாந்தர் புரிந்து பேசிய இறைவனால் படைக்கப்பெற்ற ஒரே மொழியினை இறைவன் தாறுமாறாகக் குழப்பினான். அதனால் மக்கள் தங்களுக்குள் சச்சரவாகினர். அனைவரும் இணைந்து கட்டிய உயர் கோபுரம் தொடர்ந்து கட்டப்படாது போனது. அவர்களது ஒரே மொழி தாறு மாறாகிட மொழிகள் புரியா மக்களாகி தங்களுக்குள் சண்டையிட்டு எதிரிகளாய்த் தூரப்பிரிந்தனர். மனித குழுமம் உடையுண்டு தூரப்பிரிய தன்னை மறந்த அவர்களது மொழிகளை தாறுமாறாக்கிய இறைவனது கடுங்கோப ஏற்பாடே காரணம்.. ''

"... நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப் போகாதபடிக்கு நமக்கு ஒரு நகரத்தையும் வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லிக் கொண்டார்கள். மனுபுத்திரர் கட்டுகிற நகரத்தையும் கோபுரத்தையும் பார்க்கிறதற்குக் கர்த்தர் இறங்கினார். அப்பொழுது கர்த்தர் இதோ ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள்.அவர்கள் அனைவருக்கும் ஒரே பாசையும் இருக்கிறது. அவர்கள் இதைச் செய்யத் தொடங்கினார்கள், இப்பொழுதும் தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபட மாட்டாது என்று இருக்கிறார்கள். நாம் இறங்கிப்போய் ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு அங்கே அவர்கள் பாசையைத் தாறுமாறு ஆக்குவோம்" என்றார்.

**அப்படியே கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணினார். அப்பொழுது நகரம் கட்டுகிறதை விட்டுவிட்டார்கள். பூமியெங்கும் வழங்கின பாசையைக் கர்த்தர் அவ்விடத்தில் தாறுமாறு**

**ஆக்கியபடியால் அதன்பெயர் "பாபேல்" எனப்பட்டது. கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின் மீதெங்கும் சிதறிப்போகப் பண்ணினார். (ஆதியாகமம், பழைய ஏற்பாடு அதிகாரம் II)**

மனிதப் பிறவியர் மொழிகள் பல கூறாகப் பிரிந்த வரலாறு ஆதியாகமம் வழி இவ்வாறு இருக்க, தொன்மைச் சிறப்பு மிக்க தமிழர்தம் சிவ வழிபாட்டினை ஏற்கும் சைவ சமய மதநூலான திருவாசகம் மனிதப் பிறவி எய்துமுன் மனிதன் கடந்து வந்த பாதைகள் எவை என்பதை இறைவனிடமே விழித்து ஏங்கும் திருவாசக தோத்திரம் உயர்திணைக்கு வருமுன் அஃறிணை உயிரியாகவும் மனித ஜென்ம தோற்றத்தை இவ்வாறு விபரிக்கின்றது.

**"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி**
**பல் விருகமாகி பறவையாய் பாம்பாகி**
**கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்**
**வல் அசுரர் ஆகி முனிவராய் தேவராய்**
**செல்லா நின்ற இத் தாவர சங்க்மத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்"**

சிவனை முழுமுதற்கடவுளாக ஏற்ற தென் தமிழ் நாடான மதுரையில் திருவாசகத் தமிழ் தந்த மாணிக்கவாசகர் சுவாமிகள் மனிதனோடு ஒத்த ஏனைய உயிரிகள் பிறப்புப் பற்றிய பின்னணியை தனது இறைவனிடம் அ.:.றிணை வடிவிலும் மேற்கண்டவாறு தோத்திரம் புரிகின்றார். மேற்படி மணவாசகரது தோத்திர அடிகளில் தாவர சங்கமம் என வரும்பகுதிக்குப் பொருள் கொள்ளும்போது, தாவரம் என்பதற்கு யாழ்ப்பாணம் நா.கதிரவேற்பிள்ளையின் மொழியகராதி எழு பிறப்பு என்பதை இட்டிருக்கின்றது.

இவை ஒருபுறமிருக்க, இரசாயனக் கலவை உலகப் பந்தை ஏதோ ஒரு மாபெரும் சக்தியே மூலப்பொருளாக நின்று உயிரிகள் உருவாவதன் பின்னணியை நிருபிக்கின்றதா?

இவ்வாறு நாத்திகம் உரைக்கும் அறிவியலுலகம் தேடிக் கொண்டு இருப்பதாகக் கூறும் அவ்வகைக் கூற்றினூடாக மனித இனம் ஏற்பது

ஒரே அந்தம் என்ற முடிவை தமிழ்ச் சைவரான மணிவாசகர் எனும் சிவனடியாரே மீட்டாரா?

உலகம் இதுவரை ஏற்ற பிற புனித மத நூல்கள் கூறுவதுபோல, இறைவன் தனது சாயலொத்து மனிதனைப் படைக்கவில்லையா?

## அறிவியல் சந்ததியும், ஆண்டவர் மறுப்புக் கொள்கையும்

இன்றைய அறிவியல் சந்ததியினர் "உயிரினம் உருவானதற்கு புரோட்டோ பிளாசம், (Protoplasam) என்ற இரசாயன கலவையில் உருவான புரதமே காரணம். என்கிறார்கள்." உலகையும் அதில் வாழும் உயிர்களையும் படைத்தது இறைவனே அல்ல இறைவன் அவர்களை தனது சாயலொத்துப் படைக்கவில்லை. அனைத்து உயிர்களும் ஒரே சமயத்தில் தோன்றவில்லை'' என்கிறார்கள்.

புரோட்டோ பிளாசம் என்பது என்ன?

'உயிர்ப் பொருள்களின் கலங்களில் உள்ள ஒளி ஊடுருவும் நிறமற்ற கூழ் போன்ற உயிர்வாழ இன்றியமையாத சத்துப் பொருளே புரோட்டோப் பிளாசம் எனப்படுவது.

அதிலிருந்து மனித உயிர் எவ்வாறு உருவாகிற்று?

அதற்கு உயிரியல் விஞ்ஞானியர் தரும் விளக்கமோ, உலகம் சூரியனில் இருந்து பிரிந்தபோது நெருப்புக்கோளமாய் இருந்தது.

அதனைச் சுற்றி கரித் துகள்கள் படலமாக ஆகாயம் போலச் சூழ்ந்திருந்தது. காலஞ்செல்லச் செல்ல அது பூமியின் உலோகக் குழம்பில் கலந்தபோது, பிறந்த மிகுந்த வெப்பநிலையில், நீராவி, கரி, இரும்பு ஒருங்குசேரவே, கார்பைட்டுகள் என்பதான கூட்டுப்போருள் பூமியில் உருவாயின.

அவை, ஐதரசனுடன் சேர, கார்பன், நீர் பொருள்கள் உருவாயின. அதன் பின்னர் சிறிது காலஞ்செல்ல அமோனியா உருவாயிற்று. இந்த இரசாயனப் பொருள்கள் எல்லாம் அப்பூர்விக காலத்தே கடலிலே கரையவே அதன் சேர்க்கையால் உருவான பல புதிய பொருட்களாய் முதலில் தோன்றியவையே எளிய அமைப்புடன் கூடிய புரதங்கள். இவற்றின்

அமைப்பு சிக்கலாகிட, இவற்றிற்குப் பல புதிய பண்புகள் எற்பட்டது. அத்தகைய இரசாயன மாற்றத்தில் பிறந்த சிக்கலான ஒருவகைப் புரதமே 'புரோட்டோ பிளாசம்' எனும் உயிர்ச்சத்து. அவ்வாறான புரோட்டோ பிளாசம் எனும் உயிர்ச்சத்துவழி உருவானதே இன்றைய உலகின் மனிதர் உள்ளிட்ட உயிர்கள்''

இவ்வாறான அறிவியல் உலகால் ஆன்மிகப் பாதை பின்தள்ளப் படுவதனை சீர்செய்வதாகவோ இறைமார்க்க வழி ஒருங்கிணைந்த உலகினூடாக மேற்படி அனைத்து உயிரியும் இறைவன் வகுத்த இரசாயனக் கலவையில் இருந்து உருவானதே இந்த உலகம் என்பதனை தென்னாடுடைய சிவனே எந்நாட்டவருக்கும் இறைவன் என்ற மணிவாசக சுவாமிகளது கூற்று வழி மனித ஆன்மிக சிந்தையூடாக இரசாயனக்கலவையில் மனித உயிரியின் சிந்தை புரட்டோ பிளாசமே என்பதை வரவேற்பதாகவும் கூறலாம்.

ஆரம்ப காட்டுமிராண்டிய மனிதரது அதீத அறிவியல் வளர்ச்சியும் அதுவழி பிறந்த ஆன்மிக கோட்பாடுகளும் அவரவர் சுய மதக் கட்டுக்குள் உருவான பண்பாடு, கலாசார வாழ்வியல் வரலாறுகளின் மீள் பரிசீலனைகள் மனித உயிரியை வேற்றுலக சிந்தைவழி இட்டுச் செல்ல ஏவுவதாகவும் கூறலாமா?

## மதக் கூட்டில் உலகம்

உலக நாடுகளில் உள்ள மதங்கள் வழி தோன்றிய பூர்விகக் கதைகள், இதிகாச, புராணங்கள் தத்தம் வழிமுறைக்கேற்ப உலகின் பிரளய வரலாற்றை மாறுபட்ட கோணத்தில் தெரிவிப்பதன் காரணமென்ன? பூர்விக உலகின் புனித மதவழி உருவான புராண இதிகாச சம்பவங்களும் முன்னர் நடந்தேறிய சில பாரம்பரிய நடைமுறைகளை முன்வைக்கின்றனவா?

மேற்படி புராண வரலாற்றுச் சம்பவ வழி உருவானவை பின்னைய சந்ததிகளால் பிற பல நம்பிக்கைகளாக்கப் பெற்றன. அவரவர் மதங்களில் உருவான சம்பவங்கள் உள்ளடக்கப் பெற்ற புனித நூல்களே அதற்குச் சான்று பகர்கின்றன.

கிறித்துவ ஆதியாகமத்தில் நோவாவின் கப்பல்... பிரளயத்திற்கு தப்பி உயிரினங்களுடன் கரைசேர்ந்த நோவா குடும்ப மனிதரோ எண்மர்..

மேற்படி ஆதியாகமத்துடன் ஒத்ததாக இந்துக்களின் மச்சய புராணம், அக்னிபுராணம், சதபதப் பிரமாணம் ஆகியவையும் பிரளயத்தில் எண்மர் தப்பிய வரலாற்றை கூறிக் கொள்ளும்.

தென் தமிழ் நாட்டிலே தமிழ் சைவர்களின் மதவரலாற்றை சிவ பக்தரான திருஞானசம்பந்தர் ''தோடுடைய செவியன்'' எனத் தொடரும் தமது முதல் தெய்விக தோத்திரவழி இனங்காட்டும் கோயில் தமிழகத்தில் உள்ள 'தோணிபுரம்' கோயிலாகும். அங்குள்ள சிவனோ 'தோணியப்பர்' எனப்படுவர்.

தமிழகத்து தோணியப்பர் வரலாறு இறைவன் பிரளயத்தின்போது அனைத்து உயிர்களையும் அவ்விடத்தே கரைசேர்க்க உதவியதால் தோணி அப்பர் சிவாலயம் என்ற நாமத்தில் சிவனாகிய இறைவன் அங்கிருந்து அருள் சுரப்பதைத் தெரிவிக்கும். (சமரசபூமி பக்.120-121)

பூமி மீது உருவான பிரளயம் பற்றி மெக்சிக்கோ முதலான பழம்பெரும் நாடுகள் இனங்காட்டுவதும் இவ்வகைத்தே.

சீனாவின் ஒரு படகிலே பலபேர் பயணித்தாலும் அப்படகிலே ஒரு கப்பலுக்கு எட்டுப்பேர் மட்டுமே என்ற வாக்கியம் இடப்படுமாம். அது கிறித்தவ ஆதியாகமம் காட்டும் பூர்விக உலக பிரளயத்தில் எட்டுப்பேர் தப்பிப் பிழைத்தது தந்த நம்பிக்கை புனித வாக்கிய்மாகி அச்சொல் தங்களைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையே. பிரளயத்திற்குத் தப்பிய எண்மர் பாரம்பரியமாக கடல்பயண எண் எட்டு எனும் நம்பிக்கையில் தமது வாழ்வு நிலையை சீனரும் வகுத்து வந்திருக்கின்றனரா?

தவிர கிறித்தவர்களின் யேசு கிறித்துநாதரின் பிறப்பு சம்பவம் போலவே இந்துக்களின் காத்தல் கடவுளான மகாவிஸ்ணுவின் அம்சமான கிருஸ்ணர் பிறப்பும் என்பதை அந்தந்த மத நூல்கள், புராணங்கள் ஒரு சேரவே இவ்வாறு கூறிக் கொள்ளும்.

இருவர் பிறப்பும் மாட்டுத் தொழுவத்துடன் இணைந்தது.

'கிறித்து பிறந்தபோது, அநேகக் குழந்தைகள் கொல்லப்பட்டனர். அதே போலக் கிருஸ்ணனும் பிறந்த போதுகூட அநேகக் குழந்தைகள்

கொல்லப்பட்டனர். கிறித்துவை ஏரோது என்ற அரசன் கொல்ல நினைத்தான். கிறித்து ஏரோதின் சதித் திட்டத்திற்குத் தப்பி வேறு நாட்டிற்குக் கொண்டுபோகப்பட்டார். கிருஷ்ணனை கம்சன் என்ற அரசன் கொல்ல நினைத்தான். கிருஸ்ணனும் வேறு இடத்திற்குக் கொண்டு போகப்பட்டார்.

இவ்வாறானபோதும் கிறித்து பாவிகளுக்காக தனது உயிரைக் கொடுத்ததும் கிருஸ்ணரோ பாவிகள் ஒழிப்பின் மூலம் தேவர்களைக் காத்ததும் வரலாறாகிட ஒரே சம்பவம் அவரவர் மதவழி மாறுபட இவ்வாறு உரைக்கப்பட்டது.

தவிர, இந்துக்களது மத நம்பிக்கையான தீயவரை ஒழித்து நல்லவரைக் காக்க மீளவும் பத்தாவது அவதாரமாக பூமியில் வெள்ளைக் குதிரையிலே வருவேன் என்பதான காத்தல் கடவுள் என ஆன கிருஸ்ண பரமாத்மாவின் கல்கி அவதாரம் போலவே கிறித்துவ ஆதியாகமம் கூறும் வெள்ளைக் குதிரையிலே சவாரி செய்வோன் இறைவனால் நீதியை நிலைநாட்ட அனுப்பப்படுவான் என்பதான அவரவர் வேத சம்பவங்கள் (சமரசபூமி கவிவேழம் பாரதிபாலன்- இளம்பிறை பதிப்பகம் சென்னை ;பக். 176) கூறுவது பின்னடைவு எய்திய மனிதரின் அகக் கண்களை திறக்க அவ்வச் சமூக பக்குவத்திற்கு ஏற்ப உருவாக்கப்பட்ட உபதேசப் புனைவுகளா?

உலக நடைமுறை என்பது அரசியல் வழி வல்லமை வாய்ந்த நாடுகளின் சுயதேவை அடிப்படையிலும் உருவாகிக் கொண்டன.

மாறுபட்ட வரலாற்றை அல்லது புராணக் கதைகளை தத்தம் சமூகக் குழுமம் பய பக்தி சூழ்ந்த கட்டுப்பாடான ஒழுக்கக் கோட்பாட்டு மரபில் ஒருங்கிணைந்த உலகமூடாக தத்தம் ஆட்சிப் பாரத்தை தாங்கும் சம்பவமாக மேற்படி கதைகள் ஒன்றிலிருந்து ஒன்று மாறுபட்டு உருவாக்கம் பெற்றிருக்கலாம்.

வட இந்தியாவின் வேத ஆரியர்கள் எனப்படுவோர் கீப்ருக்களான யூதர்களே என்பதை மேற்படி புராண வேத கால வரலாற்றுக் கதை கூறும் சம்பவங்களைக் கிரகிக்கும்போது உள்வாங்கவே முடிகின்றது.

வேத ஆரியரின், இருக்கு வேத புருஷ சூக்தத்தில் 'விஸ்வகர்மா எனப்பட்ட பிரஜாபதியாகிய புருஷன் தன்னையே பலியாக்கி இரத்தம்

சிந்தி நம்மை மீட்டுக் கொள்ள வேண்டும் என்பதோடு, உலக மக்களின் உய்விற்காகப் பலி செலுத்தவென்று குறிக்கப்பட்ட ஆட்டின் நான்கு கால்களில் இருந்து இரத்தம் பீறிட்டு வரவேண்டும். ஆட்டின் மேலுள்ள வஸ்திரத்தை நானகுபூசாரிகள் தங்களுக்குள்ளே பகிர்ந்து கொள்ள வேண்டும். ஆடு பலிபீடத்தின் தூணோடு கட்டப்படல் வேண்டும். ஆட்டின் எலும்பை முறிக்கக் கூடாது. ஆட்டிற்கு சாமா செடியின் கசாயம் குடிக்கக் கொடுக்க வேண்டும். ஆடு திரும்ப உயிரோடே எழுப்பப்படல் வேண்டும். ஆட்டின் மாமிசத்தைப் புசிக்க வேண்டும்."

இவ்வாறான இந்துக்களின் இருக்கு வேதம் புருஷசூக்தம் கூறும் ஒன்பது இலட்சணங்களையும் கிறித்தவர்கள் இறை தூதர் என வணங்கும் இயேசுநாதருடன் ஒப்பிடலாம். அவருக்குச் சூட்டிய மகுடத்தையும் அவரது கை கால்களில் ஆணி அடிக்கப்பெற்றதையும் அவரது வஸ்திரத்தை நான்கு போர் சேவகர்கள் பங்கு போட்டுக் கொண்டதையும், அவர் மரத்தில் வைத்து ஆணியால் அடிக்கப் பெற்றதையும் அவரது கால் முறிக்கப்படாது இருந்ததையும் இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்ட பின் கசப்புக் கலந்த காடி கொடுக்கப்பட்டதையும், அவர் மரித்த மூன்றாம் நாள் உயிரோடு எழுந்ததையும், இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள் இயேசு தமக்காக மரித்ததை நினைவு கூர அவரது மாமிசத்தைச் சாப்பிடுவது போல பரிசுத்த இராப்போசன பந்தியில் அதைக் கைக்கொள்வதுடன் ஒப்பிடலாம். (Living World Missinary Church, Frangfurt, Germany)

## இறைவன் வழிபாட்டில் இன்றைய விஞ்ஞானம்

இன்றைய அறிவியல் விஞ்ஞானியர் தாம் வாழுகின்ற பூமிக் கிரகம் போல ஏனைய கிரகங்களைப் பற்றி ஆய்வதும் அக் கிரகங்களுக்கு செய்மதி அனுப்புவதும் உலகம் அறிந்ததே.

இந்துக்கள் தங்களது பாரம்பரியமான கோயில் வழிபாட்டிலே விஞ்ஞானியர் ஆய்வு செய்யும் அதே நவக்கிரகங்களை (09 கிரகங்கள்) வழிபடுவார்கள்.

அவர்களது கோயில்களில் சிலைகளாக நடுநாயகனாக சூரியனை

வைத்து ஏனைய கிரகங்களைச் சூழ வைத்து நவக்கிரக வழிபாடு என அர்ச்சித்து வருகின்றனர்.

நவக்கிரகங்கள் பற்றி புராணங்களும். ஐதீகங்களும் அவற்றிற்குரிய கற்பனை புராணக் கதைகள் வழி எடுத்துக் காண்பிக்கின்றன. மனிதர் பிறக்கும் இராசி நட்சத்திர பலன்களாக அறிவியல் ஆய்வுக் கிரகங்களே நின்று கொள்கின்றன.

மேற்படி 9 கிரகங்களை இனங்காட்டும் தமிழ் சைவர்களின் தேவாரப் பாடல் கி.பி.07-ம் நூற்றாண்டிலே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரது சிவன் தோத்திரமாக அமைந்திருப்பது வருமாறு.

'வேயுறு தோழிபங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்லவீணை தடவி

மாசறு திங்கள் கங்கை முடிமேலலணிந்தென் உளமே புகுந்த அதனால்

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டு முடனே

"ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவற்கு மிகவே."

தமிழர் தமது வழிபடு மார்க்கத்தில் பல நூற்றாண்டுகட்கு முன் இனங்கண்ட ஒன்பது கிரகங்களை விஞ்ஞான பூர்வமாக இன்றைய உலகம் விளங்கிக் கொண்டதோ 1930-ம் ஆண்டுக் காலப்பகுதியிலேயே..

அது இன்றைய விஞ்ஞானிகள் சூரியனில் இருந்து மிகத் துாரத்தில் இருக்கும் சேணகம் என்ற கோள் கண்டு பிடிக்கப்பட்டதன் பின்பே கிரகங்கள் ஒன்பது என்பதை கண்டுபிடித்து ஆய்ந்தனர். .

எனவே பல நூறு ஆண்டுகளுக்கு முன் தமிழ் இந்துக்களின் தேவாரப் பதிகங்களால் அறியப்பெற்ற அறிவியல் விஞ்ஞானம் 1930-ல் நடைமுறை வாழ்வியமாக உருவெடுத்ததா?

அவ்வித அறிவியல் விஞ்ஞானம் என்பது இந்நூல் ஆரம்பத்தில் காட்டுமிராண்டியான உலகின் ஆதி மனிதத் தேடுதலில் தேறுதல் அளித்த இயற்கை வழிபாடே என ஆகிட இன்றைய இந்துக்களது அறிவியல் ஆன்மிக வழிபாடாய் அதுவே ஐம்புல ஐம்பூத வடிவாய் மீளவும் மனித வழிபடு மார்க்கத்தின் அந்தத்தைத் தொட்டுச் செல்வதோடு ஆஸ்திகத்தையும். நாஸ்திகத்தையும் ஒருங்கிணைத்து உலகின் விடியல் தாங்கி நிற்கின்றதாகத்தான் ஏற்க வேண்டும்.

## மொழிவழி ஐம்பூத உறவு

அரிஸ்ரோட்டில் முதலான பூர்விக கிரேக்க அறிஞர்கள், மொழியானது ஐம்பூதம் போல உயிர்த்தன்மை வாய்ந்தவை எனக் கூறி வந்திருக்கின்றனர்.

ஞானிகள் சில ஒலி மாத்திரைகளைக் கண்டுபிடித்து அதனூடாக அற்புதங்கள், சித்துகள் புரிந்ததாகவும் தமிழ்நாட்டிலே சமரச சுத்த சன்மார்க்க நெறியை உபதேசிக்கத் தோன்றிய அருட்பிரகாச வள்ளலார், 'பீச்' என்ற ஒலியைக் கண்டுபிடித்து அந்த ஒலி வழி சித்துகள், அற்புதங்கள் ஆற்றியதாகவும் கூறப்படுகின்றது. முன்னைய சித்த, ஆயுர்வேத வைத்தியர்களோ அல்லது ஹோமியோபதி முதலான மருத்துவர்களோ சில நோய்களுக்கான மருந்து வகைகளைத் தொடர்ந்து பல மணிநேரம் மாவாக அரைத்துக் கொண்டு இருக்கும்போது அம் மருந்துகளுக்கு வீரியம் ஏறி நோயைக் குணப்படுத்தும் என கண்டுபிடித்துள்ளனர். அதுபோலவே இந்துக்களோ சித்துக்கள் வேண்டி மந்திரங்களை 108 முறை அல்லது 1008 முறை உச்சரிப்பதால் அச்சொல் அதிகூடிய சக்திவரப் பெற்று மந்திரம் பலிதமாவதை இனங்காட்டுவர்.

மனிதன் ஆரம்ப காட்டுமிராண்டியத்திலிருந்து இயற்கை வழிபாடுகளூடாக நாகரிகம் பண்பாட்டில் கால் பதித்தாலும், புதிய கண்டுபிடிப்புகளால் உலகைப் பிரமிப்பாலே ஆழ்த்தினாலும் தனது தீராத வழிபாட்டுக் குழப்பத்தின் தெளியாத நிலைகளினூடாக ஒரு தெளிவுக்கு வந்ததுபோல உருவாக்கப் பெற்ற உலகில் அனைத்து மாந்தரையும் நாடு, இனம், மொழி, மதம் ஜாதி கடந்து இணைக்கின்ற ஒரே புனித வேதவே தமிழர்தம் புனித திருக்குறளாகும்.

# தமிழர்தம் உலக வேதம்

## புனித திருக்குறள் வேதம்

தெற்காசியாவூடாக உலக உறவை ஏற்று சமரச சுத்த சன்மார்க்க வழி உலகபோதனை தர வல்ல தமிழ் தனக்காக ஆக்கிய புனித வேதம் உலக வேதமாக ஏற்கும் தனித் தகுதி படைத்தது. அதுவே தமிழர் போற்றும் புனித திருக்குறள். அதிலே எடுத்தாளப்பட்டுள்ள 1330 புனித திருக்குறள்கள் அதற்காக அமைந்த விதியின் பிரகாரம் மந்திர சொற்களாகி அவை ஒவ்வொன்றும் மிக, ஆழமான பொருள் கொண்ட ஏழு இலக்கத்தில் சொல்ல

வரும் செய்தியை விளக்கி பக்தர், அகத்தே பரிசுத்தம் நிரப்பும். தமிழர்தம் திருக்குறள் எனும் பரிசுத்த வேதம் அற்புதமானது. அத்தகைய புனித வேதம் ஒன்றினால் மட்டுமே உலகை மீளவும் ஒளி பொருந்தியதாக ஆக்க முடியும் எனத் துணிந்த பல பிறநாட்டு அறிவியல் மேதைகள் மேற்படி தமிழர் புனித வேதத்தை உலக ஒன்றுகூடலுக்காக தொடர்ந்து ஆய்ந்து வருவதும் உலகின் பல மொழிகளில் மேற்படி தமிழர் வேதம் மொழி பெயர்க்கப்பட்டிருப்பதும் அற்புதமே.

## தமிழர்தம் ஏழு இலக்க மந்திரமும் எழுபிறப்பும்

தமிழர்தம் உலக வேதமான புனித திருக்குறள் அறம், பொருள், இன்பம் எனும் முப் பிரிவினூடாக 1330 வேத மந்திர வாழ்வியலை குறள் வெண்பா வடிவிலே தந்திருக்கின்றது.

மேற்படி புனித வேதம் கொண்ட 1330 எனும் இலக்கத்தைக் கூட்டும்போதும் அதி சக்தி வாய்ந்த ஏழு இலக்கம் பிறக்கின்றது.

ஒவ்வொரு குறள் வெண்பாவும் ஏழு சொற்களில் மனித உலக வாழ்வியத்தை வழங்கும்.

(உதாரணம் - "அகர முதல எழுத்தெல்லாம்
ஆதி பகவன் முதற்றே யுலகு"

அகர(1) முதல(2)எழுத்தெல்லாம்(3)
ஆதி (4) பகவன்(5) முதற்றே (6)உலகு(7)

இவ்வாறே தமிழர்தம் 1330 திருக்குறள் வெண்பாக்களும் புனிதம் மிகு ஏழு சொற்களில் முழுமை பெறுகின்றன.

ஏழு இலக்கமானது இறைவனுக்கு நெருக்கமான உலக இயக்கத்தின் உயிர்நாடி என்பதாய் பூர்விக நாகரிகம் படைத்த தெற்காசிய நாடுகள் தங்கள் வேதங்கள் நடைமுறைகளில் அவற்றைப் பயன்படுத்தினர்.

கிறித்தவர்களுக்கும் இசுலாமியருக்கும் பொதுவான ஆதியாகமம் பழைய ஏற்பாடு மேற்படி ஏழு இலக்கத்தை புனிதப் பொருளாக ஏற்றது.

கீப்ரு மொழியில் எழுதப் பெற்ற ஆதியாகமம் ஏழு இலக்க வசன சொல்லமைவை தெய்விகத் தன்மையாகக் கருதி அதனைப் புனிதமுடன் பேணி வந்திருக்கின்றது.

அப்புனித கீப்ரு மொழியில் உயிரெழுத்துக்கள் கொண்டு ஏழு இலக்கத்தில் அமையும் வசனம் தேவ மொழியாகும். முழுமை அடைந்த காரியங்கள் அந்த ஏழு இலக்கத்துள் அடங்கும் எனும் நம்பிக்கை அவர்களிடமும் இருந்திருக்கின்றது.

கிறித்தவர்களின் பழைய ஏற்பாடு ஆதியாகமத்தில் இருந்து பிரிந்து கி.பி.06ஆம் நூற்றாண்டில் நபிகள் நாயகத்தால் உருவான இசுலாமியரின் திருக்குர் ஆன் (23-18-17) உங்களுக்கு.மேலே ஏழு வழிகள் படைத்துள்ளோம். இப்படைப்புப் பற்றி நாம் கவனமற்று இருக்கவில்லை என குறிப்பிடும்.

பூர்விக உலகு ஏழு இலக்கத்தில் கொண்ட நம்பிக்கைகளை இவ்வாறு அடையாளப்படுத்தலாம்.

ஏழு கண்டங்கள் ஏழு சமுத்திரங்கள் கொண்டதே உலகம்.
சூரியனின் ஒளி ஏழு நிறங்கள் கொண்டது.

இறைவனை இயற்கையை ஈர்ப்பதான இசை ஏழு சுரங்கள் கொண்டவை.

மனித உடற் கூறு ஏழு சக்கரங்களாய் ஏழுநிறங்களைக் காட்டுகின்றன.
ஏழு நாட்களே வார நாட்களாக வகுக்கப் பெற்றன.

இந்துக்களின் "பதஞ்சலி சூத்திரம்" மனித அறிவின் ஏழு நிலைகள் பற்றித் தெரிவிக்கும்போது, அறிவு படிப்படியாக ஏழுவித நிலைகளாக உயர்த்திச் செல்லப்படுவதையும் யோகத்தில் சூட்சும உடலில் ஏழு ஆதாரங்களாக குறிப்பிடப்பட்டவை ஏழுவிதமான மனநிலை அறிவிப்புப்படிகள் என்றும் கூறப்படுவதுண்டு என பதஞ்சலி யோக சூத்திரத்திற்கு தொகுப்பாசிரியர் ஸ்வாமி (பக்.171) பொருளுரைப்பதும் இங்கே நோக்கத்தக்கது.

தமிழர் தம் வேதமான புனித திருக்குறள் எழு பிறப்புப் பற்றியும், புத்தேள் உலகு பற்றியும் குறிப்பிடும்.

புத்தேள் உலகு என்பது தேவர் உலகு எனப் பொருள்படும்.

புதுக்கோட்டை சித்தன்ன வாசல் சமணர் குகைக்குள் செல்லும் படிக்கட்டுகள் "ஏழடிப்பட்டம்" எனும் பெயர் தாங்கியதை தொல்லியல் இனங்காட்டுகின்றது. புத்தேள் உலகு என்பது சமணப் புனித துறவோருடன் தொடர்புபட்டதா அதனாலேயே தமிழ் மொழி அகராதி தேவருலகு என வழங்கி இருக்கின்றாதா?

வடநாடிருந்த வேத ஆரியப் பார்ப்பனியர்களை தேவர்கள் எனவே வட மொழியும் அது தொடர்ந்து திராவிட வைதிகத் தமிழுக்கு வந்த நூல்களும் கூறி வந்திருப்பதனையொத்து, அவைதிக சமணம் தேவருலகென புத்தேளுலகை புனித திருக்குறள் ஊடாக இனங்காட்டுவதாக ஏற்கலாமா?

சமண காப்பியமான சீவகசிந்தாமணி ஆசிரியரோ திருத்தக்கதேவர் என அழைக்கப்படுபவர்.

"களவிலே பழகுவோருக்கு அவரது உடம்பும் விரைவில் கெட்டுப்போகும். அந்தப் பழக்கம் இல்லாதவருக்கு நீண்ட வாழ்நாளும் தேவருலகும் கைவசம் ஆகும்" என்பது காட்டும் புனித திருக்குறள் புத்தேள் உலகு எனும் சமண தேவர்களை இவ்வாறு இனங்காட்டுகின்றதா?

கள்வார்க்குத் தள்ளும் உயர்நிலை கள்ளார்க்குத் தள்ளாது புத்தேள் உலகு. (திருக்குறள், துறவறவியல் 290)

## தமிழர்தம் சமரச உலக வேதம்

உலகின் முதல் மனிதன் தோன்றிய லெமூரியாக் கண்டத்தின் எச்ச சொச்ச நிலப்பரப்பானதே தென் தமிழ்நாடு. அந்த வகையிலே தமிழ்மொழி உலகின் மூத்த மொழி என்ற உறவை ஏற்றது. இதனை ஏற்ற இன்றைய அறிவியல் உலகம் உலகின் பூர்விக மொழிகளின் வரிசையில் தமிழையும் ஏற்றது.

1969-ல் அமெரிக்கரின் அப்பல்லோ 11- சந்திர மண்டலத்தில் கால்பதித்தவேளை அங்கே மக்கள் வாழக்கூடும் என்ற ஐயப்பாட்டில் உலகின் மிகப் பழைய பூர்விக நாகரிக மொழிகளுடன், தமிழ் பதித்த ஒலிநாடாவையும் அந்த வேற்றுக் கிரகத்திற்குக் கொண்டு சென்று

நாங்கள் பூமிக்கிரகத்தில் இருந்து வருகிறோம். இங்கே யாரும் மனிதர்கள் இருக்கிறீர்களா? எனத் தமிழிலும் ஒலித்தனராம்.

தமிழின் சிறப்பு வாய்ந்த பூர்விக சங்க இலக்கியப் படைப்பான புறநானூறு 'எல்லா ஊர்களும் எனது ஊர்களே அங்கே வாழும் எல்லா மனிதரும் எனது உறவினர்களே!' என்ற சமரச உறவைப் பிரதி பலிக்க "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் பாடலால் உலக உறவை தமிழர் உறவாக வகுத்துள்ளது.

அத்தகைய பூர்விகத் தமிழ். உலகிலே பிறந்த அனைத்து மதங்களையும் தன்னுள்ளே பொதிந்து வைத்து தமிழிலே சமரசம் கண்டிருக்கின்றது. தமிழரிடை எழுந்த அவரவர் பக்குவவழி சத்தியம் ஓதும் இலக்கண இலக்கியங்கள் அறிவியல் தத்துவ மத புராண வரலாறுகள் அதனை நிரூபணம் செய்கின்றன.

அவ்வாறாக அனைத்து உலக மதங்களையும் பிழிந்து தமிழிற்கென ஆளுமை மிகுந்து உருவான உலக சமரசம் உரைக்கும் புனித வேதமே தமிழரது புனித திருக்குறளாகும்.

அத்தகைய புனித திருக்குறள் உலகின் முதல் மனிதன் தோன்றிய இலேமூரியா தென்குமரி கண்டத்துவழி அந்த முன்தோன்றிய முதல் மனித இனத்தை நினைவு கூர்ந்து வணங்க வேண்டிய முறைமையூடாக முன்னர் மறைந்த தமிழர் உள்ளிட்ட உலக மூதாதை உயிர்களூடாக உலக உறவை காக்க ஆணையிடுகின்றதா?

## தமிழர்தம் திருக்குறளில் உலகின் முதல் மனிதன்?

உலகிலே முதல் மனிதன் தோன்றிய இலெமூரியாக் கண்டமானது. தமிழ் நாட்டின் தென் கடலிலே மூழ்கிப்போனது. தமிழ் நாட்டுடன் தொடர்பு பட்ட அந்த தென்புல மூதாதையர் பண்பாடு நாகரிகத்துடன் உலக உறவுபேணி வாழ்ந்தனர்.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்தோர் குடியில் வாழையடி வாழையாக வந்த ஒப்பற்ற தெய்வப் புலவரே

வான்புகழ் புனித திருக்குறள் தந்த தெய்வப் புலவர். அவர். தன்னுடைய 'இல்வாழ்க்கை' என்ற அதிகாரத்தில் "தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான்என்று ஆங்கு ஐம்புலத்தார் ஓம்பல்தலை" என்று பாடியுள்ளார். (திருக்குறள் இல்லறவியல் 43)

தென் புலத்தார் என்பதற்கு பரிமேலழகர் என்ற முன்னைய தமிழ் உரைஞர் அவர்களைத் தெய்வச் சாதியினர் என்றும், மணக்குடவர் அவர்களை மூதாதையர் என்றும் உரை எழுதியுள்ளனர். வேறு பலர் பல்வேறு விளக்கங்களையும் எடுத்தியம்பியுள்ளனர்.

திருக்குறள் ஞானி ஏன் வட புலத்தார் என்றோ கீழ் புலத்தார் என்றோ மேல் புலத்தார் என்றோ சொல்லவில்லை. ஏன் தென் புலத்தார் என்று சொல்ல வேண்டும்?

"பலகோடி ஆண்டுகளுக்கு முன்னால் இந்த உலகம் முழுவதும் மாபெரும் அக்கினிப் பிழம்பாக இருந்தபோது, அந்த அக்கினிப்பிழம்பின் ஒரு சில இடங்களின் வெப்பம் தணிந்து நிலப் பகுதியாக மாறத் தொடங்கியதோ நாவலந்தீவான இலெமூரியா கண்ட குமரிப் பகுதியில்தான்.

இந்த நிலப்பரப்பில்தான் முதன் முதலாக மனிதன் தோன்றினான். மொழி தோன்றியது. நாகரிகம் தோன்றியது. பண்பாடு தோன்றியது. கலாசாரம் தோன்றியது.

இத்தனை சிறப்பிற்கும் சீருக்கும் உரிய அந்த நாவலந்தீவு லெமூரியாக் கண்டம் குமரிப்பகுதி தமிழ் நாட்டின் தென் புறத்தில் இருப்பதால் தான் திருக்குறள் தந்த ஞானி முதலில், "தென் புலத்தாரை வணங்க வேண்டும் போற்ற வேண்டும்" என்று சொல்லி இருக்கிறார்.

திருக்குறள் ஞானி "தென் புலத்தார்" என்று சொல்லாமல் "தென் தமிழர்" என்று சொல்லி இருந்தால் அவர் தான் பிறந்த நாட்டை, இனத்தை புகழ்ந்து இருக்கிறார் என்று உலக மாந்தர் எண்ணி விடுவர்.

எனவே பரந்த நோக்கில்தான் மறைமுகமாக "தென் புலத்தார்" என்று சொல்லி இருக்கிறார்.

திருவள்ளுவர் என்று கூறப்படும் அந்த ஞானி எந்த இடத்திலும் தான் ஒரு தமிழன்- தனது நாடு தமிழ்நாடு என்பதைக் காட்டிக் கொள்ளவில்லை.

ஆனால் குறளை ஆய்வின் அடிப்படையில் நோக்குமிடத்து எந்த அளவுக்குத் தமிழைப் பின்பற்றிப் போற்றியுள்ளார் என்பது புரியும்.

மேற்படி, ஆய்வினை பன்னாட்டுத் தமிழுறவு மன்ற உலகளாவிய மூன்றாம் மாநாட்டு மலர் 1993 பக். 225.இல் டாக்டர் பாக்கியமணாளன் "வள்ளுவர் போற்றும் தென் புலத்தார் யார்?" என்ற தலைப்பினூடாக இனங்காட்டியிருக்கின்றார்.

## தமிழர்தம் புனித ஞானி

### சமரச ஞானம்

தமிழர் பாரம்பரியமான உலக வாழ்வு முறைமைகளைப் புரிந்தவர்கள். பல்துறை மாந்தருடன் பழகிய அவர்கள் தீர்க்கதரிசனம் மிக்க சமரச நோக்கினர். அனைத்துலக நேயம் மிக்க அவர்கள் வந்தோரை வாழ வைக்கும் அறவியல் நோக்கினர். அத்தகைய அவர்களை சங்க இலக்கியமான அவர்களது புறநானூறு உலக உறவாக வர்ணிக்கையில் "அனைத்து உலகுமே எனது ஊர்கள்தான் அங்கே வாழ்கின்ற அனைவரும் எனது உறவினர்கள்தான்" என்பதை பண்டைய இலக்கியப் படைப்பாக "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என தொடரும் இலக்கியவழி அறியத் தருகின்றது. கேளிர் என்பது உறவினரைக் குறிக்கும்.

அத்தகைய தமிழர் சுயநல நோக்கிலே சிக்குண்ணாது அறநெறிப்படி வாழ தெய்வ வணக்கத்திற்கான சமரச வழிமுறை அருள் நூலை யாக்க வேண்டிய தேவை தமிழே உயிர் மூச்சாகக் கொண்ட மெய்த்தமிழ் ஞானியரால் உணரப் பெற்றது.

அவ்வாறாக செம்மையான தமிழ்மொழியூடாக "புனித தமிழ் மறை ஞானி" திருக்குறள் என்ற புனித மந்திர நூலைத் தமிழிலே இயற்றினார்.

அவர் தனது அற்புத புனித நூல் அனைத்து உலக மாந்தருக்கும் சொந்தமானது என்பது புரிந்தே அதனை தமிழருக்குள் உருவாக்கி இருக்கின்றார்.

அவர் மேற்படி நூலில் தமிழர் பற்றியோ தமிழ் நாட்டை, தமிழரை ஆண்ட மூவேந்தர் முதலான தமிழ் மன்னர்கள் பற்றியோ குறிப்பிட வில்லை.

அவ்வாறானால் அவரது புனித நூலை எப்படி தமிழ் மந்திரம் என ஏற்கலாம்?

தெற்கே குமரி கண்ட தமிழர் உலகின் முதல் மனிதனின் மூதாதை என்பதைக் கருத்திற் கொண்ட ஞானி தமிழ் என்ற மொழி பற்றியோ தமிழர் பற்றியோ பேசாது தமிழிலே அந்தரங்க சுத்தமாக தமது தமிழ் மந்திர வாசகங்களை இட்டிருப்பது அனைத்துலக மொழியினரும் ஏற்கக்கூடிய உலகப் புதுமை வாய்ந்தது.

தமிழூடாக அனைத்து உலக மொழியினரும் தமது ஆன்மிக ஆன்மநேய ஒன்றுகூடலை தமது திருமறையான புனித திருக்குறள் வகுக்கும் என்பதை முன்னரே புரிந்துள்ளார்.

இந்த புனித நூலின் உருவாக்கம் பற்றி தமிழிற்கென உருவான தொல்காப்பியம் எனும் இலக்கண நூல் முன்வைக்கும் உரை கூறும் கருத்தை இந்நூலாசிரியர் இந்த இடத்தில் கையாள்வதை மறுதலிக்கும் நாவலர்களும் இருக்கவே செய்வர்.

இவர்களெல்லாம் அந்நியர் ஆட்சியின்போது, மனம்போன படி தமிழை கொண்டு சென்று தமிழரை இன்று செல்லாக் காசு என ஆக்கி உலகமே வெறுப்புடன் உமிழும் தமிழரையே அரங்குமுன் நிறுத்தி எங்கோ மறுபிறப்பும் பிறந்து மேலும் பிரச்சனைகள் தோன்ற புதிய தத்துவங்களை எழுதுவோராகவும் உருவாகி இருக்கலாம்.

ஆனால் முன்னைய தீர்க்கதரிசன மற்ற அத்தகையவர்களையே பின்னைய தமிழர் இன்றும் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர். அதனாலேயே சமரச சுத்த சன்மார்க்க நெறியுடன் தோன்றிய அருட்பிரகாச வள்ளலார்' "கடைவிரித்தேன் கொள்லாரில்லை கட்டி விட்டேன்" என அன்றே அத்தகைய சுயநல மனிதர்களால் மனம் வெதும்பிப் பாடியுள்ளார்.

வைதிக வழி வந்த தமிழ் மதவெறியர்கள் பின்னாளிலே சைவமும் தமிழும் என்பதாய் தமிழ் சமணர்கள் செய்த சிறப்பு வாய்ந்த நூல்களை

பதிப்பிக்கும்போது பல நூல்களை துரோகமுடன் வைதிக சைவத்துள் இடைச் செருகலாய் ஏற்றியதும் இடையே தமது போலிப்பாடல்களைப் புகுத்தி நூலின் தரத்தை குன்றச் செய்ததையும் இன்றைய அடிவருடிகள்முன் வெளிப்படுத்த முனைவோரை, "தமிழ் துரோகிகள்" என முத்திரை குத்தி தங்கள் பக்க நியாயங்களை பாசாங்குடன் பொரிந்து தள்ளி அது வழி தமிழ் தொண்டர் எனத் "தமதே தமிழ் இரத்தம்" எனவும் கூறி புகழ் மழையில் நனைந்து நோய் நெடியுடன் ஒருநாள் ஓயந்தே போவார்கள். இவர்களால் அனைத்துத் தமிழருக்குமோ, அனைத்து உலகுக்குமோ நன்மை ஏற்படப்போவதுமில்லை.

இதனை இவ்வாறு வாங்கிக் கொண்டு தமிழர்தம் இலக்கணமான தொல்காப்பியத்துடன் தமிழர்தம் புனித திருக்குறளை உள்வாங்கல் தொடர்வோம்.

தொல்காப்பியம் "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னே ஐயர் யாத்தனர் கரணம் என்ப (தொல்காப்பியம்-பொருளதிகாரம் 545)." என்பதாக தமிழிற்கு இலக்கணம் தந்தவராகக் கூறப்படும் தொல்காப்பியர், தமது சூத்திரத்தில் "ஐயர் வகுத்த கரணம் என்ப" என புனித திருக்குறளையே இனங்காட்டுகின்றார் என ஏற்கலாம்.

புனித ஞானி எனும் கரணம் வகுத்த ஐயர் திருவள்ளுவர் புனித திருக்குறளை தமிழிலே செய்திருக்கும் முறைமை அற்புதமானது.

தமிழ்மொழியின் முதல் உயிரெழுத்தோ அகரத்தில் ஆரம்பிக்கும். மெய் எழுத்தான இறுதி எழுத்தோ "ன" கரத்தில் முற்றுப்பெறும்.

தமிழ் இலக்கணத்தில் தெய்விக வாசனை ஊட்ட முற்பட்ட புனித ஞானி தமது ஞானத்தால் புனித உச்சாடன மந்திரம் என தமிழை மகிமைப்படுத்த முதலாம் அதிகாரம் அறத்துப்பாலிலே தமது கடவுள் வாழ்த்து என்பதனை உயிரெழுத்தான அகரத்தில் ஆரம்பித்துத் தன்னை தமிழன் எனவே அறிமுகமாக்குகின்றார்'' அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு"

அவர்தம் முதலாவது அறத்துப்பால் கடவுள் வாழ்த்து மந்திர வாயில் அதுவே.

அறத்துப்பால், பொருட்டபால், காமத்துப்பால் என்பவை தாங்கி ஆயிரத்து முன்னூற்று முப்பதாவது காமத்துப்பால் இறுதி "ஊடல் உவகை' மந்திரமோ தமிழின் இறுதி மெய் எழுத்தான 'ன்'-ல் வாழ்வியல் முறைமையின் ஆண்பெண் இன்பவியல் ஒருங்கிணைவை இவ்வாறான முடிப்பியத்தினூடாக தமிழர்தம் புனித ஞானி இனங்காட்ட விழைகின்றார்.

அதன் பொருளாக "ஆண்பெண் இருவரிடையேயும் சச்சரவு ஊடல் நிகழ்ந்து அதன்பின் இருவரும் சமாதானமாகி அன்பினால் ஒருங்கே இணைந்து திளைக்கும் காம இன்பமே என்றும் சொர்க்கம் தரும்" என அதனை ஏற்கவேண்டும். இதுவே இன்றுவரையும் கூட நடந்து வருவது.

இதனைக் குறிக்க புனித ஞானியின் இறுதிக் குறள் வெண்பா "ன்" என்ற தமிழின்இறுதி மெய் எழுத்தினை தமது புனித குறளிலே இவ்வாறு இறுதியாக இட்டுள்ளது.

"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம் கூடி முயங்கப் பெறின்"

இவ்வாறு, திருக்குறள் 'ன்' என்ற எழுத்தில் இனிமை தழுவ முற்றுப் பெறுவதே தமிழர்தம் ஞானி தந்த முழுமைபெறு புனித வேதம்.

தமிழர்தம் புனிதவேதம் அகரம் எனும் முதல் எழுத்தின் ஊடாக ஆதிதொட்டு காக்கும் இறைவனை துதி செய்வதை கிறித்தவ ஆதியாகமம் ஆதியில் வார்த்தை இருந்தது. அது தேவனோடு இருந்தது எனத் தொடரும் அவர்களது அந்த புனித வார்த்தையுடன் புனித திருக்குறளை ஒப்புமை செய்ய முற்படலாம்.

ஆனால் மேற்படி கிறித்துவ வேதாகமத்தில் "இஸ்ரவேல் புத்திரர்களை என்றும் மகிமைப்படுத்துவேன்.." என இறைவன் மொழிவதாக அடிக்கடி இடம்பெறும் கூற்றுடன் புனித திருக்குறளை ஒப்புமை செய்ய முடியாது. அத்தகைய புனித வேதமான தமிழர் புனித திருக்குறள் நாடு, இனம் கடந்தது.

தமிழையோ தமிழரையோ குறிப்பிடாதபடி கடவுள் வாழ்த்திலே தமிழின் முதல் உயிரெழுத்தான அகரத்தைத் தொட்டு, இன்பத்துப்பால்

முடிவிலே மெய் எழுத்தின் இறுதி எழுத்தை இணைத்த தமிழரின் இப் புனித வேதத்தால், இந்த உலகம் அனைத்து பேதமையும் கடந்து அறிவியல் துணையுடன் என்றென்றும் வாழ்ந்துகொண்டு இருக்கும் காலம் உருவாகவே போகின்றது.

## "குறள்" என்ன என்பது..

பக்தர்கள் தமது நடைமுறையில் புனிதமாக ஏற்று இறைவனைத் துதிக்கும் போது, இறைவனுக்கே புரிந்த ஏனையோர் புரியாத இறைவனிடம் மறைத்து மொழியும் புனித வார்த்தைகளே ஏனையோர் அறியத் தகாத சுலோகங்களாய் "பூசகர் மந்திரம்" என வடமொழி பகரும்.

இந்த இடத்திலே இறைவனுக்கே புரிந்த, தமிழருக்கே புரியாத, மந்திரமாக வைதிக பூசகர்கள் வடமொழியான சமஸ்கிருத பூசனை மந்திரத்தையும், கிறிஸ்த்தவ துறவியர் இஸ்ரேலியரின் கீப்ரு மற்றும் உரோமின் இலத்தீன், கிரேக்க மொழிகளிலும் பூசனை புரிந்து வந்தமையுடன், இசுலாமியர் அரபுமொழியையும், இந்திய, இலங்கை துறவியரான பெளத்தர்களும் சமணர்களும் முறையே பாளி, பிராகிருத மொழிகளையும் புனித பூசனை மந்திர மொழிகளாக ஏற்று வந்திருப்பது போல தமிழர்தம் புனித திருக்குறளை ஒப்பிட முடியாது. ஆனால் புனித குறளோ ஆழம் புரியாத புதிர் என பல உரைஞர்கள் தத்தம் பக்குவத்திற்கேற்ப உரை பகர்ந்துள்ள போதும் அவ் உரைகளோ முழுமை பெறாதவை என பின்வந்த ஆய்வினர் தத்தத் ஆய்வினைத் தொடர்ந்தபடியேதான் உள்ளனர்.

ஆனால், இறைவனுக்கே ஏற்ற புனித மறையானவை தெய்விகம் எனும் அப்பழுக்கற்ற தூய சொற்களால் யாக்கப்பட வேண்டும். அதற்கான சொற்களின் எண்ணிக்கை குறுகிய அளவினதாகி புனிதமுடன் தெளிவு தரல் வேண்டும். எனவே வடமொழியின் இறைவனுக்கான மந்திரம் அல்லது சுலோகம் என்ற சுருங்கிய வடமொழிச் சொல்லே தூய மறையாக தமிழிலே குறள் வெண்பா எனும் வடிவம் பெற்று அதன் ஆளுமைப் புனித சிறப்புக் கருதி 'திரு' என்பது இணைந்து திருக்குறள் என ஆனது.

## போலிமைப் பூசனை

அப்பழுக்கற்ற புனித தமிழ் மறையாகப் படைக்கப் பெற்ற புனித திருக்குறளைத் தமிழர் ஏற்காது மயங்க அவர்களது போலி வழிபாட்டு பூசனை முறைமை அவர்களது விரிசல் போக்கினை இனங்காட்டும். தத்தமது விரிசல் போக்குடன் சமரசம் பேச விழைவது அவர்களது தான் என்ற அழுக்கான அகந்தையுடன் கூடிய அறியாமையின் விளைவே.

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலம்செய் துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச் சங்கத் தமிழ் மூன்றும் தா.! என்பதான இறைவனுடனும் ஆன இலஞ்சம் அல்லது கையூட்டு முறைமை தமிழருக்குள் முன்னைய வைதிக புலவரான ஔவையார் பெயரால் நுழைந்திருக்கின்றது. இக் கையூட்டு முறைமை வைதிக வழிபடு மார்க்க பூசக தட்சணை மரபு வழியேதான் உருவாக்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

உலகை அழிவிலே நிறுத்தும் போதைவஸ்து முதலான சட்டவிரோத தொழில் செய்வோர், "இறைவா! எனது கடத்தல் பொருள்கள் காவல் அதிகாரிகளிடம் சிக்கக் கூடாது. சேரவேண்டிய இரகசிய இடத்திலே காவல் கடந்து சென்றடைந்தால் உனக்கு பொன்னாபிசேகம் புரிவேன். பெருங் கோயில் கட்டிப் பூசிப்பேன்" என்றவாறு வேண்டி தமது கோரிக்கை நிறைவேறியதும் கோயிலை சிறப்பாபிசேகம் செய்தாரும், காவல் அதிகாரிகளிடம் சிக்குண்டு சிறை சென்றாரும் உண்டு. அவர்கள் தமது வழிபடுமார்க்க அடிப்படைப் பிசகை உணரவேண்டும். ஏற்றமிகு புனித நெறிமுறையுடன் உலக சமரச சகோதர உறவேற்று சமூக நீதி, நேர்மையில் ஒருங்கிணைந்து தம்மை மீட்டுருவாக்கம் செய்தல் வேண்டும்.

வைதிக சைவரோ தன்னிச்சை வழிமுறைகளில் வாழ்ந்தவர்கள். மனிதரை புடம் போட்டு எடுத்து தூயவராக்கத் தோன்றிய புனித திருக்குறள் தூய வாழ்வு நெறிகளை வாங்காது இருந்தவர்கள். மூடமை தழுவிய அவர்களது அர்த்தமற்ற மூடநம்பிக்கைகளே நச்சு விருட்சங்களாகி அவர்களது மூடமை வாழ்வு முறைமைகளைப் பாதித்தபோதும், அத்தமிழர் புனித நூல் என்ற வரிசையில் தமது தமிழிலே தோன்றிய திருக்குறளை

அழகு பார்ப்பர். ஒழுக்க முறைமைப்படி நடக்க தயாராக இல்லாவிட்டாலும், தம்மிடம் உலகம் போற்றும் புனித திருக்குறள் நூல் உண்டு என அதற்கான பெரும் மாநாடு நடத்த, விழா எடுத்து தமது பெருமையை உலகிற்குக் காட்டி தாம் நேர்மையான தமிழர் என தம்மை தம்பட்டம் அடிக்க அது கொண்டு பொருள் திரட்டவும் தயாராகவே உள்ளனர்.

அதனால் தமிழர்தம் புனித மறைநூல் மானசிகமாக உரிய முறையிலே அனைத்துத் தமிழரையும் பற்றுறுதியுடன் ஒருங்கிணைக்கவில்லை என்பதே கசப்பான உண்மை.

## தமிழர்தம் தொல் இலக்கணத்தில் மறைநூல்

தமிழிற்குத் தோன்றிய தொல் இலக்கண நூலான தொல்காப்பியம் "மறை" என்பதற்கு மந்திரம் என்பதுடன் ஏனைய பொருள்களாக அடைக்கலம், இரகசியம் இரண்டாம் உழவு, எதிர்மறுப்பு, ஒளிப்படம், கறை, காப்பு, கேடகம், சங்குச்சுரி, சொல், புள்ளி, மறையென்னேவல், மறைவு, வேதம் ஆகியவற்றையும் உள்ளடக்கி இருக்கின்றது.

இவ்வாறு பொருள் ஏற்கும் தொல்காப்பியமோ "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப" என்பதாக வேத மந்திரத்தை உரைக்க மேற்படி சூத்திரவாயிலாக பொருள் விளக்கந் தருகின்றது. (தொல்.பொருள் 287)

இத் தொல்காப்பியம் ஏற்கும் புனித தமிழ்மறையான தெய்வத் திருக்குறளோ, "நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்" (திரு. அறம் நீத்தார் பெருமை - 28) என்பதாய் முழுமை பெற்ற மனிதரது வாக்கு வன்மை நன்மை தீமைகளைத் தீர்மானிக்கும் அதிசக்தி வாய்ந்த கருவியாகும் என்பதாய் மேற்படி புனித குறள்பாவுக்கு வேத விளக்கந் தருகின்றது.

மதவெறியற்ற உலக மாந்தர் ஆன்மிக ஒன்றிணைவுக்கான வழிமுறைகளை புனித ஓவியமாகக் காண்பிக்க வேண்டி சமரச உலகின் வழிபடுமார்க்க முறைமையை புனித ஞானி, புனித திருக்குறள் வாயிலாக முன்வைக்கின்றார்.

## அழகியலும் ஆன்மிகமும்

தமிழர் பிற மத, பிற மொழி பிற இனக் கவர்ச்சி ஊடாகவும் தமது போலிமை வாழ்வை அழகியல் சிந்தை என மேம்படுத்தி வந்தவர்கள்.

தமிழிலே பயன்படுத்தப்படும் சொற்களின் கவர்ச்சி காணாத பின்னைய தமிழர் நாகரிகப் பற்றினால் பிறமொழிக் கவர்ச்சிகளில் ஈடுபட்டனர்.

இறைவனுக்கே புரிந்த பூசனை மந்திரமாக வடமொழி சமஸ்கிருதத்தை மொழி புரியாவிட்டாலும் பூசக மந்திரங்களாக ஏற்று பக்திப் பரவசமாகினர்.

உலகிடை தாம் கற்ற புதிய நடைமுறைச் சொற்களது அழகியலை தமிழிலே காணாது குழம்பி, வடமொழிச் சொற்களின் கவர்ச்சிகளில் மயங்கி அத்தகைய சொற்களையே தமிழிற்கும் பயன்படுத்தியும் வந்திருக்கின்றனர்.

வடமொழியில் இறைவனுக்கு சூட்டப் பெற்ற பெயர்களையே தமிழ்ப் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுக்குப் பெயர்களாகச் சூட்டி மகிழ்ந்தனர்.

அவ்வாறே இன்றைய பின்னைய சந்ததியும் தமிழறியாத பிற மொழிச் சொற்களில் கவர்ச்சி கொண்டு பிறமொழி சினிமா நடிக நடிகையரது பெயர்களைத் தங்கள் தமிழ் குழந்தைகளுக்கு தமிழ் பொருளிலக்கணம் காணாது பெயர் சூட்டி மகிழ்ந்து வருகின்றனர்.

இவை இவ்வாறு இருக்க தமது பெற்றோரின் பெயர்களில் தந்தை பெயர் முருகனாக இருக்க தாயின் பெயரோ உமையம்மை என வருமிடத்து அவர்களுக்கு உருவான சிசுக்கள் தமது வழிபடு மார்க்க முறைமைகளில் ஏதோ தாயும் மைந்தனும் எனும் இசகு பிசகு முறைமையை உள்வாங்குபவர்களாகக் கூட இருக்க மாட்டார்கள்.

முன்னர் தோன்றிய தமிழர்தம் புனித நூலான திருக்குறளுக்கும் அத்தகைய பெரும் சோதனையே ஏற்பட்டிருக்கின்றது.

இறைவனுக்கே உகந்த மந்திரம் எனும் வடமொழி தரும் கவர்ச்சியை தமிழிலே குறள் என்ற சொல் வழங்குவது புரியாது குறள் என்பது மந்திரம் அல்ல. அது கவர்ச்சீகரம் அற்றது என பின்வாங்கித் தவிப்போரோ வடமொழி தரும் உச்சாடனம் அல்லது, சுலோகம் என்பதை அழகாக உச்சரிப்பர்.

அத்தகைய அடிவருடிகளும் பூர்விக பந்தத்தால் புனித திருக்குறளைத் தமிழ்வேதம், தமிழ் மறை எனப் பேசி உவக்கவும் செய்கின்றனர்.

தமிழிற்குத் தோன்றிய தொல்காப்பியமும் வடமொழி வழி தமிழிற்கு கவர்ச்சி ஊட்டும் பணியில் வட மொழியூடாக தமிழ் சொல் உருவாக்கத்தை "வடசொற் கிளவி வடஎழுத்து ஒரிஇ எழுத்தொடு சேர்ந்து சொல்லாகும்மே" என இட்டுள்ளது. (தொல்காப்பியம் : சொல்லதிகாரம் 401)

அந்த வகையிலே தமிழிற்கு உருவாகிக் கொண்ட தேவர்கள் புசிக்கும் அமிர்தம், அமிழ்து, அமுது முதலானவை வடமொழி வழி பிறந்தவை. அது வட மொழி சமஸ்கிருதத்தின் அம்ருத என்பது தந்த கடனாகும். தேவர்கள் இறவாது நீண்டநாள் வாழ அருந்தும் உணவே அமிர்தம் என்பதாகும். வடமொழியோ அதனை கிரேக்கர் உரோமர்களது தேவர் உணவான amrosia (அம்றோசியா) என்பதிலிருந்தே கடன்பெற்றது. தேவர் உணவாக அதனைக் கடன்பெற்ற வடமொழியின் அம்ருத என்ற சொல்லையே தமிழும் அமிர்தம், அமிழ்தம், அமிழ்து, அமுது என்றவாறு வட எழுத்தை நீக்கி ஏற்றது.

தமிழர்தம் புனிதஞானி புனித திருக்குறளிலே அமிழ்து, அமிழ்தம் எனப் பயன்படுத்தினாலும் அதனைத் தமிழ்ப் பதமாக சாவா மருந்து எனவும் புனித குறளிலே பின்வருமாறு பொறித்திருக்கின்றார்.

"விருந்து புறத்தாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற் பாற்று அன்று"

(திருக்குறள் இல்லறவியல் - 82)

இப் புனித வேதத்தின் பொருள், "தேவர்கள் இறவாது, இருக்க புசிக்கும் சாவா மருந்தைத் தானே புசித்து நீண்டநாள் வாழவேண்டி இருப்பவர், தன்னை நாடி வீட்டிற்கு வரும் விருந்தினர் வெளியே இருக்கும்போதும் அவர்களுக்குப் பகிர்ந்து தராது தான் மட்டும் அதனை புசித்தல் தகாது" என்பதாகும்.

## இறைமொழி

இறைவனுடன் பக்தன் பரிமாற வழங்கும் வடமொழி கூறும் இறைவனுக்கே புரிந்த வாக்கியம் மந்திரம் எனப் பொருள்படும். இம் மந்திரமென ஏற்கும் தூய குறுகிய இறைவனுக்கு ஏற்ற மொழி

எனும் குறு வெண்பா வடிவம் தமிழிலே "குறள்" எனப் பொருளப் படுத்தப்பட்டிருக்கின்றது.

தூய பாக்களான அவை அப்பழுக்கற்ற மிக நேர்த்தியான இலக்கணம் தாங்கிய தேவ மொழி என்பதாய் ஏற்கப்படுகின்றது. தூய தமிழிலக்கிய உலகிலே செய்யுள்கள் புனைவதற்காக வகுக்கப்பட்டிருக்கும் யாப்பிலக்கணம் இறையம்சத்திற்கு பொருந்திய பாவடிவம் வெண்பாக்களே என நிர்ணயம் செய்திருக்கின்றது.

அத்தகைய தூய முறைமையில் உயர் சிறப்புக்கள் தாங்கிய தேவ மொழியாகிய புனித திருக்குறள் மானிட ஆன்மாக்களை இறைவனுடன் இணைக்க மனித வாழ்வு முறைமைக்கேற்ற தூய போதனைகளை புனித திருக்குறள் எனத் தந்துள்ளது. இது, இன, மத, மொழி பேதம் பாராது உலகை இணைக்கத் தோன்றிய அற்புத புனிதப் படைப்பாகும்.

தமிழருக்கே உரிய தெய்விக நூல் என்பதை மேற்படி புனித நூல் விளம்பவில்லை. அது உலகத்தோடு ஒட்டி உறவாடவேண்டி தமிழருக்குள்ளே படைக்கப்பெற்றிருக்கிறது. உலகமே அந்த நடைமுறைக்குள் வந்து தமது வாழ்வை தெய்வீக உச்சநிலைக்குக் கொண்டு செல்லும் வண்ணம் படைக்கப்பெற்றிருக்கிறது.

புனித திருக்குறள் என்ற பெயர் திருமந்திரம் எனவோ தமிழ் மந்திரம் எனவோ பவனி வரவில்லை. ஏற்கனவே தமிழிலே சிவன் பெயரால் தமிழுக்கெனச் சூடப்பெற்ற தமிழ் சைவர்கள் போற்றும் திருமந்திரத்திற்கு வருவோம். அத் திருமந்திரம் சிவன் நாமத்தில் ஏக இறை தத்துவம் ஆகினாலும் அது தமிழையும் கூறி புனித திருக்குறள் போதனைகளையும் தன்னுடன் இணைக்கின்றது. திருக்குறள், திருமந்திரம் தந்த புனித ஞானிகளை முறையே திருவள்ளுவர், திருமூலர் என்பதாகக் கூறும் தமிழர் அவர்களது பிறப்பு வரலாறுகளை உரிய முறையிலே இனங்காட்டத் தவறினாலும் இருவருமே ஆரிய வைதிக முறைமைக்கு எதிரானவர்கள் அவர்களது பிறப்பு வரலாறுகளின் திரிபை ஏந்தியபடியே தமிழினம் இரு நூல்களின் சிறப்புகளைப் போற்றும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

## புனித திருமந்திரமும் புனித திருக்குறளும்

"என்னை இறைவன் நன்கு படைத்தனன் தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே!" என்பதைத் தாங்கி தமிழர் ஆசார நெறியில் ஓங்கி வாழ உருவாக்கப்பெற்றதே தமிழர்தம் புனித திருமந்திரம். அது சிவநாமத்தில் ஓதப்பட்டாலும் தமிழரை மட்டுமல்ல உலகமாந்தரை "ஒன்றே குலம், ஒருவனே தேவன்!"என மொழிந்து தமிழுக்காக உருவானது. தமிழ் என்பதையும் முழு முதற்கடவுளான சிவனையும் குறித்து எழுந்த திருமந்திரம், திருக்குறளுடன் ஒருமை காண்கின்றது.

புனித திருமந்திரத்தில் வரும் அதிகாரங்கள் சிவனைக் குறித்தது. ஆனால் புனித திருக்குறள்நெறி அதிகாரங்கள் தமிழையோ சிவனையோ குறிக்காது உலகப் பொதுமறையாய்த் தமிழிலே உருவாக்கப் பெற்றிருக்கின்றது.

தமிழ்ச் சைவர் மரபிலே சிவ நெறியை காக்க உருவான திருமந்திரமுடன் ஒருமைகாண புனித நூல் திருக்குறளில் இழையோடும் ஒற்றுமை அதிகாரங்கள் வருமாறு.....

புனித திருக்குறள் அறத்துப்பாலில் வான்சிறப்பு பற்றி வரும் பத்து புனித திருக்குறள்கள், திருமந்திரம் முதலாம் தந்திரத்தில் 14-ம் அதிகாரத்தில் வான்சிறப்புப் பற்றி பாடல் எண் 248, மற்றும் 249 ஆகிய இரு பாடல்களும் ஒருமை காண்கின்றன.

மேற்படி, புனித திருக்குறள் அறத்துப்பாலில் 4-ம் அதிகாரம் அறம் பற்றி வரும் 10 புனித குறள்களும் திருமந்திரம் 1-ம் தந்திரத்தில் 14-ம் அதிகாரத்தில் அறம் பற்றி வரும் 250ல் இருந்து 269-வரையும் அறம் பற்றி இரு புனித நூல்களும் ஒருமையுடன் உரைக்கின்றது.

புனித திருக்குறள் அறத்துப்பால் இல்லறவியலில் 8-ம் அதிகாரத்தில் அன்புடமை பற்றி வரும் 10-புனித திருக்குறள்களும் புனித திருமந்திரம் முதலாம் தந்திரம் 18-ம் அதிகாரத்தில் அன்புடமை பற்றி வரும் புனித 10-பாடல்களும் அன்புடமையையே உள்வாங்குகின்றன.

புனித திருக்குறள் அறத்துப்பால் இல்லறவியல் 12-ம் அதிகாரத்தில் நடுவு நிலைமை பற்றி வரும் 10 புனித திருக்குறள்களும், திருமந்திரம் 1-ம் தந்திரத்தில் 23-ம் அதிகாரத்தில் நடுவுநிலைமை பற்றி வரும் நான்கு (320-323) பாடல்களும் நடுவுநிலைமை பற்றியே கூறுகின்றன.

புனித திருக்குறள் அறத்துப்பால் இல்லறவியல் 15-ம் அதிகாரத்தில் பிறன்மனை நயவாமை பற்றி வரும் 10 புனித திருக்குறள்களும் புனித திருமந்திரம் 23-ம் அதிகாரம் தரும் பிறன்மனை நயவாமை பற்றி வரும்(201-208) 08-பாடல்களும் பிறன்மனை நயவாமை பற்றியே கூறுகின்றன.

புனித திருக்குறள் அறத்துப்பால் துறவறவியலில் 26-ம் அதிகாரம் புலால் மறுத்தல் பற்றி வரும் ( 251-260) 10- குறள்களும், திருமந்திரம் 1-ம் தந்திரம் 7-ம் அதிகாரத்தில் புலால் மறுத்தல் பற்றி வரும் பாடல் எண் 199-ல் புலால் மறுத்தல் ஒருமை காண்கின்றது.

திருக்குறள் அறத்துப்பால் துறவறவியலில் 27-ம் அதிகாரத்தில் தவம் பற்றி வரும் (261-270) 10 புனித திருக்குறள்களும், புனித திருமந்திரம் 06-ம் தந்திரத்தில் 05-ம் அதிகாரத்தில் தவம் பற்றி வரும் (1624- 1644) 21-பாடல்களும் கொல்லாமை பற்றி கூறுகின்றன.

புனித திருக்குறளில் அறத்துப்பால் துறவறவியலில் 33ஆம் அதிகாரத்தில் கொல்லாமை பற்றி வரும் 10 புனித குறள்களும் (321-330) புனித திருமந்திரம் 1ஆம் தந்திரத்தில் 06ஆம் அதிகாரத்தில் கொல்லாமை பற்றி வரும் 02 பாடல்களும் (197-198) கொல்லாமை பற்றியே கூறுகின்றன.

புனித திருக்குறள், அறத்துப்பால் துறவறவியலில் 34ஆம் அதிகாரத்தில் செல்வம் நிலையாமை பற்றி வரும் 03 குறள்களும் (331-333) திருமந்திரம் 01ஆம் தந்திரத்தில் 03ஆம் அதிகாரத்தில் செல்வம் நிலையாமை பற்றி வரும் 06-பாடல்களும் (168-173)செல்வம் நிலையாமை பற்றிக் கூறுகின்றன.

புனித திருக்குறள் அறத்துப்பாலில் 34-ம் அதிகாரத்தில் யாக்கை நிலையாமை பற்றி பற்றி வரும் 07-புனித குறள்களும் (334-340) புனித திருமமந்திரம், 01ஆம் தந்திரத்தில் 02ஆம் அதிகாரத்தில் யாக்கை நிலையாமை பற்றி வரும் 25-பாடல்களும் (143-167) யாக்கை நிலையாமை பற்றிக் கூறுகின்றன.

புனித திருக்குறள் அறத்துப்பாலில் துறவறவியல் 35-ம் அதிகாரத்தில் துறவு பற்றி வரும் 10-குறள்களும் (341-350) புனித திருமந்திரம் 06ஆம்

தந்திரத்தில் 04ஆம் அதிகாரத்தில் துறவு பற்றி வரும் 02-பாடல்களும் (1614-1623) துறவு பற்றிக் கூறுகின்றன.

புனித திருக்குறள் அறத்துப்பால் துறவறவியலில் 37ஆம் அதிகாரத்தில் அவா அறுத்தல் பற்றி வரும் 10 புனித திருக்குறள்களும் (361-370) புனித திருமந்திரம் 08ஆம் தந்திரம் 40ஆம் அதிகாரத்தில் அவா அறுத்தல் பற்றி வரும் 10-பாடல்களும் (2613-2622) அவா அறுத்தல் பற்றிக் கூறுகின்றன.

புனித திருக்குறள் அறத்துப்பாலில் ஊழியலில் 38-ம் அதிகாரத்தில் ஊழியல் பற்றி வரும் 10-புனித திருக்குறள்களும் (371-380) புனித திருமந்திர 09ஆம் தந்திரத்தில் 13ஆம் அதிகாரத்தில் ஊழியல் பற்றி வரும் 06-பாடல்களும் (2847-2852) ஊழியல் பற்றிக் கூறுகின்றன.

புனித திருக்குறள், பொருட்பால் அரசியலில் 39ஆம் அதிகாரம் அரசாட்சிமுறை பற்றி வரும் 10-குறள்களும் (381-390) புனித திருமந்திரம் 01ஆம் தந்திரத்தில் 13ஆம் அதிகாரத்தில் அரசாட்சி முறை பற்றி வரும் 10-பாடல்களும் (238-247) அரசாட்சி முறை பற்றிக் கூறுகின்றன.

புனித திருக்குறள் பொருட்பால் அரசியலில் 40ஆம் அதிகாரத்தில் கல்வி பற்றி வரும் 10 புனித குறள்களும் (391-400) புனித திருமந்திரம் 01ஆம் தந்திரத்தில் 20ஆம் அதிகாரத்தில் கல்வி பற்றி வரும் 09-படல்களும் (290-298) கல்வி பற்றிக் கூறுகின்றன.

புனித திருக்குறள் பொருட்பால் நட்பியலில் 92-வது அதிகாரத்தில் விலைமாது பற்றி வரும் 10 குறள்களும் (911-920) புனித திருமந்திரம் 01-ம் தந்திரத்தில் 09-வது அதிகாரத்தில் விலை மாது பற்றி வரும் 05-பாடல்களும் (204-288)...? விலைமாது பற்றிக் கூறுகின்றன.

திருக்குறள் பொருட்பால் நட்பியலில் 93-வது அதிகாரத்தில் கள்ளுண்ணாமை பற்றி வரும் 10-குறள்களும் (921-930)புனித திருமந்திரம் 01-ம் தந்திரத்தில் 24ஆவது அதிகாரத்தில் கள்ளுண்ணாமை பற்றி வரும் 09 பாடல்களும் (324-332) கள்ளுண்ணாமை பற்றிக் கூறுகின்றன.

புனித திருக்குறள் பொருட்பால் குடியியலில் 105ஆவது அதிகாரத்தில் நல்குரவு பற்றி வரும் 05-பாடல்களும் (209-213) நல்குரவு பற்றிக் கூறுகின்றன.

"என்னை இறைவன் நன்கு படைதனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" எனவும் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" எனவும் நல்ல தமிழுடாக ஒரே தேவன் என உலகினரை உறவினராக்கி ஏக இறைவன் என பகிரங்கமாகவே சிவநாமத்தில் புனித தமிழ் திருமந்திரம் தந்த திருமூலரும், அந்தரங்கமாகவே தமிழுக்குள் நின்று உலகை ஒருநெறிக்குள் கொணர மக்கள் பின்பற்றும் சர்வ மத ஞானம்படைத்த திருக்குறள் ஞானியும் உலகம் வாழ ஒளி வீசிய போதும் அவை பற்றிய பூரண தெளிவின்றி நரக இருளிலே நிற்கின்ற பாமர தமிழ் மக்கள் விழித்தெழுந்து உலகை உறவினராக்குவது எக்காலம்?

## தமிழர்தம் நடைமுறை உலக வேதம்

தமிழர் முதல் மனிதன் தோன்றிய குமரி கண்டத்தினர் என்பதால் உலகின் பிரதான பூர்விக மதங்களையும் உலக நாகரிகங்களையும் தம்முள்ளே பொதிந்தவர்கள்.

லெமூரியாக் கண்டத்துடன் இணையும் குமரித் தென்கடலுடன் தொடர்பான இவர்கள் உலகின் பிரதான பூர்விக மதங்களையும் கைக் கொண்டு பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தவர்கள் என்பதை அவர்கள் நாக, இந்து, சமண, புத்த, கிறித்தவ, இஸ்லாமிய வழிமுறைகள் ஊடாகவும் தமது வாழ்வு முறையை வகுத்தவர்கள். இதனை அவர்களது பழந்தமிழ் இலக்கியங்கள், புராணங்கள், இதிகசங்கள் உணர்த்துகின்றன.

அத்தகைய தமிழரது இலக்கியங்களை, அறிவியலை அவர்கள் பழமை வாய்ந்த நூல்களிலே பதிந்து வைத்தனவற்றுள் "எல்லா ஊர்களும் எமது ஊர்கள்தான் அங்கே வாழும் எல்லா மக்களும் எமது உறவினர்கள்தான்" எனப்பொருள்படும் அற்புத வரிகள் ஆரியம், திராவிடம் என்ற பாகுபாடற்ற உலக உறவை இனங்காட்டவல்லது.

உலகையே தமது உறவு என இனங்காட்ட எழுந்த சங்கத் தமிழ் இலக்கியம் அதனை ''யாதும் ஊரே, யாவரும் கேளிர் எனப் பதிவு செய்திருப்பது தமிழர்தம் தொன்மைச் சிறப்பிற்கு உதாரணம்.

அதனை சங்க இலக்கிய பெரும் புலவரான கணியன் பூங்குன்றனார் எனும் தமிழர் சமண மதத்தினராக இருக்கும்போதே தமிழருக்குப் போதித்திருக்கின்றார்.

அவ்வாறே தமிழுக்கு சிவ நாமத்தில் எழுந்த திருமந்திரமும் சமண மரபுக்கு இசைவான ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதையே போதிக்கிறது.

மேற்படி ஞானியரின் கூற்று தமிழருக்கு ஆதாரம் ஆவது போல தமிழர்பற்றி மானிடவியல் கூறும் ஆய்வுகளுக்கு வருவோம். மானிடவியலோ தென்னாட்டு மக்களான தமிழர் ஆபிரிக்கரை ஒத்த கருநிறத்தினர் என மொழியும்.

ஆனால், நடைமுறை உலகிலே தமிழர் ஆபிரிக்கரை ஒத்த கரு நிறத்தினராக இல்லாது அனைத்து உலக நிறங்களையும் தம்முள்ளே வாங்கியவர்கள். உலக வர்ணக் கூட்டு முயற்சியாய் தமிழரது குடும்பத்தின் வேறுபட்ட தோல் நிறங்களும் அவர்களது பழந்தமிழ் இலக்கியங்கள், ஆன்மிக சிந்தனைகளும் அவர்களை ஒன்றே குலம் என ஒருங்கிணைக்க முயற்சித்திருக்க கூடுமா?

மதக் கட்டுப்பாடுகள் தளர்ந்த நிலையில் நாட்டில் ஏற்பட்ட அந்நியர் போர் வன்முறையில் பெண்கள் சூறை, பொருளியல் பாதிப்பால் ஆன உடலிணைவுகள், இனக்கவர்ச்சி இன்னோரன்னவை அவர்களை பின்னர் ஒரு நிலைப்பாட்டிலே பல வர்ணம் என ஒரே குலம் ஆக்க முயற்சித்திருக்கலாம்.

இவை இவ்வாறு இருக்க தமிழரிடை தோன்றிய தெய்வத் திருக்குறள் உலகிலே பல மொழிகளில் பெயர்க்கப் பெற்றிருக்கிறது. உலகம் அனைத்தும் திருக்குறளில் வைத்த கவர்ச்சியின் விளைவால் உலகின் பிரதான பூர்விக மதங்கள் தமது மதநூல்களிலும் மேற்படி புனித குறள் பார்வை இருப்பக் கண்டு தமது மத நூலே திருக்குறள் எனச் சொல்லியும் மகிழ்கின்றனர்.

உலகின் பூர்விக மொழியான தமிழிலே தோன்றிய திருக்குறள் உலகை ஒருங்கிணைக்கவே தோன்றி இருக்கின்றது என்பதை உலக நாடுகளே

ஒப்புக் கொள்கின்றன. இதிலுள்ள கருத்துக்கள் தமது புனித நூலில் இருப்பவை என உலகின் சுயநல நோக்கில் உருவான பக்திமான்கள் அவ்வாறு கொண்டாடி வருவது ஏற்கத்தக்கதா?

## பிற மதங்களில் தமிழர் புனித வேதம்!

தமிழர் சமணம், புத்தம், இந்து எனப் பிற மதங்களையும் பின்பற்றி வந்திருக்கின்றனர். இன்று பெரும்பாலான தமிழர்கள் வைதிகராய் இந்து மதத்தினராகிட குறிப்பிட்ட பிரிவினர் அவைதிக சமணர்களாக பௌத்தர்களாக ஆரம்பத்தில் இருந்து பின்னர் விரிவான வைதிக இந்து மத ஆதிக்கத்தில் சாதியத் தாழ்வினைச் சந்தித்தவர்கள். (சமரசபூமி-(இளம்பிறை பதிப்பகம் சென்னை பக். 152-156)

கிறித்தவம், இசுலாமியம் எனும் ஏனைய பிற மதங்களையும் பின்பற்றி வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

தமிழர் வைதிக இந்துக்களாக தங்கள் வாழ்வை ஏற்றாலும் முன்னைய தமிழர் பின்பற்றிய சமண புத்த மதங்கள்வழி தோன்றிய இலக்கண இலக்கிய அறவழி நூல் புலமையில் தமது வைதிக மதத்தை இடைச் செருகல் செய்தும் வைதிக மேதைகள் என வகுக்கத் துணிந்தும் இருக்கின்றனர்.

அவர்களது பிறள்வான மத ஒருங்கிணைவற்ற மூடமை நம்பிக்கையூடாக ஆன்மிக நடைறையை உள்வாங்கிய தமிழர்தம் புனித திருக்குறள் ஈந்த புனித ஞானி, முன்னைய தமிழர் பின்பற்றிய அனைத்து மதநம்பிக்கைகளையும் தமது புனித நூலிலே இனங்காட்டத் தவறவில்லை.

இனி, புனித திருக்குறள் தமது மதத்திற்கு உட்பட்டது என பிற மதத்தினர் மொழிவது பற்றிய ஆய்வுக்கு வருவோம்.

## சமணத்தில் புனித திருக்குறள்

சமண மதத்தின் முதல் கடவுளாகப் போற்றப் பெறுபவர் ''ஆதிபகவன்''என அழைக்கப்படும் 'ரிஷபதேவர்'

ஆவர். இவரே பரத கண்டத்தின் முதல் பேரரசர். உலகியலையும்

தோற்றுவித்தவர் இவரே.

நாடோடிகளான வேத ஆரியர்கள் பரத கண்ட மக்களை அடிமையராக இம்சித்து, நெறி முறையான அரசினை தாம் தொடர்ந்து நடத்த முடியாதபடி சூழ்ச்சிகள் புரிந்ததால் முதல் துறவு பூண்ட பேரரசரும் இவரே தமது துறவுநிலை ஊடாக உலகியலைத் தோற்றுவித்தவர். ஆறு தொழில் முறைகளைக் கற்பித்தவர். இல்லறம், துறவறம் எனப் பிரித்து, மக்களுக்கு அறம் உரைத்தவரும் இவரே. மக்களுக்கு எண்ணும் எழுத்தும் கற்பித்தவர். அவ்வாறான இவரே முதல் இலக்கண நூலை செய்தருளினார். இவ்வாறு சமண நூல்கள் தெரிவிக்கின்றன. முதல் சமண தீர்தங்கரரான இவரைச் சடையர் எனவும் அழைப்பர். இவரது பீட சின்னம் நந்தி.

சைவர்களின் முழுமுதற் கடவுளான சிவனது தோற்றத்துடன் பிறந்த கதைகள் சமண முனிவரான இவரது வழிமுறைகளை வைத்தே பின்னைய வைதிகர் தமது மத செல்வாக்கை சிவன்வழி வகுக்க இச் சமண குருவை மறைமுகமாகப் பயன்படுத்தினர்.

புனித திருக்குறளில் கடவுள் வாழ்த்திலே ஆதிபகவன் என வருவது ரிஷபதேவரான இவரை வைத்தே எனவும், தென் நாட்டில் திராவிட சங்கம் நிறுவிய குந்த குந்தாச்சாரியர் எனும் திகம்பர சமணரே திருக்குறளைத் தோற்றுவித்தவரெனவும் சமணம் பகரும்.

இவ்வாறான பின்னணியுடன் புனித திருக்குறளுக்கு வருவோம்.

மேற்படி, புனித குறளிலே மலர்மிசை ஏகினான், ஆதிபகவன், எண்குணத்தன் என தமிழ் புனித மந்திரங்கள் அடங்கி, முதல் அதிகாரத்தில் வருகின்றது. அதுபோலவே முதல் நான்கு அதிகாரங்களின் அமைப்பு முறைமை, அகிம்சை, மாமிசம் உண்ணாமை முதலானவையை வற்புறுத்திக் கூறும் ஆதாரங்கள் வழி மேற்படி தமிழர்தம் புனித வேதமான திருக்குறள் சமண சமய நூலென வாதாடி வருவர். சமண முனிவரான குந்த குந்தாச்சாரியார் அல்லது பத்ம நந்தி என்னும் ஏலாச்சாரியாரே மதுரையில் திருக்குறளை அரங்கேற்றினார் எனவும் கூறுவர்.

இதிலே கர்ணபரம்பரைக் கதைகளாக தமிழிலே தோன்றிய பல கதைகள் திருக்குறள் ஆசானை திருவள்ளுவராக ஈழத்துடன் தொடர்பு படுத்துகின்றது.

சமணம் மறைந்தபின் வைதிகர்வழி திருவள்ளுவர் என கூறப்படும் திருக்குறள் ஆசான் பற்றிய கர்ண பரம்பரையாகக் கூறப்படும் கதைகளில் ஈழத்து மன்னன் பரராசன் எனும் ஏலேலனின் குருவான திருவள்ளுவர் இனங்காட்டப்படுகிறார்.

ஈழத்துக் கடல் தொழிலாளர் பாரச்சுமையால் நகராத கப்பலை கரை நோக்கி இழுக்கும்போது, திருவள்ளுவர் ஏலையா எனக் கூவியபடி இழுக்கும்படி தொழிலாளரைப் பணிக்கவே கப்பல் இலகுவிலே கரை நோக்கி நகர்ந்ததாம்.

இதனை வைத்தே இன்றும் கடல் தொழிலாளர்கள், குறிப்பாக மீனவர்கள் ஏலேலோ, ஏலையா மந்திரத்தை புனித திருவள்ளுவர் பேரால் கூவி கடல்படு திரவிய பாரங்களை கரைநோக்கி இழுப்பதைக் காணலாம்.

ஆனால், சமண முனிவரான திருக்குறள் செய்த ஞானியாகக் கூறப்படும் குந்த குந்தரது மறுநாமமே ஏலாச்சாரியார். இந்தியாவின் பூர்விக மொழியான சமணர் சார்ந்த பிராகிருத மொழி ஏலாச்சாரி என்பதற்கு பொருள் தரும்போது, 'ஏலா' எனும் பதம் தூக்குவதற்கு எளிதான பாரமற்ற எனும் பொருளைக் குறிக்கிறது.

எனவே, தூக்குவதற்கு எளிதான குறுகிய சிறு வடிவம் பெற்ற ஞானியே குந்த குந்தர் எனும் ஏலாச்சாரியார் எனக் கூறப்படுகின்றார். எறும்புபோல் சிறிது யானை போல் பெரிது என்பதான போதனை கொண்ட சமண போதக நெறிவழி அவர்களது தத்துவங்கள் அவற்றை விளக்கும்.

அத்தகைய குறுகிய வடிவம் கொண்ட சமண குந்த குந்தரே பின்னைய வைதிக சைவரால் திருவள்ளுவராகவும், உருவத்திலே சிறிய அகத்தியராகவும் சிருஷ்டிக்கப் பெற்றிருக்கலாமா?

அவ்வாறே கி.பி.13ஆம் நூற்றாண்டில் தில்லைச் சிதம்பர பூசகராக இருந்தவரும் உண்மைநெறி விளக்கம் செய்தவருமாகக் கூறப்படும் உமாபதி சிவாச்சாரியார் வரலாறும் கி.மு.3ஆம் நூற்றாண்டில் வட நாட்டில் வாழ்ந்து வடமொழி தத்துவார்த்த சூத்திரம் செய்த உமாஸ்வதி எனும் சமண முனிவரான உமாசுவாமிகளின் வரலாறுகள் கொண்டு தமிழ் வைதிகர் போலிமையாக தமக்கென உமாபதி சிவாச்சாரியாரை தில்லைச் சிதம்பரத்துடன் உருமாற்றியதாகவும், சமண தத்துவார்த்த சூத்திரமே

தமிழிலே உண்மைநெறி விளக்கமென வைதிகமாக உருமாறியதாகவும் ஏற்கலாமா?

தமிழரிடை சமணம் அருகி வைதிகம் ஆதிக்கம், செலுத்தியபின் மேற்படி சம்பவம் உருமாற பின்னைய வைதிகர்வழி வந்தோர் ஈழ அரசன் பரராசன் எனும் ஏலேலன் கடல் தொழிலாளர் இலகுவிலே கப்பல் கரைசேர ஏலையா என்ற மந்திரத்தை ஓதும்படி சொல்லும் திருள்வள்ளுவரே எனப் பகர்ந்திருக்கின்றனர்.

ஏற்கனவே சமண முனிவரான குந்த குந்தரது தோற்றத்தை தூக்குவதற்கு எளிமையானவர் என பிராகிருத மொழிவழி கூறப்பட்ட ஏலா என்பதே பின்னைய தமிழர் கூறும் திருவள்ளுவரின் ஏலையா எனும் தூக்குவதற்கு எளிதான கடல் தொழிலாளர் பாரம் இழுக்கும் மந்திரமாக்கப் பட்டிருக்கலாம்.

வைதிக இந்து மதம் மக்களது கல்வியறிவுக்கு முக்கியத்துவம் கொடுக்காதபோது தமிழர் அனைவருக்கும் உலக வாழ்வுக்குத் தேவையான நூல்களை பண்டைக் காலத்தே உருவாக்கி வைத்தவர்கள் சமணர்களும் பௌத்தர்களுமே என்பதால் சமண ஞானியான ஏலாச்சாரியார் எனும் குந்த குந்தாச்சாரியாரே திருக்குறளை இயற்றி இருக்கலாம் எனும் கூற்றை ஏற்க நியாயம் உண்டு. தவிர, சமணர் செய்த பழந்தமிழ் இலக்கியமான நீலகேசி எனும் சமண காப்பியத்திற்கு உரை செய்த திவாகர முனிவர் திருக்குறளை சமண வேதமெனப் பகர்வர். அத்துடன் சமண நூலாகிய மேருமந்திர புராணத்தோடு ஒவ்வொரு குறளுக்கும் உள்ள கருத்து ஒற்றுமையை ஆசிரியர் சக்கரவர்த்திநயினார் எடுத்துக் காண்பிக்கின்றார்.

திருக்குறளின் சாரமாய் அமைந்த நாலடியார் எனும் நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் பிரிவில் சமணர்களால் இயற்றப்பெற்றது என்பதால் அப் பிரிவில் உருவான திருக்குறளும் சமண சமயம் சார்ந்ததாக ஏற்க இடமுண்டாகின்றது.

சமணர் கூறும் திருக்குறள் செய்த குந்த குந்தாச்சாரியாரே முதன் முதலாக திராவிட சங்கத்தை நிறுவியவராக சமண நூல்கள் தெரிவிக்கும்.

சிவனை வைதிக சைவர் தமதென ஏற்கமுடியாது. சமண அருகவழிபாடே சிவனென பிராகிருத மொழியில் அவர் எழுதிய சமணம்

தாங்கிய 'அஷ்டபாகுடம்' என்ற நூலில், சிவநாமம் குறிப்பிடப்படுவது வைதிகர் தம் சிவ நிந்தை புரியாத தூய்மை வகுக்கப்பெற்ற தூய நூலென உள்வாங்கக் கூடியது.

மேற்படி, சிவ நாமம் சமணத்திற்கும் சைவத்திற்கும் பொதுவானது.

ஏலாச்சாரியார் அல்லது பத்ம நந்தி எனும் குந்த குந்தரான சமணர் பிராகிருத மொழியில் செய்த அஸ்டாபாகுடம் நூல் கூறும் சிவன் பற்றிய வரிகளை திரு.வி.கல்யாண சுந்தர முதலியார் எழுதிய நாயன்மார் வரலாறு முன்னுரை பின்வருமாறு பிராகிருத மொழியில் சிவனை இனங்காட்டுகின்றது.

''பீஊண....ணாணஸலிலம் ணிம்மல கதிசடாக ஸெஸ உம்முக்கா உந்தி சிவாலய வாஸி திகு வண சூடாமணி சித்தா...... சிவா கொந்தி ... ..ஞானீ சிவ பரமேஸ்டி...... சச்வத் சிவ ஆசாதர கா..''

தென் நாட்டின் திகம்பர சமண குருவான பத்ம நந்தி எனவும் ஏலாச்சாரியார் எனவும் அழைக்கப்படும் குந்த குந்தாச்சாரியார் தமது பிராகிருத நூலான அஸ்டபாகுடத்தில் சிவ நாமத்தை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குந்த, குந்தர்சாரியார் போலவே தமிழ்நாட்டில் வாழ்ந்த திகம்பர சமண குருவான திருத்தக்கதேவர் தமிழிலே செய்த சீவக சிந்தாமணி காப்பியத்தில் ''இன்பமற்றென்னும் பேரா னெழுந்தபுற் கற்றை தீற்றித் துன்பத்தைச் சுரக்கு நான்கு கதியெனுந் தொழுவிற் சேர்ந்து நின்றபற் றார்வ நீக்கி நிருமலன் பாதஞ்சேரின் .. அன்புவிற் றுண்டு போகிச் சிவகதி அடையலாமே..'' எனச் சிவ நாமம் உரைத்துள்ளார்.

## சமணர்தம் யாழ்ப்பாணம்

திகம்பர, சுவேதம்பர சமணர்களின் ஒரு பிரிவினர் யாபனியர் என அழைக்கப்பட்டனர். சமண முனிவரான உமாஸ்வதி அல்லது உமசுவாமிகளின் வடமொழி தத்துவார்த்த சூத்திரவழி சிவ வழிபாடியற்றிய பிரிவினராவர். இதனை மொனியர் வில்லியம் எனும் ஐரோப்பிய அறிஞர் தமது சமஸ்கிருத ஆங்கில அகராதியில் குறிப்பிட்டுள்ளார்.

சிவ வழிபாடியற்றிய யாபன சமணப்பிரிவினர் ஆதியில் இருந்த பிரதேசமே ஈழத்து யாழ்ப்பாணப் பிரதேசமாக இருந்திருக்கலாம்.

யாழ்ப்பாணத்தில் தாவர உணவு புசிப்பவர்கள் அதனை ஆருகதக்கறி என அழைக்கும் முறைமை பிற்காலத்திலும் குறிப்பாக யாழப்பாணத்தில் உள்ள சாவகச்சேரியில் நிலவி வந்திருக்கிறது. ஆருகதர் (அருகத்) என்பது சமணரைக் குறிக்கும்.

சாவகச்சேரி. சாவகன்சீமா என்பதில் சாவக என்பது இல்லற சமணர்கள் எனும் உலக நோன்பிகளையே குறிக்கும் என சிலப்பதிகாரம் இனங்காட்டுவதை இந்நூலாசிரியர் தமது திருவருள்வாசகம் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். திருவருள்வாசகம்- கலாநிதி. ஜே.குமாரசுவாமி சிவபுரம் அறக்கட்டளை வெளியீடு சென்னை. (பக்.250-253)

அவைதிகருக்கும் வைதிகருக்கும் இருந்த சிவவழிபாட்டு முறைமையை யாபன மதவழி உள்வாங்கிய நாம் சமணர்தம் மலைமீதமரும் அருகக் கடவுளை கந்தன் எனவே அழைப்பது பற்றிய ஆய்வுக்கு வருவோம்.

தமிழரது ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான இளங்கோவடிகள் எனும் சமணர் செய்த சிலப்பதிகாரம் அருகரை கந்தன் எனவே குறிப்பிடும். மேற்படி காப்பியம் சிறுதெய்வமான முருகனை வேலன் என தெரிவித்துள்ளது. அவ்வாறு வேலன் வெறியாட்டு என இனங்காட்டிய முருகன் பின்னர் எவ்விதம் சமணக் கடவுளான கந்தன் என ஆனான்.?

இதனை வைதிகர் கொண்டாடும் கந்த புராணத்தில் பத்மாசுரனை போரிலே கொல்லாது சேவலாகவும் மயிலாகவும் வாழச் செய்த வைதிகக் கந்தன் எனும் முருகனூடாக வைதிகம் சமண அவைதிகத்தை பத்மாசுரனுடன் இணைத்த மறைமுக வரலாற்றை உள்வாங்கலாம்.

சிவஸ்கந்தன் என்ற மன்னன் சமணரான பத்ம நந்தி எனும் குந்தகுந்தரை ஆதரித்தனன் என்ற குறிப்பு சமணத் தமிழர்களால் கூறப்படுகின்றது.

வைதிக தெய்வமான முருகன் எனும் கந்தவழிபாடு தமிழரிடை தோன்ற வகை செய்த தென்நாட்டு சமண முனிவராகவும் குந்த குந்தரை ஏற்க இடமுண்டாவதற்கு ஆதாரமாக அமைவது சமணக் கடவுளாக மலைமீது

அமரும் அருகர், ''கந்தன் '' எனவே நாமம் பூண்ட சம்பவத்துடன் குந்த குந்தருடன் உறவான சிவஸ்கந்தனை ஒப்பிடலாம்.

வைதிக சைவத்துள் காமன் எனும் கந்தவழிபாடு தோன்ற சமண ஒழிப்பே வகை செய்திருக்கலாம்.

சமணர்தம் பிரசித்தி பெற்ற கர்நாடக மலை உச்சியில் நிருவாணத்தில் பாகுபலி என அமர்ந்துள்ள சிரவண பெல்கோளா என்பதான சமணத்தலம் ''துறவிகளின் தூய குளம்'' என்பதாகப் பொருள் கொள்ளப்படும். அதுவே வைதிக சைவ கந்தப் பெருமானின் சரவணப் பொய்கை என்பதான பொருள்படுத்தலையும் உள்வாங்குகின்றது. (திருவருள்வாசகம் பக். 52) சமணகாப்பியமான சிலப்பதிகாரம் இந்திரனால் எழுதப்பட்ட ஐந்திரம் நூலின் சிறப்புப் பற்றி கூற வரும் போது பின்வரும் செய்யுள் அடிகள் சரவணம் என்பதை இனங்காட்டுகின்றது.

"புண்ணிய சரணவணம் பொருதுவீராயின்
விண்ணவர் கோமன் விழுநூ லெய்துவீர்" (சிலம்பு.11 வரிகள் 98-99)

ஐந்திரம் என்பது வைதிகரால் பின்பற்றப்படாத சமண நூலே எனும் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை(தமிழ்ச்சுடர்மணிகள் பக்.27-32) அவர்களின் ஆதாரக் குறிப்பும், மேற்படி கடினமான ஐந்திர நூலை இலகுவில் புரிய தனக்கு முருகப் பெருமான் தன்மீது இரங்கி அருள்பாலிக்க வேண்டும் என இரந்த தென்னாட்டு மன்னனான சப்தவர்மனின் கூற்றாக தீபத் நாட்டு பௌத்தலாமாவான தாரநாதர் குறிப்பிட்டிருப்பதை வித்துவான் வெள்ளை வாரணன் தமது தமிழ் இலக்கிய வரலாறு (தொல்காப்பியம் பக்.77) குறிப்பிட்டுள்ளதும் அச்சப்த வர்மனே சமண முனிவரான குந்த குந்தரை ஆதரித்த சிவஸ்கந்த வர்மன் என்பதாகவும் ஏற்கலாம் என்பதனோடு கந்தன் எனும் முருக வழிபாடு பிறக்க குந்த குந்தரை உறவேற்ற சிவஸ்கந்தனே காரணன் எனக் கொள்ளவும் இங்கே இடமுண்டாகின்றது.

தவிர, வைதிக இந்து மன்னர்கள் தமிழ்நாட்டை ஆண்டபோதும் வைதிக முறைமையில் தங்களது பெயரை பூர்விக இந்திய அவைதிக அரசுகள் ஆட்சியில் சூடிய பாகு அல்லது வாகு எனத் தாங்கவில்லை. வாகு அல்லது பாகு என வருவது தோள்வலிமை சார்ந்தவர்கள் என்பதாய்

மன்னர் பரம்பரையையே அப்பாகு அல்லது வாகு குறிக்கும். இதனை சமண, புத்த அவைதிக சத்திரியரே பூமி புத்திரர்களாய் ஆதியிலும் தாங்கினர். தந்திரிகளான வேத ஆரியர்களுடன் மோதினர். வேத ஆரியர்களது தந்திரத்தால் பதவி துறந்து துறவியராகி மக்களது கல்வி அறிவை மேம்படுத்த உழைத்தவர்கள் இவர்களே!

ஈழத்தில் சிங்கள பௌத்தம் தோற்றமுற வகை செய்த மன்னன் விஜயபாகுவில் இருந்து ஈழத்தை ஆண்ட தூய சத்தரிய மன்னர்களது பெயர்கள் பாகு என சிங்கள மன்னரகளதும் தமிழ் மன்னர்களதும் பெயர்கள் சமண பௌத்த அவைதிக வழியில் நின்று கொண்டன.

தமிழ்நாட்டு வைதிக மன்னர்களோ சமண, பௌத்த மரபினர் போல அரச குடும்பத்து வழி உருவாகாது அரசுரிமை பூண்டவர்களாகவும் இருக்க, அவர்களில் வைதிக கெடுபிடியில் அரசியற்ற வேண்டி இருந்த சத்திரிய மன்னர்களோ ஆரிய வைதிக பார்பனிய கெடுபிடியால் அப் பாகு பெயர் தாங்கத் தடையாக இருந்தவர்கள். இவர்களில் பல்லவ மன்னர்களின் வரலாறுகள் தெளிவாக உருவாகாதபடி வரலாற்றாசிரியர்கள் குழப்ப வரலாற்றை பதிவாக்க இந்திய தொல்லியல் சாசனங்கள் இன்னும் வெளிப்படுத்தாத நிலையில் கர்நாடகத்தில் அவை மூடி மறைக்கப் பெற்றிருக்கின்றனவா? அவ்வாறே இன்றைய வைதிக ஆட்சி காக்கப்பட்டு வருகின்றதா? இவை மன எழுச்சி பெறாத அவர்களது அறியாமையின் விளைவே.

இன்றைய வைதிக இந்துக்களின் கந்த புராணத்தில் கந்தன் எனும் முருகனுக்கு தானைத் தளபதியாக வீரபாகு தேவர் அமைகின்றார்.

ஆனால், தமிழிலே கந்த புராணம் எழுவதற்கு முன், வடமொழியில் எழுந்த ஸ்கந்த புராணத்தில் தேவர்களை வதைத்த தாரகாசுரனுடன் மோதும் ஸ்கந்தனது படைத்தளபதியாக இருந்தவர் வீரபத்திரர். அவ் வடமொழி காப்பியம் தெய்வானை எனும் கந்தனது ஒரே தாரத்துடன் வட ஆரிய முறைமையில் முற்றுப் பெற்றது.

வடமொழி ஸ்கந்த புராணத்தைப் பின்பற்றி தென்நாட்டிலே பின்னர் தமிழிலே பிறந்த கச்சியப்ப சிவாச்சாரியாரது கந்த புராணமோ கந்தன் மணமுடித்த தேவருலக தெய்வானையின் பின் சூத்திரரான தமிழரை உறவேற்க தமிழர் வணங்கும் கந்தனுக்கு இரண்டாம் தாரம் என வேட்டுவவள்ளியின் மண முடிப்பினை முன்வைக்கின்றார்.

வட நாட்டு ஆரிய தேவருறவுடன் பின்னடைவுற்ற திராவிட சூத்திர தமிழ் மக்களை இணைப்பதாக வேட்டுவ வள்ளி திருமண நிகழ்வாகி பின்னடைவுற்ற தமிழர் நிமிர தமிழ் கந்தபுராணமே வகை செய்திருக்கின்றது.

தென்நாட்டுத் தமிழர் அரசுகள் வைதிகத்தை அவைதிக புத்த சமணமூடாக இணைக்கும் மார்க்கமாக உருவானபோது கந்தனது தளபதியாக இனங்காட்டப் பெறும் தானைத் தளபதியே வீரபாகு தேவர் ஆவார்.

அவைதிக பௌத்த தமிழர் படைத்த இலக்கணத்தையும் உள்வாங்கியதே தமிழர் கநதபுராணம்.

கந்த புராண கடவுள் வாழ்த்திலே வரும் 'திகட சக்கர.' என்பதை பிழையான இலக்கணம் என அரசசபை மொழிகிறது. தமிழ் பௌத்தரான புத்த மித்திரனாரின் 'வீரசோழியம' என்ற தமிழ் இலக்கணத்தினூடாக கச்சியப்பரின் சீரான காப்பியம் என கந்த புராணம் இனங்காணப் பெற அது அரச சபையிலே அரங்கேற்றமாகின்றது.

தமிழ் பௌத்த மரபிலே வந்த புத்த மித்திரனாரின் வீரசோழியம் நூலில், 'ழகர மெய்யானது ளகர மெய்போல வல்லெழுத்து வரின் டகர மெய்யாகவும் மெல்லெழுத்து வரின் ணகர மெய்யாகவும் திரிதற்கும் குறில் செறியாத ழகர மெய் குறில் செறியாத ளகர மெய்போல தகர நகரங்கள் வரின் கெடுதற்கும், ழகர மெய்யின்முன் வரும் நகர தகரங்கள் ளகர மெய்யின்முன் திரிதல்போல முறையே ணகரமாகவும் டகரமாகவும் திரிதற்கும் விதி' என ஆவதை நிரூபிக்கும்.

புத்த மித்திரனாரின் இத்தகைய விதியின் மூலமாகவே கச்சியப்ப சிவாச்சாரியார் பாடிய கந்த புராணம் ''திகழ் தசக்கரச் சண்முகம்.. எனத் தொடர்வதை கச்சியப்பர் திகட சக்கரமாய் எழுத இடந்தந்தது. நூல் அரங்கேற்றத்தின் போது, புரியாத இலக்கணவாதிகளால் கேள்வி எழுந்தது. மேற்படி இலக்கணம் நிரூபிக்கப்பட இறைவன் அருளால் கந்த புராண ஆசிரியர் கச்சியப்பரின் கனவின் பிரகாரம் தமிழ் பௌத்த இலக்கணமான வீரசோழியம் இலக்கணத்தால் கந்த புராண இறைகாப்பியம் அரங்கேறியது.

இவ்வாறு, கந்த புராணம் வீரசோழியம் செய்த புத்த மித்திரனாரால் இலக்கண சுத்தம் நிரூபிக்கப்பட்டது. இவை இவ்வாறு இருக்க, இன்றும்

பௌத்த சிங்கள மக்கள் சர்வோதயம் முதலாக தங்கள் சிறப்பான பொது நிகழ்ச்சி முடிவில் அவர்களது பௌத்த பூசனை மொழியான பாளி மொழியிலே உலகம் செழிக்க ஓதும் மங்கள கீத சுலோகம் வருமாறு..

''தேவோவ ஷத்து கலெனா
ஷஷ ஷம்பதி கொடிசா
பிடோ பவத்து லோக்கேஸா
ரஜபவத்து தம்பிகோ''

இப் பாளி மொழியை தமிழிலே பின்வருமாறு பொருள் கொள்ளலாம்.

'' மாதம் மும்மாரி பொழியட்டும்.
கழனிகள் பசுமையால் நிறையட்டும்!
உயிர்கள் அனைத்தும வாழட்டும்!-எங்கும்
நீதி சமனாய் ஓங்கட்டும்.''
(may there be rain,in in due seasoup,
may that lead to a rich harvest may the whole world be happy
may the rilers be righteous.)

தமிழர்தம் கந்த புராணமும் மேற்படி பௌத்த பாளி மொழியிலே அமைந்த உலகம் செழிக்க வேண்டிய மங்கள கீதத்தை ஒத்தபடி தமிழிலே தனது வைதிக செல்வாக்கினூடாக பின்வருமாறு மங்களம் இசைக்கின்றது.

''வான்முகில் வழாது பெய்க!
மலிவளம் சுரக்க –மன்னன்
கோன்முறை அரசு செய்க!
குறைவிலாது உயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள ஓங்க!
நற்றவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்!''

மேற்படி பௌத்த பாளிமொழியில் இல்லாத வைதிக இந்து மதத்திற்கே உரிய வகையில் நான்மறை, வேள்விகள், சைவம் முதலான பதங்கள் கந்த புராணத்தில் இடம்பெற்றிருப்பது அதன் வைதிகச் சார்பு குறிக்கவே.

மேற்படி, பௌத்த பாளியில் கூறப்பட்டிருப்பது போலவே தமிழ் மூதாட்டி ஔவை செய்த ''வரப்புயர நீருயரும் நீருயர நெல்லுயரும் நெல்லுயரக் குடி உயரும் குடி உயரக் கோன் உயர்வான்'' எனும் பாடலும் அமைகின்றது.

மேற்படி, புத்த மித்திரனார் செய்த தமிழ் இலக்கணமான வீர சோழியத்தை தமிழ் நாட்டை 11-ம் நூற்றாண்டில் ஆண்ட வீர ராஜேந்திர சோழனே இயற்றுவித்தான். தமிழகத்தில் பொன்பற்றியூரில் வாழ்ந்த பௌத்த தமிழரான புத்த மித்திரனாரே அவ்வூர் சோழனின் பெயரால் மேற்படி தமிழருக்கான விரசோழியம் இலக்கணத்தைத் வழங்கினார். மிகவும் அற்புதமாகப் போற்றப்படும் வீரசோழியம் இலக்கணம் பிற நூல்களில் கூறப்படாத சில புணர்ச்சி விதிகள் கொண்டது. இந்நூலின் உரையாசிரியரான பெருந்தேவனாரால் காட்டப்பெற்ற இலக்கண மேற்கோள் சூத்திரங்களில் பல, ஏனைய நூல்களிலும் உரைகளிலும் காணப்படாது உள்ளதால் அவை பழைய சூத்திங்களாகவோ உரையாசிரியரால் இயற்றப்பெற்ற உரைச் சூத்திரங்களாகவோ இருக்கலாம் எனும் ஐயாவினாவும் வைதிக உரைஞர்களால் முன்வைக்கப்படுகின்றது.

தவிர.சீனநாட்டு புத்த மதத்தில் போதிசத்துவர் எனும் புத்தரும் ஸ்கந்த (கந்தன்) எனும் பெயரால் அழைக்கப்பட்டதும் நோக்கற்பாலது. (திருவருள்வாசகம்.... பக்.96)

இனி தமிழ் வைதிகர் முருகனை உள்வாங்கிய வட நாட்டின் புராணக் கதைகளுக்கு வருவோம்.

## கௌபீன கந்தன்

வைதிக சிவ குடும்பத்தில் இளைய மகனாக இருந்த முருகன் எனும் குமரன் தனது அண்ணனான விநாயகருடனான ஞானப் பழப் போட்டியில் வெல்ல உலகம் சுற்றி வருகிறார். விநாயகரோ தனது பெற்றவரான சிவன் பார்வதியே உலகம் என அவர்களைச் சுற்றி வந்து ஞானப் பழத்தைப் பெறுகின்றார்.

அப்போட்டியில் முருகனான கந்தன் தோற்கிறார். அதனைத் தாங்க முடியாது தென்நாடு வந்து தனது ஆடை களைந்து கௌபீனம் அணிந்து தென்நாட்டு மக்களின் தெய்வமாகிறார்.

கந்தக் கடவுளின் இக்கௌபீன சம்பவம் தென்நாட்டில் பெரிதும் வேரூன்றி இருந்த தென்நாட்டு மக்கள் உணர்ந்த திகம்பர சமண துறவியரின் நிர்வாண கோலத்துடன் ஒப்பிடப்படலாம். அவ்வாறு நிர்வாண சமணப் பிரிவிலிருந்தே தமிழர்தம் கௌபீன முருகவழிபாட்டுக் கதை பிறந்திருக்கலாம்.

தவிர, ஆதியில் சமண, புத்த மன்னர்கள் தூய அரச வம்சத்தில் உருவானவர்கள்.

அவர்கள் தூய சத்திரியர் என்பதை விளக்கும் பாகுஜா அல்லது பாகு என்பது பாளி மொழியில் கட்டியா என ஆவது. இக் கட்டியா (கட்டி) என்பதையே முன்னைய தமிழர் காடவர் என மொழி பெயர்க்க,வைதிக வரலாற்றாய்வாளர்கள் வேடுவர் எனவும் உரை எழுத, தேவார முதலிகளான நாயன்மார்களும் அக் ககட்டியா எனும் பெயரில் ஆண்ட மன்னர்களை 'காடவர் கோன்' எனவும் தேவாரங்களில் இனங்காட்டியுள்ளனர்.

இவ்வாறு, அவைதிக பௌத்த சமண பாகு, பாகுஜா எனும் ககட்டியா தூய அரச பரம்பரை என்பதை விளக்கும்.

இந்திய வட நாட்டிலே தனது அரசைத் துறந்து நிர்வாண துறவியாகி சந்திர குப்த மன்னருடன் தென்நாடு வந்து திகம்பர சமணம் பரப்பியவரோ முன்னர் வட நாட்டில் சத்திரியராக அரசியற்றிய சமணரான பத்திரபாகு முனிவராவார்.

## தமிழ் கந்தக் கடவுள்

தமிழ் நாட்டில் காமன் எனும் கந்த வழிபாடு சமணத்தைத் தனக்குள் சீரணித்து பௌத்தமுடன் உறவு தந்தது.

ஏற்கெனவே சமண அருகக் கடவுள் மலைமீதமரும் கந்தன் எனவே அழைககப்பட்டதைசிலப்பதிகாரம் முதலான சமண் காப்பியங்கள் இனங்காட்டும். அவ்வாறு வைதிக முருகன கந்தனாக உருவாக அவைதிக சமண நெருக்குவாரமோ வைதிக முறைமை சிவனது காமாக்கினி மூலம் வைதிக முருகன் எனும் கந்தன் சரவணப் பொய்கையில் அவதரித்த கதையாகவும், அது கர்நாடகாவில் அமைந்த துறவற சமணர் தலமான சிரவண பெல்கோளாவுடன் இணைக்கப்படும்போது, அவைதிக அருகக் கந்தனே பின்னைய வைதிகரால் சமண ஒழிப்புக் காலத்தில் சரவணப் பொய்கையில் பிறந்த வைதிக கந்தனாக உருவாக்கப்பட்டிருக்கலாம். தவிர, கருநாடகாவில் உள்ள சமண தலமான சிரவண பெல்கோளா என்பதனை தமிழிலே பொருள் கொள்ளும்போது, சிரவண எனபது சமணத் துறவோர் எனவும், பெல் என்பது வெண்மை (தூய்மை) எனவும் கோளா என்பது குளம் (பொய்கை) எனவும் கூறப்படும்.

## வீரபாகுதேவர்

புத்த, சமண சத்திரியர்தம் சிறப்புப் பெயர் தாங்கிய அவைதிக பாகு பெயருடனேயே பின்னைய வைதிக கந்தன் எனும் முருகனின் தளபதி வீரபாகு தேவர் ஆகின்றார்.

இங்கே பாகு என அமையும் அரச பரம்பரை அவைதிக மதவழி தோற்றம் பெற்றவராகின்றனர்.

இலங்கையில் வட இந்தியாவில் இருந்து கால் பதித்த சிங்களரின் மூதாதை எனக் கூறப்படும் விஜயபாகு முதல் ஈழத்தை ஆண்ட பராக்கிரமபாகு, புவனேகபாகு முதலானோர் ஈழத்தே தமிழ், சிங்கள வரலாற்று வழியும் இனங்காணப்படுவர்.

சோழர் வரலாற்றில் சிங்களாந்தக தெரிஞ்சகைக்கோளன் எனச் சிறப்புப் பெயர் சூடப் பெற்ற 1ஆம் பராந்தக சோழன் இலங்கையை வென்றவன். (தமிழ் நாட்டு வரலாறு (தமிழ் வளர்ச்சித் துறை வெளியீடு) சோழ பெருவேந்தர் காலம் 2ஆம் பகுதி) குஞ்சரமல்லன் எனவும் பெயர் படைத்த அம் மன்னனது பெயரை ஈழத்தின் வட பகுதியில் உள்ள பரந்தன், குஞ்சுப் பரந்தன் ஆகிய ஊர்கள் இனங்காட்டுவதாக ஈழ வரலாற்றாசிரியர்கள் சுட்டுவர். (ஈழத்து இடப்பெயர்வு ஆய்வு யாழ்ப்பாண மாவட்டம் பக் 371-372) - கலாநிதி இ. பாலசுந்தரம்) பராந்தகனது படைத்தளபதியான புவனேகபாகு நல்லூர் கந்தசுவாமி கோயில் கட்டியத்தில் சூரிய குல சோழர் முறைமையில் உள்வாங்கப்படுகின்ற தமிழ்ச் சிற்றரசனாவதுடன் புத்தமதத்துடன் கந்தக்கடவுள் தொடர்புபடுத்தப் பெற்றவனாக சிறீ சங்க போதி எனும் நாமமும் அத்தமிழ் மன்னனான புவனேகபாகுவின் நல்லூர் கட்டியத்தில் இடம்பெற்றுள்ளது.

சிறீமான் மகாராஜாதிராஜ
அகண்ட பூமண்டலப்ர
தியாதி கந்தர்வ விச்ராந்த கீர்த்தி
சிறி கஜவல்லி மகாவல்லி
சமேத சுப்ரமணிய
பாதார விந்த யனாதிருட சோடக
மகாதான சூரிய குல
வம்சோத் பவ சிறி சங்க
போதி புவனேகபாகு.

இனி திருக்குறளுடனான சமணத்திற்கு வருவோம்.

சங்கம் மருவிய காலம் முதல் வைதிக பக்தி இலக்கிய காலம் தோன்றும் வரையாக உள்ள இடைக்காலத்தில் எழுதப்பட்ட பதினெண்கீழ்கணக்கு, ஐம்பெருங் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள் முதலான தமிழ் இலக்கிய நூல்கள் யாவும் வெகுவாக சமணர்களாலேயே இயற்றப்பட்டது என்பது மறுக்க முடியாத உண்மை. அதனால் அதனுள் அடங்கிய புனித நூலான திருக்குறளும் சமண சமய நூல் என்பதை சமணர் தீர்மானிப்பதில் நியாயம் உண்டு.

பின்னாளில் திருக்குறள் சமண நூலே என்பதை திரு.வி.கல்யாணசுந்தர முதலியார், பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை முதலான தமிழ் அறிஞர்களும் ஒப்புக் கொள்கின்றனர்.

தமிழரது மதவழி இணக்கப்பாட்டினை வைதிகவழி புரியும்போது வைதிகர் திருக்குறள் செய்தவர்கள் சமணர்களே என ஏற்க இடமுண்டாகிறது. ஆனால், கௌதம முனிவர் எப்படி பெண்டாளலாம் என்ற வினாவை தேவேந்திரனுடன் திருட்டு முறையில் போகம் புரிந்த தனது பத்தினியான அகலிகையை சமணத்துறவியான கௌதம முனிவர் கல்லாக சபித்த புராண வரலாறு 25ஆவது குறளிலே இடம்பெற்று இருப்பது சமணத்திற்கு உடன்பாடு அல்ல என ஆவதாக ஜியூபோப் கூறும் ஆய்வும் இங்கே எழுகின்றது.

ஐரோப்பிய கிறித்தவ போதகரான ஜி.யூ.போப் அவர்கள் தமிழ்நாட்டிலே திருவாசகம், திருக்குறளை தமது ஐரோப்பிய மொழியிலே மொழி பெயர்த்தவர். தமிழ்நாட்டிலே வாழ்ந்த அவர், தாம் இறந்தபிறகு தமிழ்நாட்டிலே தனது கல்லறையில் ''இங்கே ஒரு தமிழ் மகன் உறங்குகின்றான்.''எனப் பொறித்துவிடுங்கள்.''எனக் கேட்டு அவ்விதமே தமிழர் நட்புறவுள் இன்றும் உறங்கிக்கொண்டு இருப்பவர்.

ஆனால் ஜியூ.போப் அவர்களது ஒக்ஸ்போட் பல்கலைக்கழக மணிவாசகர் பற்றிய ஆய்வுரையிலே தமிழகத்தில் அப்போதிருந்த மேட்டுக் குடியினரான வைதிக பிற மத காழ்ப்புணர்ச்சி கொண்ட தமிழ் கல்விமான்களை தமது கிருத்துவ மதம் பரப்பலின்போது பகைகொள்ளாது நட்புறவாக்கி, தமது பணியை பாதுகாக்க வேண்டிய துர்ப்பாக்கியத்திற்குத் தள்ளப்பட்டிருந்ததையும் மேற்படி ஆய்வுரையிலே தொட்டுச் சென்றதனூடாக அவரது பக்கச்சார்பை இந்நூலாசிரியர்

''தமிழரும் மதப்போரும்' என்ற ஆய்வுக்கட்டுரையிலே விளக்கியுள்ளார்.

கிறித்தவ போதகராக அப்போது தமிழகததில் இருந்த ஜியூ. போப் அவர்கள் அகலிகையை சமண துறவியான கௌத முனிவர் மணந்தவராகக் கொள்ளாமல் தீர்த்தங்கரர்களது பணிவிடை மகளிர் போன்றயக்சினி என கௌதம முனிவர் அகலிகையை ஏன் ஏற்க முடியாது? என்ற ஐயவினா மேற்படி புனித திருக்குறளூடாக இந் நூலாசிரியர் முன்வைப்பதை ஆய்வுலகம் ஏற்றுக் கொள்ளுமா?

## பௌத்தத்தில் திருக்குறள்

தமிழுக்குச் சமணர்கள் படைத்தவைபோல தமிழர் பௌத்த மதத்தில் இருந்தபோது அற்புத நூல்களை உருவாக்கி இருக்கின்றனர். ஐம்பெருங்காப்பியங்களிலும், ஐஞ்சிறு காப்பியங்களிலும் காணப்படும் நூல்களும் அவர்கள்வழி கி.பி.09-ம் நூற்றாண்டில் உருவான வீரசோழியம் முதலான பழந்தமிழ் இலக்கண நூல்கள் மற்றும் சித்தர் பாடல் முதலானவையும் அதற்கு எடுத்துக்காட்டு.

தமிழ்நாட்டில் சைவசமயிகளான தமிழரது சிவனே புத்தராகவும் அல்லது புத்தரே சிவனாகவும் வழிபடப்பெற்றிருக்கின்றனர்.

சிவபக்தியில் திளைத்தவரான சிவஞானபோதம் நூல் செய்தவராக வைதிகர் குறிப்பிடும் மெய்கண்டதேவர் தாம் வாழ்ந்த திருவெண்ணை நல்லூரில் வெட்டுவித்த குளத்திற்கு புத்தனேரி என்ற பெயர் சூட்டி மகிழ்ந்திருப்பதும், காஞ்சி காமாட்சி அம்மன் ஆலயத்தில் புத்தர் படிமம் சிவனாக இருந்ததற்கு ஆதாரமாவதும் சிவனே புத்தரென தரிசிக்கப்பட்டமைக்கும் உதாரணமாகும்.

63- நாயன்மார்களில் ஒருவரான சேரமான் பெருமாள் நாயனார், திருக்கைலாயம் எனும் சிவலோகத்தில் இருந்து ஞான உலா பாடியதும் அதனை அங்கிருந்த பெருஞ்சாத்தன் என்ற வணிகனிடம் பூலோகத்தே செல்லும்போது, கொண்டு சென்று சிவன் புகழ் பரப்பும்படி கேட்டுக் கொண்டதற்கு அமைவாக அவ்வணிகன் சொர்க்கலோகத்தே இருந்து பூலோகம் வந்து திருப்பிடவூரிலே அந்நூலை அரங்கேற்றியதாக கூறப்படும்போது, திருப்பிடவூர் என்பது திருப்புத்தன் ஊர் என்பதாக புத்தரே சிவனாக அங்கே வீற்றிருந்து இருக்கலாம் என்பதும் உள்வாங்கப்படுகின்றது.

இத் திருப்பிடவூர் என்பதில் பிடவூர் என்பது பிட்டன் ஊர் என்பதாக புத்தன் ஊர் ஆகிறது. அப்பித்தனே சிவனாக பின்னர் உருவாக சுந்தரர் வரலாற்றிலே கிழப் பிராமணராக வந்து தனது பரம்பரை உட்பட தானும் அவரது மதவழி அடிமை என்றதும் அதனை நிரூபிக்க திருவெண்ணை நல்லூர் அழைத்துச் சென்று சிவன் மாயமாக மறைந்ததும் வரலாறாக எழுந்தாலும் ''நீர் என்ன பித்தரோ?'' என்ற கேள்வியே பதிலாக புத்தர் சிவனான சம்பவம் வைதிகவழி புலனாகிட ஐராவதம் மகாதேவனின் கொங்கர் புளியங்குளம் கல்வெட்டும் அதனை ஊர்ஜிதம் செய்கின்றது.

இது தவிர, இந்தோனேசியாவில் தமிழின் 'பெரும் புத்தூர்" எனும் பௌத்த வரலாற்றுச் சான்றுகள் கொண்ட பெரு நகரம் 'பொருபுடுர்'(Borubudur) எனும் திரிபில் இன்றும் தமிழாக ஒலிக்கிறது.

புத்தபகவானை அறவழி அந்தணன், மலர்மிசை ஏகினான், தனக்கு உவமை இல்லாதான் என்பது கொண்டும், புத்த சமயத்தின் புனித நூலான தம்மபதத்தில் உள்ள ஒவ்வொரு சுலோகமும் புனித திருக்குறளது கருத்துக்களுடன் ஒற்றுமை காண்கிறது என்பது கொண்டும் டாக்டர் பி.சி. லோ என்பார் கூறியிருக்கின்றார்.

திருக்குறளில் ஜீவன், பிறவி பற்றி மொழிவது பௌத்தர் நூல்களுக்கு முரணானது.

எனவே தமிழரது புனித திருக்குறளை முழுமை பெற்ற பௌத்த நூலென கொள்ள முடியாது.

மொத்தத்தில் வைதிகரும் அவைதிகரும் ஏனைய பிற மதத்தினரும் புனித திருக்குறளை தம்முடன் இணைப்பதை நோக்கப் புகுவோம்.

## சர்வமத ஐக்கியம்

திருவாவடுதுறை ஆதீனமாகிய கொரடாச்சேரி சிவத்திரு வாலையானந்த அடிகள் திருவள்ளுவரை சித்தாந்த சைவர் என்பார். சிவபெருமானை மணிவாசகர் பாடிய திருவாசகம், ஏனைய தேவாரங்கள் தரும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் வழி திருக்குறளை சைவ நூலாக இனங்காண்போரும், சிவமந்திரமாக திருமந்திரம் தந்த திருமூலர் ஒருமையை ஓதி நிற்பது கொண்டும் சிவமரபிலே அதனைப் பேசிவருவாரும். புனித திருவள்ளுவரை திரு விக்கிரம, வாமன அவதாரம், தாமரைக் கண்ணான் உலகு என்பது காணும் அவரது

புனித குறள் கொண்டு அவரை ஒரு வைணவர் என உரை பகர்வாரும், புத்தபகவானின் தம்மபதத்தில் உள்ள சுலோகங்களை இப்புனித குறளுடன் ஒட்டி உறவு கண்டு இந்த நூல் பௌத்த நூலே என வாதிப்பாரும், விவிலிய வேதத்தில் யேசுநாதர் அருளிய மலைப் பிரசங்கத்தின் எதிரொலியை இதிலே உணர்ந்து கிறித்துவ வேதாகமத்தைச் சேர்ந்த நூலென உரைத்து வருவாரும், அகிம்சை, புலால் உண்ணாமை, மலர்மிசை ஏகினான், எண் குணத்தன் ஆதிபகவன் எனும் பகுதிகள் வழி தமிழர்தம் இப்புனித நூல் சமண சமயத்தாருடையதே என வாதிப்பாரும் உலகிலே உளர்.

ஏற்கனவே கூறியதுபோல உலகின் அனைத்து மத சாராம்சங்களை உள்வாங்கிய ஆதியும் அந்தமுமாக தமிழருக்காகப் படைக்கப் பெற்ற அதிசக்தி வாய்ந்த உலக வேதமே தமிழர்தம் புனித திருக்குறளாகும்.

## ஐம்பூத இயக்கம்

உலகம் என்னும் இயற்கை, நிலம், நீர், காற்று, ஆகாயம் நெருப்பு என்பதாய் ஐம்பூதங்களால் இயக்கம் பெறுகின்றது.

மனிதர் உள்ளிட்ட உயிரினங்கள் உடல், வாய், கண், மூக்கு, செவி எனும் அவர்களது ஐந்து புலன்கள் இயற்கை எனும் ஐம்பூதங்கள் வழி பெறும் ஆகர்சிப்பால் இவ்வுலகிலே தமது வாழ்வை வகுத்து வருகின்றனர்.

இன்றைய நாகரிக உலகிலே மனிதப் புலன்களில் ஏற்படும் குறைபாடுகளை சீர்செய்து அவர்களது வாழ்வு முறைமையை வகுக்க ஐம்புலன்களால் அறிவியல் வளன் பெற்ற மனிதர்களே வகை செய்தும் வருகின்றனர்.

மனிதரின் ஐம்புலன்களும் ஐம்பூதங்களின் தன்மையில் இயங்குவன.

அனைத்து உயிரினங்களையும் காக்கும் சூரியனின் ஒளி பிறக்க அதிலுள்ள ஏழு வர்ணங்களே ஒத்துழைப்புத் தரும்போது அல்லது தீப ஒளியில் தோன்றும் ஏழு நிறங்களே வகுக்கும் ஒளிபோலவே மனித உடற் கூறுகளின் ஏழு வர்ணங்கள் பற்றியும் அது மனிதரில் நிகழ்த்தும் தாக்கங்கள் பற்றியும் அத்தகைய 7 வர்ணக்கலவை பொதிந்த மனிதரின் ஐம்புலன்கள், இயற்கையான ஐம்பூத ஆகர்சிப்பிற்கு உட்பட்டு இருப்பது பற்றியும் அறிவியல் ஆன்மிகம் நிரூபிக்கும்.

உயிர்கள் அனைத்திலும் அறிவால் உயர்ந்த மனிதர்களது ஒருமித்த ஒருங்கிணைப்பின் அவசியம் பற்றி ஐம்பூதங்களும் உலகிற்கு உணர்த்தவே செய்கின்றன.

பிரிவினை பேதங்கள்வழி நிறைவு பெறாத உலக உயரினங்கள், ஆன்மாக்களது அழிவுகளை உலகின் இயற்கைச் சீற்றங்கள் உணர்த்தவே செய்கின்றன.

இதற்குள்ளே ஆன்மிக வாதிகள், உலக நேயம் கொண்ட மகரிஷிகள், சித்தர்கள் தமது புலன் அடக்கவழி ஆழ்ந்து தம்முள்ளே பரிசுத்த ஒளியை நிரப்பினர். பஞ்சபூத சக்திகளது அலைகள் ஆகர்சிப்பினை பஞ்சலோகத்திலும், கருங்கல்லிலும் இருப்பதைக் கண்டு தமது வணக்கத்தலங்களிலே தாம் வணங்கும் தெய்வச்சிலைகளைத் தாபித்தனர்.

ஐம்பூத ஆகர்சிப்பை தமது ஐம்புலன்கள் வழி பரிசுத்த உள்ளத்துடன் தியான ஒருமையுடன் திணித்து தமது தியானிப்பில் தெய்வீக உணர்வாய் உடல், உள உறுதி பெற்று நிமிர்ந்தனர்.

புதிய ஆரோக்கியம் பெற்ற உடல், உள அறிவியல் சிந்தனையால் உயர்ச்சி பெற்றனர்.

இந்த நூலின் ஆரம்பத்தில் கூறப்பட்டதுபோல தேடுதலும் தேறுதலும் என ஆதி மனிதர் காட்டிலே தேடிய, பயபக்தியுடன் பணிந்த அவர்கள் கண்ணுக்குப் புலப்படாத பூச்சாண்டி காட்டி தேறுதல் தந்த மாய சக்தியே இன்றைய உலகிலே நாகரிக மனிதரிடம் முன்னவை போல பூச்சாண்டி காட்டி பணிய வைப்பதாக வைதிக தமிழரான இந்துக்கள் தமது முழு முதற் கடவுள் என ஆக்கிக் கொண்ட சிவனது நடராஜர் உருவ வழி ஐம்பூதத்துள் ஐம்புலன்களை நிரப்புகின்றனரா?

## தமிழர்தம் புனித வேதம்

தமிழர் காலங்காலமாக பற்பல மார்க்கங்களை கைக்கொண்டு வாழ்ந்து வந்தவர்கள், பற்பல நம்பிக்கைகளுக்குப் பாத்திரமானவர்கள்.

அவர்கள் பிற மதங்களில் பயின்ற, பின்பற்றிய சிறப்பு வாய்ந்த தத்துவங்கள், புராண சம்பவங்கள் வாழ்வியல் தத்துவங்கள் அனைத்தும் ஒருமுகப்படுத்தப்பட்டு ஏக இறை தத்துவம் அடங்கிய உயரிய புனித நூலை வாழ்வியல் கலை என உருவாக்கி மூடமை, போலிமை நீங்கிய புனிதராய் தமிழரை ஆக்க வேண்டிய தேவை முன்னர் தோன்றிய தமிழ் ஞானியருக்கு ஏற்பட்டிருக்கின்றது.

அவ்வாறு தமிழர் முன் வைக்கப்பட்டுள்ள தெய்வீக புனித திருக்குறள் அத்தகைய புனித ஞானியராலேயே படைக்கப் பெற்றிருக்கின்றது.

இதனைக் காலங்காலமாக சீரிய முறையில் கைக்கொள்ளாத தமிழர்கள் தாம் பின்பற்றும் பிற மதவழி உலக விரிசல்களில் புகுந்து காலங்காலமாக அல்லல் பட்டு வந்திருக்கின்றனர். அவ்வாறே இன்றும் வருகின்றனர்.

தமிழிலே உருவான இப்புனித வேதம் தமிழருக்கு மட்டுமல்லாமல் ஏனைய மொழி பேசும் உலகினரை சிந்தித்து செயலாற்ற ஒருங்கிணைந்த மனித வாழ்வு முறை பேண வகுக்கப்பெற்ற ஒப்பற்ற பெரும் புனித இலக்கியம்.

இப்புனித நெறி ஏற்கனவே கூறப்பட்டது போல புறநானூறு முதலான சங்கத் தமிழ் இலக்கிய வழி ''யாதும் ஊரே யாவரும் கேளிர்' என ஒருமை காண்பதால் ஒப்பற்ற ஒரே தமிழ் வேதம் எனும் தகுதி பெற்றது.

மனிதர் உலகத்தோடு ஒட்டி ஒழுக வேண்டும். இல்லையேல் அவர்கள் பல நூல் கற்றும் கல்லாதவர்களே உலக நடைமுறைகள் அனைத்தும் ஒரு கண்ணோட்டத்தின் காரணமாகத்தான் நிலைத்திருக்கிறது. அவ்வாறான கண்ணோட்டம் இல்லாதவர்கள் இந்த பூமிக்குப் பாரமானவர்களே எனவும் இப் புனித வேதமந்திரங்கள் இவ்வாறு உபதேசிக்கின்றது.

உலகத்தொடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலாதார் (திருக்குறள் அறத்துப்பால் இல்லறவியல் - 140)

கண்ணோட்டத்து உள்ளது உலகியல் அ்திலார் உண்மை நிலக்குப் பொறை. (திருக்குறள் கண்ணோட்டம் (572)

**தமிழர் திருக்குறள் உலக வேதமே!**

உலகில் வேதங்கள் அல்லது மறைகள் என வழங்கப்படுபவை அனைத்திலும் புனித திருக்குறள் மட்டுமே சமயச் சார்பு அற்றது. ஒரு நாட்டிற்கோ ஒரு மொழிக்கோ ஓர் இனத்திற்கோ, ஒரு காலத்திற்கோ என உருவாக்கப்படாதது. உலக மக்கள் யாவருக்கும் பொதுவான, எக்காலத்திற்கும் உரியதாகவும், உலக மக்கள் அனைவரும் ஒரு குலமாக வாழுவதற்கு ஏற்றவகையிலும், உருவாக்கப் பெற்ற ஒப்பற்ற உலகப் பொதுமறையே தமிழர்தம் புனித திருக்குறள்.

தமிழிலே தோன்றிய இப்புனித திருக்குறள், வாழ்வு நெறி வகுக்கப்பெற்ற ஒப்பற்ற ஓர் பேரிலக்கியம். அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் (காமத்துப்பால்) என முப்பிரிவு கொண்டது.

அறத்துப்பாலில், இல்லறம், துறவறம் எனும் வாழ்வியல் பொருட்பாலில் அரசியல் அறம், இன்பத்துப்பால் அல்லது காமத்துப்பாலிலே காதல், இன்பவிளக்கம் என்பதாக, அதி அற்புத புனித மறையாக இது தொகுக்கப் பெற்றுள்ளது.

இது, மனிதர் மாண்புடன் வாழ 1330 குறட்பாக்கள் வழி அறம், பொருள், இன்பம், (காமம்) என்னும் மூன்று பெரும் பிரிவுகளாய் வகுக்கப்பெற்றது.

வாழ்வியலில் 380 குறள்களும் அரசியலில் 700 குறள்களும் இன்பவியலில் 250 குறள்களும் என்பதுமாக மேற்படி 1330 குறள்கள் கொண்ட இதனை, அனைத்துலகுமே ஏற்றுக் கொண்டாடுகின்றது.

இதுவே தமிழர் பின்பற்ற வேண்டிய புனித வேதமாகும் தகுதி பெற்றது. ஏறக்குறைய உலகின் எண்பத்தெட்டு மொழியினர் இதனைத் தமிழில் இருந்து பெயர்த்துள்ளனர். அரபு உட்பட ஏனைய உலகினர் புனித திருக்குறள் மீது கொண்ட மோகத்தால் தமது மொழி பெயர்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

முன்னர் தமது குழுமத்தை தமது பொருளாதார பலத்தால் உயர்வாக்கிய சமூகப் பிரிவுகள் எதிரி நாட்டு அடிமைகள் அல்லது நசுங்குண்ட மதங்கள் வழி அடிமையானவர்களை தமது பிரபுத்துவ வாழ்வு முறைமையில் தமது வைதிக மதத்தில் அடிமையர் என உருவாக்கி கீழ்மைத்தொழில் செய்ய ஏவினர்.

அஃது உணர்ந்த தமிழர் புனித வேதமோ, ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்.'' என்பதாய் 'செய்தொழில் வேற்றுமையால் எந்த உயிரும் அந்நியமாகி தாழ்வுநிலை எய்திவிட விட முடியாது'' என்பதான வழிமுறைகளை வகுத்து அனைத்து ஆன்மாக்களையும் ஒருங்கிணைத்தது. (பொருளதிகாரம் - 972)

இனம், நிறம், மதம், மொழி, ஜாதி கடந்து அனைத்து உலகுமே ஏற்கும் இதனை 'உலகப் பொதுமறை' எனச் சிறப்பித்துக் கூறுவர். அத்தகைய தமிழிலே தோன்றிய புனித திருக்குறள் தெற்கே லெமூரியாக் கண்டத்தில் தோன்றி நாகரிகம் படைத்த முதல் மனிதரையும் இனங்காட்டுகின்றது எனப்பதால் அனைத்து உலக சமுதாயமுமே ஏற்று வாழ்வாங்கு வாழ ஏற்ற புனித மறைநூல் தமிழர்தம் உலகவேதம் எனும் சிறப்புப் பெயர் தாங்கியது.

## உலகப் பொதுமறை திருக்குறளா?

தீமையை நன்மையினால் அன்றித் தீமையினால் ஒழித்துவிட முடியாது. பகைமையை நட்புறவினால் அன்றி பகைமை கொண்டு மாற்றல் முடியாது. போர் மனப்பான்மையை சமாதானத்தினால் அன்றி போரினால் ஒழித்தல் பொருந்தாது எனப் போதிக்கும் புனித திருக்குறள் உளவியல் உறவு கொண்டும் தமிழரை அரவணைக்கின்றது.

பணம், பட்டம், பதவி முதலியவற்றாலும், சாதி, சமயம், இனம், நிறம் முதலியவற்றாலும், நாடு, மொழி , அரசியற்கொள்கை முதலியவற்றாலும் பிளவுபட்டுக்கிடக்கும் இவ் உலகத்தை ஒன்றாகக் கொண்டு உலக மக்கள் யாவருக்கும் ஒரு காலத்தில் பொது நெறி வகுக்க தனிப் பெருமைக்குரிய தமிழிலே தோன்றிய புனித வேதம் உலகிற்காக தனது பணியை ஆரம்பிக்கும் காலம் நெருங்கிக் கொண்டுதான் இருக்கின்றது.

அழிவின் விளிம்பை அண்மித்துக் கொண்டு இருக்கும் உலகம் மீண்டும் உய்யும் மார்க்கத்தை அனைத்து உலகிற்கும் பொதுவான புனித தமிழ் மறை போதனை புரிந்து வருகின்றது.

''உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலாதார்'' என புனித திருக்குறள் அறத்துப்பால் இல்லறவியலில் போதிக்கப்பெற்றது இன்று நேற்றா? இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர்.

பொருள் பண்டத்தை நிறுக்கும் தராசு சமனாக நிற்பதும், அதில் பொருளை வைக்கும்போது, அதன் அளவைக் காட்டுவதும்போல அறிவுடையவர்கள் நடுநிலையாக இருந்து ஒருபக்கம் சாராது நீதி வழங்க வேண்டும் என்பதை தமிழர்தம் புனித மறை இவ்வாறு ஓதி நிற்கின்றது.

''சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால் கோடாமை சான்றோர்க்கு அணி." (திருக்குறள் அறத்துப்பால் நடுநிலைமை 118)

இவ்வாறு, ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றத்தை தமிழர்தம் புனித வேதமே ஏந்தி நிற்கின்றது.

## அமெரிக்காவின் பக்கத்துணை?

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் தமிழர்தம் புனித ஞானி, 'பிறருக்கும் பகிர்ந்தளித்து தானும் உண்டு பல உயிர்களையும் பாதுகாத்தல் பற்றி

தமிழருக்கான புனித வேதத்தில் வேத மந்திரமாக இவ்வாறு உச்சாடனம் புரிகின்றார்.

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நுலோர் ,
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''

(திருக்குறள் அறத்துப்பால் சொல் 322)

1949-ம் ஆண்டு தொடக்கத்தில் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த 'ட்ரூமன்' மேற்படி தமிழர் புனித வேத கூற்றை உள்வாங்கியவராக உருவாக்கியதே''நான்காம் அம்சத் திட்டம்''

அத்திட்டம் பற்றி அவர் விளக்க வரும்போது, ''சுதந்திர உலகம் சந்தித்த சிக்கல்கள் சங்கடங்களில் இருந்து விடுபட வலிமை மிகுந்த திட்டடம் ஒன்றைநாம் வகுக்க வேண்டும். தொழிநுட்ப அறிவே நமது சிறந்த பொக்கிசம்.அமைதியான உலக மக்களுக்கெல்லாம் இந்த நிதியை நாம் கொடுத்தே ஆகவேண்டும்.

அப்போதுதான் அவர்கள் வாழ்க்கை மலர்ந்து ஆர்வம் எல்லாம் சித்தி பெறும்.''

மேற்படி அமெரிக்க ஜனாதிபதியின் சாராம்சத்தில் நாலாம் அம்சத் திட்டமானது

மக்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து உதவிபெறும் சிறந்த திட்டமாகும். இத் திட்டத்தின்படி அமெரிக்கத் தொழில்நுட்ப நிபுணர்களும், விஞ் ஞானிகளும் ,இதர பலநாட்டின் தொழிலாளர்களுடனும் விஞ்ஞானிகளுடனும் ஒத்துழைப்பதே.!

இவ்வாறான அமெரிக்க ஜனாதிபதியின் கருத்துக்கள் செயலாக்கம் பெற, தென் அமெரிக்கா, ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசிய நாடுகளை ஒழிக்க வந்த கொடிய தொற்று நோய்கள், இயற்கை அநர்த்தங்கள், பாதை சீர்திருத்தம், பொருளாதார ஒத்துழைப்புகள், கல்வி அறிவு முதலானவை ஏற்படுத்தப்பட்டன. ஒருவருக்கொருவர் பரஸ்பர உறவு பேணப்பட்டது. பொது தாபனங்கள் உருவாகின. உலக சகோதரத்துவம் உருவாக வகை செய்யப்பட்டன.

## தமிழர்தம் புனித திருக்குறளே உலக வேதமா?

உலகில் வேதங்கள் அல்லது மறைகள் என வழங்கப்படுபவை

அனைத்திலும் புனித திருக்குறள் மட்டுமே சமயச் சார்பு அற்றது. ஒரு நாட்டிற்கோ ஒரு மொழிக்கோ ஓர் இனத்திற்கோ, ஒரு காலத்திற்கோ என உருவாக்கப்படாதது. உலக மக்கள் யாவருக்கும் பொதுவான, எக்காலத்திற்கும் உரியதாகவும், உலக மக்கள் அனைவரும் ஒரு குலமாக வாழுவதற்கு ஏற்றவகையிலும், உருவாக்கப் பெற்ற ஒப்பற்ற உலகப் பொதுமறை தமிழர்தம் புனித திருக்குறளே ஆகும்.

தமிழிலே தோன்றிய இப்புனித திருக்குறள், வாழ்வு நெறி வகுக்கப்பெற்ற ஒப்பற்ற ஓர் பேரிலக்கியம். அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் (காமத்துப்பால்) என முப்பிரிவு கொண்டது.

அறத்துப்பாலில், இல்லறம், துறவறம் எனும் வாழ்வியல் பொருட்பாலில் அரசியல் அறம் இன்பத்துப்பால் அல்லது காமத்துப்பாலிலே காதல், இன்பவிளக்கம் என்பதாக, அதி அற்புத புனித மறையாக இது தொகுக்கப்பெற்றுள்ளது.

## புனித வேத எண்கள்

தமிழர்தம் புனித வேதம் எனும் திருக்குறள் 1330 மந்திரங்கள் கொண்டவை. இறைவனுக்கு உகந்த புனித அருள் நூலிற்கு ஏற்ற வகையில் குறுகிய வெண்பா வடிவிலே அமையப் பெற்றதே தமிழர்தம் இப்புனித வேதம்.

வடமொழியில் மந்திரம் என வழங்கப்படுவதே தமிழிலே அதி சக்தி வாய்ந்த குறள் வெண்பாக்கள் என வழங்கப்படுகின்றது.

மேற்படி மனிதர் மாண்புடன் வாழ 1330 குறட்பாக்கள் வழி அறம், பொருள், இன்பம், (காமம்) என்னும் மூன்று பெரும் பிரிவுகளாய் இது வகுக்கப்பெற்றது.

வாழ்வியலில் 380 குறள்களும், அரசியலில் 700 குறள்களும், இன்பவியலில் 250 குறள்களும் கொண்ட இது 1330 குறள் வெண்பாக்கள் கொண்ட புனித நூலாகும்.

இதுவே தமிழர் பின்பற்ற வேண்டிய புனித வேதமாகும் தகுதி பெற்றது. உலகின் எண்பத்தாறு மொழியினர் இதனைத் தமிழில் இருந்து பெயர்த்துள்ளனர்.

இது, எக்காலத்திற்கும் பொருந்தக் கூடியது.

இனம், நிறம், மதம், மொழி, ஜாதி கடந்து அனைத்து உலகுமே ஏற்கும் இதனை 'உலகப் பொதுமறை' எனச் சிறப்பித்துக் கூறுவர்.

அத்தகைய தமிழிலே எழுந்த இப் புனித வேதம் இந்த நூல் குறிப்பிட்டவாறு ஐம்பூதங்கள் ஐம்புலன்கள் வழி உலகம் உய்யும் வழிமுறைகளை இனங்காட்டுகின்றது.

ஐம்பூதங்களை கிரேக்கம், சீனம் உள்ளிட்ட பிற நாட்டினர் பயன்படுத்தி வந்த முறைமைக்கு புறம்போக்காக தமிழிலே உருவான இப்புனித நூல் கொண்டிருக்கும் ஐம்பூதம் தமிழர் உள்ளிட்ட இந்திய ஈழ நாட்டினரும் பயன்படுத்தும் முறைமையாகும்.

பூர்விக தமிழருக்கு பெருமை தரும் சங்கத் தமிழ் நூல்களில் சிறப்பு வாயந்த புறநானூறு தரும் பெருஞ்சோற்று உதியன் பெருஞ் சேரலாதன் என்ற சேர மன்னனின் பெருமையினைப் புகழ்ந்துரைக்கும் முரஞ்சயூர் முடிநாகராஜர் எனும் புலவர் அவனது புலன்களை ஐம்பூதமுடன் ஒப்பிடுகின்றார்.

''மண்திணிந்த நிலனும் நிலனேந்திய விசும்பும் விசும்பு தைவரு வளியும் வளித் தலையிய தீயும் எனவரும் வர்ணனையில் நிலம், நீர், காற்று, நெருப்பு எனும் இவற்றுடன் ஆகாயமும் அடங்கும்.

இதனை யாத்த புலவராக மேற்படி சங்கத்தமிழ் நூலிலே முரஞ்சியூர் முடிநாகராயர் எனக் குறிப்பிடப்படுவதால் இவரை பூர்விக நாகர் மரபிலே வந்த தமிழ் புலவர் என இனங்காணலாம். எனவே பூர்விக நாகரிடமிருந்தே தமிழரது வேதம் ஐம்பூத ஐம்புல அறிவை கிரகித்திருக்கலாம். நாகர்கள் தங்கள் எதிரி நாட்டிலே மழை பெய்யாதிருக்க மேகத்தை கட்டிப் போட்ட புராணங்களை வடமொழி பகரும்.

# தமிழர்தம் புனித வேதத்தில் ஐம்பூதங்களும் ஐம்புலன்களும்!

தமிழர்தம் அதி சக்தி வாய்ந்த ஏழு சொற்கள் கொண்ட புனித ஈரடி மந்திரங்களான புனித திருக்குறள் நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகாயம் எனும் ஐம்பூதங்களுடன், உடல், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐந்து புலன்கள் தொடர்பை சீரிய முறையில் பேணும் முறைமை பற்றி அலசுகிறது.

இது ஆதி மனிதன் காட்டுமிராண்டியாய் இயற்கையில் அலைந்து தேடிய நிறைவே மீளவும் அவனது தேறுதலாய் அவன் அமைத்த பகுத்தறிவின் பால் வாழ்வின் தத்துவமாகவோ இறை மந்திரமாகவோ தமிழர்தம் புனித நூலிலே இடம்பிடித்தும் கொண்டுள்ளது.

## ஒன்றே குலம், ஒருவனே தேவன்!

தமிழர்தம் புனித வேதமான திருக்குறள், மனித ஒழுங்கமைப்பான வாழ்வு முறைமையை இயற்கை எனும் பஞ்ச பூத இயக்கத்துடன் உயிர்களின் ஐம்புல ஒருமைப்பாடு சீர்பெறக் காக்கும் வேதமென வகுத்துள்ளது.

ஐம்புலன்களை கட்டுப்பாடாக வைக்குமிடத்து மனித குலம் சீராகும் நிலையை தமிழர் தெய்வ மறை தந்த புனித ஆசான் பின்வருமாறு எடுத்துக் காண்பிப்பதை இனங்காணும்போது இந் நூலாரம்பம் இனங்காட்டிய ஆதி மனித இயற்கை வழிபாட்டுடன் ஐம்புல ஐம்பூத வழிபாடு இணைவதை நோக்கலாம்.

உலகின் புனித ஞானியான ஐயன் திருவள்ளுவர் காட்டும் புனித வேதத்தில் தேடிய முத்துக்களின் ஒரு பிரிவே இந்நூலின் முதல் பாகமென இங்கே இவ்வாறு இடம்பெறுகின்றது.

ஒவ்வொரு தமிழரும் இப் புனித உலக வேதத்தால் தமது அக வேற்றுமை களைந்து ஒருவர் முன் ஒருவர் தோற்றந்தரும் போது புனித திருக்குறளாசான் பெயரால் ஒருவரை ஒருவர் புனிதமுடன் அன்பு, பாச உறவு சேர அரவணைப்போமாக.!

## தமிழர்தம் புனித வேத ஐம்பூத ஐம்புல ஐக்கியம்!

மனிதரின் ஒழுக்க நெறி உலக வாழ்வை நிரப்ப வேண்டும். அவர்களது மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்புலன்கள் ஒழுக்கநெறி பேண வேண்டும். நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் எனும் இயற்கையே ஐம்பூதங்களாய் உயிர்களின் ஐம்புல ஊடுருவலுடன் தொடர்புபட்டு இருப்பதால் நன்மைகள் பிறக்க உலகம் அழிவிலிருந்து ஆக்கம் பெறவேண்டும். அதற்கு உலகம் ஐம்பூத ஐம்புல ஐக்கியத்தில் ஊறவேண்டும். இவ்வாறு புனித திருக்குறள் பாக்கள் காட்டும் உலக வேதம் ஐம்பூத ஐம்புல புனித குறட்பாக்களாய் மலர்ந்து இருப்பவை கீழ்க்கண்டவாறு அதன் பொருள் புரிய இங்கே இவ்வாறு இடம் பெறுகின்றது.

அறம் கூடா ஒழுக்கம் (271)

'வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்'

''மனத்திலே வஞ்சகம் உள்ளவனது பொய்யான நடத்தையைக் கண்டு பஞ்ச பூதங்கள் தம்முள்ளே இகழ்ந்து சிரித்துக்கொள்ளும்.

அறம் கடவுள் வாழ்த்து (6)

'பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடுவாழ்வார்.

ஐம்பொறி வழியாக எழுகின்ற ஐந்து வகை ஆசைகளை அவித்தவனாகக் கொள்ளப்படும் இறைவனது பொய்மை தீர்ந்த நெறியில் நடப்பவர்களே நீடித்த வாழ்வு பெறுவார்கள்.'

பொருள். ஆள்வினை உடைமை (618)

"பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து ஆள்வினை இன்மை பழி.

இயற்கைப் படைப்பிலே புலனியக்கம் இல்லாதிருப்பவர்கள் பழிக்கப்படத் தக்கவரல்லர் புலன்கள் சரியாக இருந்தும் அறிய வேண்டியவற்றை அறிந்து விடாமுயற்சியுடன் செயலைச் செய்யாமையே பழியை உண்டாக்கக் கூடியது.'

அறம். அடக்கமுடமை (126)

ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின் எழுமையும் ஏமாப்பு உடைத்து.

ஐந்து உறுப்புக்களையும் தன்னுள்ளே அடக்கவல்ல ஆமையைப்போல ஐம்பொறிகள் வழி பிறக்கின்ற ஆசைகளை அடக்கி ஆளும் வல்லமை வாய்க்கப்பெற்றவர்கள் பின்னர் தமக்கு வருகின்ற ஏழு பிறப்பிலும் தமது ஆன்மாவுக்குச் சிறப்புச் சேர்ப்பவராகின்றார்கள்.'

அறம். மெய் உணர்தல் (354)

"ஐயுணர்வுணர்வு எய்தியக் கண்ணும் பயம்இன்றே மெய்உணர்வு இல்லாதவர்க்கு"

'ஐந்து புலன்கள் மேல் வீழாது, மனதை அவற்றிலே செல்லவிடாது

அடக்கினாலும் ஒருவர் மெய் அறிவைப் பெறாவிட்டால் அதனால் ஒரு பயனும் இல்லை.'

அறம் நீத்தார் பெருமை (24)

'உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான் வரனென்னும் வைப்பிற்கோர் வித்து'

அறிவு எனப்படும் அங்குசத்தாலே அடக்கி ஐம்பொறிகளையும் நேர்வழியிலே நடத்துகின்றவன்,

மேலான பிறவாமைப்பேறு வாய்ப்பதற்குரிய நல்ல விதை ஆவார்கள்.'

அறம். நீத்தார் பெருமை (27)

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்தின்வகை தெரிவான்கட்கே உலகு. (27)

ஐம்பொறிகளால் கிடைக்கப்பெறுகின்ற ஐம்புலன் கூறுகளை நுட்பமாக அறிந்தவர் எல்லாம் அறிந்தவர் ஆவர்.

அறம். துறவு (343)

அடல்வேண்டும் ஐந்தின் புலத்தை விடவேண்டும் வேண்டிய எல்லாம் ஒருங்கு

'வீடு பேற்றை விரும்புபவன் ஐந்து புலன்களையும் தன் கட்டுக்குள் வைத்து அவை விரும்பும் இன்பத்திற்காக தாம் சேர்த்த பொருள்களையும் ஆசையையும் நீக்குதல் வேண்டும்.'

அறம். நீத்தார் பெருமை (25)

ஐந்தவித்தான் ஆற்றல் அகல் விசும்பு ளார்கோமான் இந்திரனே சாலும் கரி.(25)

'அகன்ற வானத்தவர் பெருந்தலைவனான இந்திரனே ஐம்பொறிகளையும் அவித்தவனது ஆற்றலின் மிகுதிக்கு நல்லதொரு சான்றாக விளங்குவன்.'

அறம். அன்புடைமை( 79)

புறத்து உறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை அகத்துறுப்பு அன்பிலார்க்கு

'ஐம்பொறிகளும் கை முதலிய வினை உறுப்புக்களும் அழகாக இருந்தாலும் உடலின் உள்ளுறுப்பான அன்பு இல்லாதவர்க்கு அதனால் பயன் எதுவுமில்லை.'

அறம். வெஃகாமை(174)

இலம்என்று வெ. .குதல் செய்யார்புலம் வென்ற புன்மைஇல் காட்சி அவர்.

'ஐந்து புலனையும் அடக்கி ஆளும் மாசற்ற அறிவு பெற்றவர், தமது வறுமையை நீக்குவதற்காகவும் பிறர் பொருளை விரும்பமாட்டார்.'

# முடிப்பியம்

'தமிழர்தம் உலக வேதமும் புனித ஞானியும்' எனும் இந்த அறிவியல் ஆன்மிக ஆய்வு மரவுரி தரித்து இலை குழை அணிந்த காட்டுமிராண்டியர் பெற்ற மனிதத் தனம் என்பதாய் ஆரம்பிக்கின்றது. பண்பாடு நாகரிகம் என உட்புகுந்து கொள்கின்றது. அங்கே சுயநலவாய்ப்பட்டு ஆண்டான் அடிமை இனப்போர் மதப்போர் உள்ளக விரிசல்கள் என ஏற்படுத்தி வைக்கின்றது. இயற்கையின் சீற்றத்தால் நிலைகுலைந்து போகின்றது. அவ்வேளை தத்தம் தவறுகள் ஊடாக இந்த உலகம் ஒருங்கிணையும் இனிய நாளுக்காக ஏங்கி நிற்கின்றது.

கி.பி 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழிலே உருவான புனித திருக்குறளை மாமருந்தாகக் கண்டு தத்தம் மொழிகளிலே மொழிபெயர்த்தும் கொள்கின்றது. இவ்வேளை முன்தோன்றிய மூத்த குடிகளான நாம் எமது மூடமை வழிமுறை நீத்து உலகை ஒரு குடும்பமாக்கி அந்த ஆதர்ச உலகிலே (Utopia) பவனி வரும் கனவை நனவாக்க வேண்டும். அதற்காக எங்கள் புனித வேதத்தை உலக வேதமாக்க ஐம்பூத, ஐம்புல ஒருங்கிணைவிற்குள் உட்புகுந்தே முன்மாதிரி ஆக வேண்டும்.

உலக வேதம் படைத்த புனித ஞானியே இறைவன் என உலகம் ஏற்கும் புனித நாள் உருவாக வேண்டும்.

புனித திருக்குறளால் 'ஒன்றே குலம், ஒருவனே தேவன் என தமிழருடன் அனைத்துலகுமே தமது இனம், மதம், மொழி கடந்து உலக உறவு பேணும் அந்தப் புனித நாளை ஏக்கமுடன் எதிர்பார்ப்போமாக.

ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும் வெட்கப்படாதிருந்தார்கள்.

தேவனாகிய கர்த்தர் சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது.

அது ஸ்திரியை நோக்கி "நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ" என்றது. ஸ்திரி சர்ப்பத்தைப் பார்த்து" நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம். ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும், அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார்." என்றாள்.

அப்பொழுது சர்ப்பம் ஸ்திரியை நோக்கி நீங்கள் சாகவே சாவதில்லை. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும், தேவன் அறிவார்." என்றது.

அப்பொழுது ஸ்திரியானவள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது. என்று கண்டு அதன் கனியை பறித்து புசித்து தன் புருசனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான். அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது. அவர்கள் தாங்கள், நிர்வாணிகள் என்று அறிந்து அத்தி இலைகளைத் தைத்து தங்களுக்கு அரைக் கச்சை உண்டு பண்ணினார்கள். (**ஆதியாகமம்:- அதிகாரம் 2- 25, அதிகாரம் 3 1- 7**)

மேற்படி ஆதியாகமம் காட்டும் குறிப்பில் சர்ப்பமாக இடம்பிடித்திருப்பது வரலாற்றிற்கு முற்பட்ட பூர்விக உலகின் நாகர்களது நாகரிக ஆட்சி

அரசிலே மனித ஆடை உற்பத்தி செய்யப்பட்டிருக்கலாம் என்பதையும் உணர்த்துவதாகக் கூற இடமுண்டாகிறது. சிலப்பதிகாரம், பௌத்த மகாவம்சம் முதலான சமண காப்பியங்கள்.பௌத்த மகாவம்சம் நாகர் ஆடைக்கலை பற்றியும் நாக நாடு பற்றியும் குறித்துள்ளது.

நாடோடிகளான ஆரியர்தம் வேதங்களில் கூறப்படும் அவர்களது தலைவனான இந்திரன் கோட்டை கொத்தளங்களுடன் நாகரிகச் சிறப்பாக வாழ்ந்த நாகர்களை அழித்தமை பற்றிய குறிப்பாக 'இந்திரன் நாகத்தின் சிறகினை அரிந்தான்' எனக் குறிப்பிடப்படுகின்றது. அதற்காக, பின்னர் வைதிகவழி நின்று வேத ஆரியரது சுலோகங்களுக்கு விளக்கம் கூறிய ஆசான்களோ நாகம் என்பதை மலை எனப் பொருள்படுத்தி வரலாற்றினை வேறெங்கோ கொண்டு சென்றனர்.

அவ்வாறு 'மலைகளே முப்புரங்களாய்ப் பறந்து மனிதக் குடியிருப்புகளை அழித்தமை கண்டு பொறுக்க முடியாமல் ஆரியர் தலைவனான இந்திரன் கோட்டை கொத்தளங்களுடன் வாழ்ந்த நாகர்களை எரியூட்டி அழித்தான் எனவும் முப்புரங்களை அழித்தவன் என்ற பெயரால் அவனுக்கு புரந்தரன் என்ற பெயர் வழங்கப்படலாயிற்று." என்ற குறிப்பும் உள்ளது. வேதங்களில் ஆரியர்கள் பற்றி வரும் வர்ணனைகள் கிறித்துவ ஆதியாகமம் தோன்றிய கீப்ரு மொழிபேசும் இசுரேலியருடன் ஒப்புமை காணத்தக்கவை.

இவ் வேத ஆரியர் பின்னால் நாகர்களின் பூர்விக நாகரிகம், பண்பாடுகள் மறையாது மீட்பதாக அவர்களை பூர்விக இந்திய சத்திரியர் பரம்பரையில் இருந்து வந்த சமணர்களும், புத்தர்களும் புரிந்துணர்வுடன் அவர்களது வழிமுறைகளையும் ஏற்றலாய் நாகார்சுனர் என ஆகியும், 23-வது தீர்த்தங்கரான பார்சுவநாதர் பத்மாவதி என்ற யக்சினியை ஏற்று நாகத்தை பீட சின்மாக்கியதும் வைதிக சிவனும் கழுத்திலே பாம்பை அணிந்ததும்.மகாவிஷ்ணு பாம்பணையில் பள்ளி கொண்டமை எல்லாமே பூர்விக நாக சாம்ராச்சியத்தின் எச்ச சொச்ச மீட்பினை இனங்காட்டுகின்றது.

ஆபிரிக்க பழங்குடிகளின் புராணத்தில் மனிதன் ஒரு பாம்பை சந்தித்தபோதே மனிதர் ஆடை அணியத் தொடங்கினர். (சமரசபூமி பக்.126)

புறநானூறு எனும் பழந்தமிழ் இலக்கியத்தில், 'ஆய்வேள் என்ற அரசன் நீல நாகத்தின் சட்டையை கல்லால மரத்தின் அடியில் எழுந்தருளி இருந்த கடவுளுக்குக் கொடுத்தான். பந்தன் என்ற வள்ளல் நாக நாட்டில் இருந்து கொணர்ந்த ஒரு போர்வையை ஔவைக்கு வழங்கி அவரை இளமை ஆக்கினான்.

பூர்விக தமிழருடன் தொடர்பான பூர்விக மெக்சிக்கோ மாயக்களின் பெண் தெய்வமான இக்சாலின் தலையிலே நாகம் உள்ளது. இக்சால் நெசவுத் தொழிலையும் கண்டுபிடித்தவள். (சமரசபூமி பக்.126)

பௌத்த பாளி மொழியில் எழுதப் பெற்ற மகாவம்சத்தில் விஜயனின் வருகையின் போது இலங்கையில் வாழ்ந்த இயக்க அரசியான குவேனி ஆடை தைத்துக் கொண்டு இருந்தாள் எனவும் இலங்கையில் இருந்த நாகநாடு கடலிலே 500 யோஜனை தூரம் பரவி இருந்தது எனவும், நாகநாட்டில் இருந்து வரும் பெறுமதி மிக்க ஆடைகள் பற்றிய குறிப்பும் மேற்படி ஈழத்து பௌத்த இதிகாசமான மகாவம்சம் இனங்காட்டுகின்றது.

(2) பெண்ணினத்தின் மானம் அவளது நிருவாணத்தை மறைத்து உடல் மானம் எனும் ஆடை உடுத்தியவனே அவளை மணக்க தகுதியானவன் என்ற நம்பிக்கை பூர்விக வைதிக இந்து மக்களிடையே நின்றிருத்தல் வேண்டும்.

அதற்காக உருவான வடமொழி வைதிக புராணக்கதை ஒன்று வருமாறு.

சிற்பி அழகிய பெண்ணை சிலை வடித்தான். நெசவாளன் அதனை ஆடையால் அலங்கரித்தான். பிராமணன் அதற்கு உயிர் கொடுத்தான். அப்போது உயிர் பெற்று எழுந்த அந்த அழகிய பெண்ணை மணக்க அம் மூவரும் அவளிடம் கேட்டபோது, அப்பெண் தன்னை உருவாக்கிய சிற்பி தந்தைக்குச் சமனானவன் எனவும்,தனக்கு உயிர் தந்த பிராமணன் ஆசானுக்குச் சமனானவன் எனவும், தனது நிர்வாணத்தை மறைத்த நெசவாளனே தன்னை மணக்கத் தகுதியானவன் எனவும், தனது உடல்மானத்தைக் காத்த அந்த நெசவாளியை மணந்து கொண்டாள். என்பதை புராணக்கதைகள் இனங்காட்டுகின்றன. **"(திருவருள் வாசகம், கலாநிதி ஜெ.குமாரசுவாமி சிவபுரம் அறக்கட்டளை வெளியீடு சென்னை பக்.247)**

(3) புண்டாரம் எனும் சமூகம் முன்னர் அரச திறைசேரி காப்பாளராக, கோயில் சொத்துக்களின் காப்பாளராக இருந்து சமூக அந்தஸ்து பெற்றவர்கள். (சமரசபூமி பக்.166)

(04) கிரேக்கத்திலும், உரோமிலும் அந்தந்த தொழில் முறைக்காக கடவுளர்கள் சிருஸ்டிக்கப்பட்டனர். அந்தந்த தொழில் முறைக் கடவுளர் என ஒளி, வேட்டை, தானியம், தோட்டம், ஆடை, கைத்தொழில், கல்வி மருத்துவம், பிள்ளைப் பிரசவம், போர், பாதாளம், தேவர் உலக மன்னர் எனக் கடவுளர் பட்டியல் உள்ளது. (-The book enpsycholopedia 1987 page 13)

கிரேக்க உரோம் குறிப்புகளில் இடம்பெறும் காதல் கடவுள் இந்திய வடமொழியில் இடம்பெறும் மன்மதனை ஒத்தது.

போர்க்கடவுள் இந்திய வடமொழியை ஒத்து செவ்வாய் என்ற பெயரைத்தாங்கி நிற்பதும், தேவர்களின் அரசனாக உரோமர் வியாழனைக் குறிப்பிட அதனை, கிரேக்கம் சீயுஸ் எனக் குறிப்பிடப்படுவதும் கொண்டு அச் சீயுஸ் என்பதை வடமொழியில் பிரகஸ்பதி எனும் குருதேவராகக் குறிப்பிடப்படுவதும் குருபகவான் எனும் பிரகஸ்பதியாக வியாழனை வடமொழி உரைக்க, அதே பொருள்படும் சீயுஸ் எனும் சிவன் தென் நாடெனும் தட்சணத்தில் கல்லால விருட்சத்தின் கீழ் இருந்து தவமியற்றி தெட்சணாமூர்த்தி எனும் தென் நாட்டுக் கடவுள் நாமம் பெற்றவராகவும் கூறப்படுகின்றது. (சமரசபூமி பக்150)

(06) பூர்விக ஆந்திரப் பழங்குடியினரிடம் "பொச்சம்மா, கட்டமையம்மா, பொலிமேரம்மா,எல்லம்மா, மங்களம்மா, மாறம்மா, உப்பளம்மா, சம்மக்கா, சரக்கா முதலான பெண்கடவுளர் வழிபாடியற்றப்பெற்றனர். நோயில்லாமல் மக்களைக் காப்பவர்,பயிர்வளம் பொருளாதாரச் செழிப்புத் தருபவர், நீர்பாசன தெய்வம், விதை விதைத்து கதிர் அறுப்பதில் உதவும் தெய்வம், ஊர்க்காவல் தெய்வம் முதலாக அவர்களது அப்பெண் தெய்வ நம்பிக்கை அப்பூர்விக தெலுங்கரை வழிநடத்தி இருக்கின்றது. (சமரசபூமி பக்.145)

தமிழர்தம் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான தமிழ் பௌத்தர்களின் 'மணிமேகலை'யில், அகத்தியர், 'தங்கள் நாட்டினை முன்னர் ஆட்சி

செய்து பின்னர் காவல் தெய்வமாக இருக்கும் "சம்பாபதி" எனும் பெண் தெய்வத்தை வணங்கும்படி காவரித்தாயைப் பணித்ததாகவும் கலிங்கத்துப் பரணி எனும் பழந்தமிழ் இலக்கியத்தில் 'பிரமன் வகுத்த இந்த உலகமே காளிதேவியின் பழைய கோயில். என இடம் பெற்றிருப்பதும், அக்காளியே இஸ்ரேலியரின் லிலித் என்ற இறைவன் படைப்பு பின்னர் மரண தேவதையாக வழிபடப்பட்டதுடன், தமிழிலே நவகண்டம் கொடுத்தல் என சோழ மன்னர் போரிலே வெற்றி பெற மன்னரின் விசுவாசப் படையினர் தங்கள் வெற்றி வேண்டி தங்கள் சிரசை காளிதேவி சந்நிதியில் அறுத்து தற்கொடை ஆவதை கலிங்கத்துப்பரணி இனங்காட்டும்.

அடிக் கழுத்தின் சிரம் அறுப்பதையும் அவர்களது குறை உடல் காளியைத்துதிப்பதையும் கலிங்கத்துப் பரணி நவவீரர்களை அவ்வாறு இனங்காட்டுகின்றது.

அக்காளிதேவியே இசுரெலியரின் இறைவன் படைத்த லிலித் என்ற மரண தேவதையுடன் ஒப்புமை காணத்தக்கது. (சமரசபூமி பக்.131)

(7) ஆரம்பத்தில் இருந்த சமண மதமும், புத்த மதமும் தமிழினத்தின் கல்வி அறிவை மேம்பாடடையச் செய்தனர். அவர்கள் தமிழுக்காக எழுதிய இலக்கணங்களும், இலக்கியங்களும் தமிழரை உயர்வடையச் செய்தது. தொல்காப்பியமும் சமண முனிவர்களால் செய்யப்பட அதில் பின்னர் இடைச் செருகல்களை வைதிகர் செய்தமை பற்றியும் உரைஞர்கள் தரும் மாறுபட்ட கருத்துகளுடன் ஆய்வினர் தெரிவிப்பர்.

சங்க இலக்கியங்களில் தமிழரிடை இடம் பெற்றிருக்கும் புறப்பாடல் தொகுப்புக்களில் கணியன் பூங்குன்றனார் என்ற புலவர் சமணர் பிரிவைச் சேரந்தவர். அவர் மேற்படி புறநானூற்றில்

"யாதும் ஊரே யாவரும் கேளிர் தீதும் நன்றும் பிறர்தரவாரா." எனத் தொடரும் செய்யுள் அற்புதமாக தமிழர் பின்புலத்தை விளக்கும். அது இந்த பூமியில் இருக்கும் எல்லா ஊர்களும் எமது ஊர்கள்தாம், அங்கே வாழும் எல்லா மக்களும் எமது உறவினர்கள்தாம்" எனப் பொருள் தரும்.

அவ்வாறே புத்த மதம் தமிழரின் உள்ளக விரிசல்களை உள்வாங்கி காப்பியங்கள், அறநூல்கள்வழி தமிழர்தம் சாதியம் நீங்க் வகை செய்திருக்கின்றது.

பௌத்த மத சாம்ராச்சியம் வகுத்த அசோக சக்கரவர்த்தி பொறித்த தமிழ்நாட்டு மன்னர் பற்றிய கல்வெட்டுக்களில் அசோகன், அதிகமான் நெடுமானஞ்சி' என்ற மன்னனை மட்டுமே சிறப்பித்து "சத்திய புத்திரன்" என்று போற்றியுள்ளான்.

அதிகமான் நெடுமானஞ்சி அவைதிக மதங்களை ஆதரித்தனன் என்பதற்கு சமணருக்கு அமைத்துக் கொடுத்த குகை கோயில் முக்கியத்துவம் பெறுகின்றது. இம் மன்னன் அசோகரால் போற்றப்படுவதையிட்டு இவன் ஒரு பௌத்த மன்னனாகவும் ஏற்க இடமுண்டாகிறது.

தமிழ் மூதாட்டி ஔவையாரும் மேற்படி அதிகமானஞ்சியை புகழ்ந்திருப்பது போல பிற மன்னர் புகழை அதிகமாகக் கொள்ளவில்லை எனவும் ஏற்க வேண்டியுள்ளது.

அத்தகைய ஔவை அதிகமானின் பிறந்த தினத்தின்போது இடம்பெற்ற அவை நிகழ்விலே மன்னனை

"வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோன் உயர்வான்" எனப் புகழ்ந்துள்ளார். இவ்வரிகள் பௌத்த பாளிமொழியில் இருந்து இன்றும் பௌத்தர்கள் சர்வோதயம் முதலாக ஒன்றுகூடும் நிறைவான தமது பொது சபை வணக்கமாகும்.
இதன் பாளி மொழி வரிகள், கந்தபுராண ஒப்புமையுடன் நூலிலே இனங்காட்டப் பெற்றிருக்கின்றது.

**(8)** (A history of tamil literature- Prof. avvai S.Doraiswamipillai (saiva literature-p.113),

**(9) (சமரசபூமி பக்.157**
**(10) சமரசபூமி பக்.158)**

(12) சமணர்தம் ஆதிக்கத்தின்போது, மன்னர்களின் முடிசூட்டுவிழா 18-தொழில் குழுமங்கள் புடைசூழ நடந்தேறியது. **(சமரசபூமி பக்.152)**

**'தமிழர்தம் உலகவேதமும் புனிதஞானியும்'**
**எனும் அடியேன் ஆன்மிக அறிவியல் ஆய்வு பாகம் 01,**
**ஐம்பூதம், ஐம்புலன் எனும் புனித திருக்குறள் வேதசாரம்**
**நூலுருப்பெற உழைத்த கலைச் செல்வர்கள் இவர்களே!**

நூலின் அட்டைப்பட கைவண்ண ஓவிய அலங்காரம்
யாழ் மத்திய கல்லூரி ஓவிய ஆசிரியர்
**சித்திரச் சீராளன் டொமினிக் ஜீவா**

அட்டைப்பட ஓவிய கணினி வடிவமைப்பு
**திருமதி நித்தியா கதாதரன், டென்மார்க்**

ஆசியுரை வழங்கிய சீலர்
அறிவுலக மேதையும் அருமை நண்பருமான
**உலகச் செய்தியாளர்** (Tube Tamil) **டென்மார்க்**
**கலைமாணி கி.செ.துரை அவர்கள்.**

நூலுக்கு சிறப்பான விதந்துரை வழங்கியிருப்பவர்
சிந்தனைச் சிற்பியாய் **சி.வை.தாமோதரம்பிள்ளை**
நற்பணி மன்றத்தினை மீளவும் ஈழத்தில் மீட்டுருவாக்கம் செய்து
தமிழுலகை கல்வியுறவால் நெறிப்படுத்தும் பெரியார்
தமிழ்த்திரு சிறுப்பிட்டி **விசுவலிங்கம் பீ.ஏ. அவர்கள்.**

பின் அட்டையில் நூலாசிரியரை அறிமுக உரை செய்தவர்
இலண்டன் கிங்ஸ்ரன். ஒக்ஸ்போட் பல்கலைக்கழக
**பேராசிரியர் டேவிட் நாதன் அவர்கள்.**

நூலினைச் சிறந்த முறையில் அச்சுவாகனம் ஏற்றியவர்கள்
யாழ்ப்பாணம் அன்றா அச்சகத்தின்
உரிமையாளர். தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்
அனைவருக்கும் பலகோடி நன்றிகள்!

**அன்புடன்**
**கலாநிதி.ஜெ.குமாரசுவாமி**
**யாழ்ப்பாணம் 11.11.2019**

Dr. K. Jeyakumar
(Kavivezham [illegible])
41/24, Bharadhi Lane
Chemmani Road
Nayanmarkaddu
Nallur, Jaffna



About this creator...

Jeyakumar Kumaraswamy is a novelist whose thought - provoking writing is based on the findings of his meticulous research. His writings have been heralded for its focus on philosophic and humanitarian themes. He is a talented poet and writes books for children.

A number of his works are being read and studied at universities and schools all around the world. His most recent book, Doctrine of the Tamil Saint, (The universal Veda of Tamils) discusses the importance of all aspects of living and maintain harmony among all religions, and how this could bring the communities of the world one full of virtue, wealth and love. While his work focuses on the words of the Tamil Saint, he hopes and stress how the global communities could be benefitted. His insight that of all religions, the ways of living of the Tamil saint bring all the merits of the religions together is to be appreciated: and it is the fact.

Dr. Jeyakumar Kumaraswamy whose pseudonym is Kavivezham Bharthibalan though born in Nallur, Jaffna, Sri Lanka, he, because of his harmonious ideas, is a global citizen.

Professor SD Nathan
Kingston University and St George's University of London.

ISBN 978-955-7546-0

Maharishi Publication
41/24, Bharathi Lane, Chemmani Road, Nayanmarkaddu, Jaffna, Sri Lanka.